MADRAS GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS
SERIES No. 16.

பாரதம்

ஆதிபருவத் தாதி பருவம்

(வில்லி பாரத அநுபந்தம்)

BHARATAM
ADIPARVAT - TADI PARUVAM

(An Appendix to Villi Bharatham)

EDITED BY
T. CHANDRASEKARAN, M. A. L. T.,
Curator, Government Oriental Manuscripts Library
MADRAS.

Under the orders of the Government of Madras.

1951

Price Rs. 1-10-0

INTRODUCTION

This beautiful work in Tamil is a supplement to the MAHA BHARATAM of Villiputturar. It narrates in a lucid style the stories that were treated very briefly in the main work between the birth of Aruna to Vinata and the story of the King Santanu.

*This work was written at the request of the king Thimma Bhupathi, son of Thirumalai Raya.

There are many persons having the name of THIRUMALAI-RAYA. Of these, it is very difficult to identify that Thirumalai Raya having Thimma Bhupathi as his son. Thirumalai Raya may be a feudatory king of the Emperor of Vijayanagar exercising authority over a portion of the Tamil Districts. Thimma Bhupathi should have succeeded to the position of his father after his death. It is stated that Thimma Bhupathi was born due to the blessing of the God Shiva, the presiding deity of Valikandapuram, a village in the Tiruchirapalli District. Most probably his capital Maduvai also must have been close to this village. It is not possible to identify the place Maduvai. Though it is difficult to fix the date of Thimma Bhupathi, it may be safely stated that he must have flourished towards the end of the 16th Century or the beginning of the 17th Century. Vasucarittiram is another work like this written at his request. This work also is published in this series as No. 17. In appreciation of the warm protection afforded by this king, the poet has praised him indirectly in the work.

The style is similar to that of Kambar and Villiputturar. It is divided into ten chapters and it consists of 566 stanzas. It is also rich in similies and other figures of speech. Elegance and simplicity mark the style of the work. The author approached Kalidasa and Bharavi in the description of natural scenes.

It is a pity that even the name of the author and his parentage have not been mentioned anywhere. Yet from the salutory verses, it is found that the author is a devotee of Lord Shiva. One benedictory verse in praise of Shiva enshrined in a temple at Valikandapuram in this work is similar to a verse in the "Vasu Carittiram" paying homage to the same deity; and this fact makes one doubt whether these two works were written by the same person, namely, Tondaimanthurai Ambalattadum Ayyan, who has given his name in the Vasu-carittiram.

This work is published from a paper manuscript bearing R. No. 1051 of the Triennial Catalogue, (paper $11'' \times 9\frac{3}{4}''$ fol.60 Lines 20 in a page), which was copied in 1934 from the original manuscript belonging to the late Mahamahopadhyaya Dr. U. V. Swaminatha Iyer. In this connection I acknowledge with thanks, the help rendered by the late T.N. Venkatachari, former Senior Pandit of this Library, Sri V. R. Kalyanasundaram and Sri V. S. Krishnan, Pandits of this Library for preparing the press copy and correcting the proof. My thanks are also due to the Solar Works Madras for their prompt and neat execution of the printing of this work.

Govt. Oriental Manuscripts Library,
Triplicane, Madras,
Dated 4-12-1951.

T. Chandrasekharan,
Curator.

முன்னுரை

"ஆதிபருவத் தாதி பருவம்" என்ற இந்நூல் வில்லிபுத்தூரார் பாரதத்துக்கு அநுபந்தமாய் அமைந்துள்ள ஒரு தமிழ்க் காப்பியமாகும். அப்பாரதம் ஆதிபருவத்தில், 'விநதை மகப்பேறு முதல் சந்தனுவின் சரிதம்' வரை சுருக்கமாகக் கூறப்பட்ட பல வரலாறுகளை விரிவாக உணர்த்துகின்றது இந்நூல் என்பதும், திருமலைராயர் குமாரராகிய திம்மபூபதி என்பவரது தூண்டுதலால், இந்நூலாசிரியர் இதனை இயற்றினர் என்பதும் நூலின் தொடக்கத்தில் கூறப்பெற்றுள்ள பாயிரச் செய்யுட்களால் தெரிகின்றன.

அவை:—

பைந்தமிழ் எல்லாம்வல்ல வில்லி
புத்தூரன் பகர்ந்த பாரதத்திற்
சந்தமுறும் ஆதிபரு வத்தின்முதற்
சந்தனுவின் சரிதங் காறும்
புந்திமிகும் புலவோர்மு னென்றுமறி
யாதேனும் புகலு கின்றேன்
எந்தை பெருமான் திருமுடிமேல்
எருக்கலரு மிருக்கு மாபோல். [பாயிரம்: செய்; 4].

பெருமைதிகழ் அமரர்தொழுஞ் சயந்தனைவிண்
ணோரிறைவன் பெற்ற தென்னத்
திருமலைபெற் றருளுமணி பண்டகுல
விளக்காகுந் திம்ம பூபன்
பரிவோடு பாரதத் தாதிபருவத்
தாதிதனைப் பகரு கென்றான்
அருமையெனக் காணுனுஞ் சொல்லுகிறேன்
உமைகுமா னருளைக் கொண்டே. [பாயிரம்: செய்; 3].

என்பனவாம்.

நூல் ஆக்குவித்தார் வரலாறு.

இந் நூலாசிரியர், நூல் ஆக்குவித்தவரைத் "திம்மபூபதி" எனவும், திருமலைராயர் குமாரர் எனவுஞ் சுட்டிக் கூறுகின்றார். இத் திம்மபூபதி "மடுவை" என்ற தலத்தைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அரசு புரிந்து வந்த ஒரு சிற்றரசன் என்பது "மடுவையம்பதித் திம்மபூபதி" என்று இந் நூலாசிரியர் குறிப்பிடுவதால் விளங்குகிறது.

திருமலைராயர் என்று பெயருள்ளவர் பலர் இருந்திருக்கிறார்கள். திம்ம பூபதியைப் புதல்வராயடைந்த திருமலைராயர் இன்னார் என்று அறிவது அரிதா யுள்ளது. திருமலைராயர் விஜயநகர அரசப்பிரதியாகத் தமிழ் நாட்டின் ஒரு பகுதியில் இருந்து அரசு புரிந்திருப்பவராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. தந்தைக்குப் பின் அப்பொறுப்பைத் திம்மபூபதி ஏற்றுக் கொண்டான். வாலி கண்ட புரத்துச் சிவபெருமான் அருளினால் இத் திம்மபூபதி பிறந்தவன். இவ் வாலிகண்டபுரம் திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலுள்ளது. இவ்வள்ளல் வாழ்ந்த மடுவை என்னும் தலமும் அவ்வூருக்கு அருகில்தான் இருந்திருக்க வேண்டும். மடுவை என்ற பெயர் இக்காலத்து எவ்வாறு வழங்கப்படுகிறதோ தெரிய வில்லை. இவ் வள்ளல் வாழ்ந்த காலத்தை வரையறுத்துக் கூற இயலாது. எனினும் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 17-ஆம் நூற்றாண்டின் முற் பகுதியிலோ வாழ்ந்தவனாகக் கொள்ளலாம்.

இவ்வள்ளல் இந்நூலைப் போலவே, தெலுங்கில் உள்ளதாகிய வசு சரித்திரம் என்ற நூலைத் "தொண்டைமாந்துறை அம்பலத்தாடும் அய்யன்" என்பவரைக் கொண்டு தமிழில் இயற்றுவித்தான் என்பதை அந்நூலின் முன்னுரையில் காணலாம்.

இத் திம்மபூபதி பல தமிழ்ப் புலவர்களோடும், தமிழ் நூல்களை ஆராய்ந்து இன்புற்றான். இவ்வரசன் பெருந்தமிழ் வள்ளலாய்த் தமிழ் ஆர்வங் கொண்டு புலவர்களை ஆதரித்ததோடு பண்டைய தமிழ்நாட்டு அரசர்க்கு ஒப்பாகவும் விளங்கினான் என்றுந் தெரிகின்றது. இந்நூலாசிரியர், இவ்வரசனை, இந்நூலுள் பலவிடத்தும், கம்பர் இராமாயணத்தில் சடையப்ப வள்ளலைப் புகழ்ந்தது போலவும், வில்லிபுத்தூரார் தம்மை யாதரித்த கொங்கர்குலபதி ஆட்கொண்டானைப் போற்றியது போலும் வாயார வாழ்த்தியிருக்கின்றார். அங்ஙனம் இந்நூலுள் கண்ட சில பகுதிகள் வருமாறு:—

"புலனுடைத் திம்ம பூபன் புகழுருக் கொண்ட தேபோல்"
[விந. சரு. 14]

"பொன்பதி மடுவைத் திம்ம பூபதி கல்வி மேருத்
தன்பல கிளையுந் தானுந் தழைத்துவாழ் வுறுதல் போல"
[விந. சருக். 62]

"மடுவை யம்பதித் திம்மையன் வந்தடைந்
திடுமெ லோரையுந் தாங்குத லென்னவே" [சாத். சரு. 8]

"மடுவை யம்பதித் திம்மையன் றனையோர் மலைப்ப
வுடைகு லைந்திளைத் தோடிய பகைஞரை யொக்கும்"
[துஷ். சருக். 16.]

நூற் பகுப்பு

இந்நூல் பத்துச் சருக்கங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. 566 செய்யுட் களைக் கொண்டது. முதலில் உள்ள முகவுரைச் சருக்கம் என்பது வில்லிபுத் தூரார் குமாரர் வரந்தருவார் என்பவரால் பாடப்பெற்றது.

நூலின் சிறப்பியல்புகள்

இந்நூற் செய்யுட்கள், கம்பர், வில்லிபுத்தூரார் ஆகியோரது செய்யுட்களைப் போன்று சுவை மிகுந்து இன்னிசையோடு அமைந்துள்ளன. இதனுள் உவமை உருவகம் முதலிய பொருளணிகள், தெளிவு மென்மை முதலான சொல்லணிகள், காட்சி ஐயம் முதலிய அகப்பொருள் துறைகள் ஆகிய இவ்வாறுன கவியலங்காரங்கள் அனைத்தும் நிரம்பியுள்ளன. இவற்றில், தெளிவு மென்மை என்னும் சொல்லணிகள் இக்காவியத்துக்கென்றே தோன்றின என்று கூறுவது பொருந்தும். இந்நூலாசிரியர், அதிமதுர கவியாக இருந்து, பொருள் வருணனைகளில் "காளிதாசர், பாரவி" முதலிய கவிகளைப் பின்பற்றிச் சுவை மிகும்படி விசித்திரமாக வருணித்துள்ளார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த இந்நூலுக்குக் குறையாக ஒன்றைக்குறிப்பது என்றால், அது, இந்நூலாசிரியர் தமது இயற்பெயரைச் சுட்டிக் கூறாததேயாகும். ஒருகால், ஆசிரியர் கூறிவைத்தும், ஏட்டினைப் பாதுகாத்தவரது பிழையால், அது காணப்படாது மறைந்து விட்டதோ என்றுந் தோன்றுகிறது. எங்ஙனமாயினும், நூலை, நூலாசிரியரோடு ஒருங்கு சேர்த்து அநுபவிக்க முடியாமல் இருப்பது வருந்துவதற்கு உரியதே.

நூலில் காணுஞ் சில சிறந்த பகுதிகள்

இவ்வருமையான நூலுள், இறுதியான மூன்று சருக்கங்களும் மிகவும் உருக்கம் வாய்ந்தவை. யயாதிச் சருக்கத்தில், சர்மிஷ்டை, யென்னும் காதல் நாயகி, தன் மனத்துயரை நீக்கித் தன்னை மணக்கும்படி யயாதியை வேண்டுவது பற்றிக் கூறுஞ் செய்யுட்கள் உள்ளத்தை உருக்குவன[1].

இப்பகுதியும், இதற்கு முன்பின்னுள்ள பகுதிகளும் உண்மையான இல்லற தருமத்தினை நம்போல்வார்க்கு எடுத்துக் காட்டுவதோடு, சிருங்காரச் சுவையின் உச்சநிலையைப் படம்பிடித்துக் காட்டுவனபோல் அமைந்துள்ளன.

துஷ்யந்தன் சருக்கத்தில் சகுந்தலை துஷ்யந்தனிடம் சென்று, புதல்வன் பாதனை அவன் முன்பு நிறுத்திக்கூறுகின்ற சொற்களுக்கு அரசன் மறுமொழி உரைக்கும் செய்தியை அறிவிக்கின்ற பாடல்களின் சுவைகள் மிகவும் வியக்கத் தக்கனவாம்[2].

சந்தனுச் சருக்கத்தில், சந்தனு கங்காதேவி ஆகிய காதலர்களின் சந்திப்பைக் கூறும் இடத்தில் அகப்பொருள் துறைகள் பலவும் அமைந்து விளங்குவதைக் காணலாம். மற்றும், காங்கேயர்க்கும் பிதா சந்தனுவுக்கும் நிகழ்ந்த போர் வருணனை, பரசுராமர்க்கும் சீடராகிய வீடுமர்க்கும் நிகழ்ந்த போர் வருணனை முதலியனவும் மிகவும் சிறப்புடன் கூடியவையாம்.

---

1. யயா. சருக். செய் 43-47 காண்க.
2. துஷ். சருக். செய். 66-68,70 காண்க.

இந்நூலில், பலவிடத்தும் காந்தருவ மணமே சிறப்பாக வருணிக்கப் பட்டுள்ளது. இதனையே தமிழ் இலக்கிய நூல்களிலும் இலக்கண நூல்களிலும் "களவு மணம்" என்ற பெயரால் புலவர்கள் சிறப்பித்துள்ளனர்.. இம் மணமே ஆதிகாலந் தொடங்கித் தமிழ் மக்கள் பலராலும் கைக்கொள்ளப்பட்டு வந்த தாகத் தெரிகிறது.

நூலாசிரியர் மதம்

இந்நூலின் தொடக்கத்தில் காணும், "சீர்வளர்" என்ற முதற்குறிப்பைக் கொண்ட செய்யுளை நோக்கும்பொழுது, இந்நூலாசிரியர் சைவமதம் மேற்கொண்டு இருந்தவர் என்பது நன்கு விளங்கும்.

நிற்க, இச்செய்யுளைப் போலவே, முன்னர்க் கூறிய வசுசரித்திரம் என்ற நூலிலும், ஆசிரியர் திருவாலிகண்ட புரத்துப் பரமசிவனையும் ஏனையோரையும் வணங்கி நூல் தொடங்குகின்றார். வசு சரித்திரத்தில் காணப்படும் "தலைமீது பிறையாரம்" "நீர் கொண்ட முகில்வண்ணன்" என்று தொடங்கும் செய்யுட்களில் அந்நூலாசிரியர்க்கு வாலிகண்டபுரத்துச் சிவபெருமானிடம் இருந்த விசேட பக்தி விளங்குகின்றது. இரு நூல்க–ளிலும் கூறப்பட்டுள்ள, வாலிகண்டபுரத்துச் சிவபெருமானைப் பற்றிய தோத்திரங்களைப் படிப்பவர்க்கு, ஆதிபருவத் தாதிபருவம், வசுசரித்திரம் என்ற இரு நூல்களையும், "தொண்டைமாந்துறை அம்பலத்தாடும் அய்யன்" அவர்களே இயற்றியிருப்பாரோ என்ற ஐயம் தோன்றும். தக்க வேறு ஆதாரம் இல்லையாதலின் உண்மை தெளியக் கூடவில்லை.

முடிவுரை

இது, இந்நூல்நிலைய மூவருடக் காட்லாக்கு R. 1051-ஆம் எண்ணின் கீழ் வருணிக்கப் பட்டுள்ள பிரதியிலிருந்து பெயர்த்து எழுதப்பட்டு அச்சிடப் பட்டுள்ளது. அப்பிரதி, மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்களிடமிருந்த பிரதியிலிருந்து 1934-ஆம் ஆண்டு பெயர்த்து எழுதி வைக்கப்பட்டதாகும்.

இதனை மூலப் பிரதியிலிருந்து பெயர்த்து எழுதி, அச்சிடுவதற்கு உரிய முறையில் திருத்தஞ் செய்து தந்த, இந்நூல் நிலைய பண்டிதர்கள், காலஞ் சென்ற T. N. வேங்கடாசாரியார், ஸ்ரீ. V. R. கல்யாணசுந்தரம் ஸ்ரீ V. S. கிருஷ்ணன் ஆகியோர்க்கு எனது நன்றி உரியதாம்.

4-12-51
சென்னை

தி. சந்திரசேகரன்,

சருக்க வட்டவணை

தொடர் எண்	பெயர்	பக்கம்
	பாயிரம்	1
1.	முகனுரைச் சருக்கம்	3
2.	வினதைச் சருக்கம்	7
3.	சரத்காரன் சருக்கம்	17
4.	சருப்ப யாகச் சருக்கம்	22
5.	கதைச் சுருக்கச் சருக்கம்	31
6.	வேத வியாசர் சருக்கம்	38
7.	சகவுற்பத்திச் சருக்கம்	43
8.	யயாதிச் சருக்கம்	52
9.	துஷ்யந்தன் சருக்கம்	66
10.	சந்தனுச் சருக்கம்	80

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	11	பைந்தமி	பைந்தமி
3	1	சக்கம்	சருக்கம்
8	1	பருவம	பருவம்
12	1	,,	,,
16	13	வேந்தன	வேந்தன்
23	1	சருபப	சருப்ப
24	3	விரும	விராமன்
27	1	யாக	யாகச்
29	1	யாகக்	யாகச்
30	12	றனந்தமாய	றனந்தமாய்
57	7	அப்பொழுதி	அப்பொழுதி
71	1	துஷ்யந்தன	துஷ்யந்தன்

Printed by Solar Works, Madras-1.

ஸ்ரீ:

கடவுள் துணை

பாரதம்

ஆதிபருவத் தாதிபருவம்

கடவுள் வாழ்த்து

வில்லிபுத்தூரார் பாடியது

*நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் 'மாபார தஞ்சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக வங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக வெழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ. (1)

தமிழ்த்தாய் வாழ்த்து

வரந்தருவார் பாடியது

*பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே துயின்ற பாவை மருங்கிலே வளரு கின்றாள். (2)

விநாயகர் வணக்கம்

வெள்ளை வாரணப்
பிள்ளை யார்பதம்,
உள்ள மாமனக்,
கள்ள மாறுமே. (3)

துதி கவிகள்

சீர்வளர்'வாலி கண்ட புரத்தரன்' செய்ய தாளும்
பேர்வள ரமலன் பங்கிற் 'பெரியநா யகி'பொற் றாளும்
ஏர்வள ரவர்க ளீன்ற பிள்ளைக ளிருவர் தாளும்
நார்வள ருளத்தி ருத்தி நாடொறும் பணிதற் செய்வாம். (1)

---

* இந்நட்சத்திரக் குறியீடு இட்ட செய்யுட்கள் முப்பதும் "வில்லிபாரத அச்சுப்" பிரதியிற் காணப் படுகின்றன.

இடத்தினோர் கொம்பு சேரு மொருத்தன்முன் னின்றெ டுத்த
துடைக்க(ண்)ணோர் கொம்பு சேரு மொருத்தலைத் தொழுதற் செய்வாம்
கடைப்பிடி மழுங்க லின்றி யிளமையே கலந்த கூர்மை
விடுத்திடாப் பனுவற் கொம்பென் னுவினின் மேவ வென்றே. (2)

நூலியற்றக் காரணம்

பெருமைதிக ழமரர்தொழுஞ் 'சயந்தனை'யின் னோரிறைவன் பெற்ற (தென்னத்
'திருமலை'பெற் றருளுமணி பண்டகுல விளக்காகுந் திம்ம பூபன்'
பரிவோடு "பாரதத் தாதிபருவத் தாதிதனைப்" பகரு கென்றான்:
அருமையெனக் காணுஞ் சொல்கின்றே னுமைகுமா னருளைக் கொண்டே. (3)

பைந்தமி ழெல்லாம் வல்ல 'வில்லிபுத்தூரன் பகர்ந்த பாரதத்திற்
சந்தமுறு "மாதிபரு வத்தின்முதற் சந்தனுவின் சரிதங்" காறும்
புந்திமிகும் புலவோர்முன் னென்றுமறி யாதேனும் புகலுகின்றேன்
எந்தைபெரு மான்பரமன் றிருமுடியி னெருக்கலரு மிருக்குமாபோல் (4)

தற்சிறப்புப் பாயிரம் – வில்லிபுத்தூரார் பாடியவை:

*ஆக்கு மாறய னுமுத லாக்கிய [வ்] வுலகங்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னுமவை வீய்ந்தநாள் மீளப்
பூக்கு மாமுத லாமவன் பொன்னடி போற்றி. (5)

*ஏழ்பெ ருங்கடன் மானில மெங்குநல் லறமே
சூழ்க ! வண்டமிழ் ஓங்குக ! தேங்குக ! சுருதி
வீழ்க! மைப்புயல் விளங்குக! வளங்கெழு மனு நூல்
வாழ்க! வன்புடை யடியவர் மன்னுமா தவமே. (6)

*கன்ன பாகமெய் களிப்பதோ ரளப்பிறெல் கதைமுன்.
சொன்ன பாவலன் றுகளறு சுகன்றிருத் தாதை
யன்ன பாரதந் தன்னையோ ரறிவிலே னுரைப்ப
தென்ன பாவமற் றென்னையின் றென்சொலா துலகே. (7)

*மண்ணி லாரண நிகரென 'வியாதனார்' வகுத்த
வெண்ணி லாநெடுங் காதையை யானறிந் தியம்பல்
விண்ணி லாதவன் விளங்குநீ டெல்லையை யூமன்
கண்ணி லாதவன் காணலுங் காட்டலுங் கடுக்கும். (8)

*முன்சொ லாகிய சொல்லெலா முழுதுணர் முனிவன்
றன்சொ லாகிய மாப்பெருங் காப்பியந் தன்னைத்
தென்சொ லாலுரை செய்தனன் செஞ்சுவை யில்லாப்
புன்சொ லாயினும் பொறுத்தருள் புரிவரே புலவோர். (9)

*முன்னு மாமறை முனிவருந் தேவரும் பலரும்
பன்னு மாமொழி 'பாரதப்' பெருமையும் பாரேன்
மன்னு 'மாதவன் சரிதமும்' இடையிடை வழங்கும்
என்னு மாசையா லியானுமீ தியம்புதற் கிசைந்தேன். (10)

பாயிரம் முற்றும்.

1 முகனி[னு]ரைச்சருக்கம்

வரந்தருவார் பாடியது

*அகத்தியன் பயந்த செஞ்சொ லாரணங் கம்பு யத்தான்
முகத்தினில் வாழு மிந்த மொய்குழ லருளி னாலே
பகைத்தெதிர் பொருத தெய்வப் பாரதக் கதையை முன்னீ[ங்நீ]ர்ச்
செகத்தினில் விருத்தப் பாவாய்ச் செய்தனன் செய்த தொன்றே. (1)

*தேடினர் யாவ ரேகொ லெழுவகை யானுஞ் சீர்த்தி
நீடினர் அவரே யென்பர் நீணிலத் துயர்ந்த மாந்தர்
பாடினர் யாவர் யாவர் பாடுவித் தார்க ளென்று
நாடினர் தெரியும் வண்ணம்' நாவினால் நவில லுற்றேன். (2)

வேறு

*நாணிரைத் தனேக தாரகா கணமா
நவமணி யுடனவை விதங்கொள்
கோணிரைத் திரேழ் புவனமும் வலஞ்செய்
கொற்றநே மியின்வரு கொண்டல்
வாணிரைத் ததிர விடுப்பபோன் மின்னி
வான்முக டுறநெடும் பனிக்குத்
தாணிரைத் தன'போ னந்திமால் வரையின்

சூழலிற் றுரைகொண் டதுவே. (3)

*வம்பறு மலருஞ் செம்பொனு மணியு
மருங்கெலா நெருங்குமக் குன்றி
னும்பரு டெழப்பா ராவுநின் றோங்கி
யுள்ளுறத் துள்ளிவீ ழருவி

யம்புரா சியைமான் மந்தரஞ் சுழற்றி
யமுதெழக் கடைந்தநா ளதற்குத்
தம்பமா மதியை யதனுடன் பெயர்த்துச்
சாற்றிவைத் தென்னலாந் தகைத்தே. (4)

*வெண்ணையே கமழும் பவளவாய் விமலன்
மெய்யெனக் கருகிமேல் வியலாள்
கண்ணையே யனைய கருங்கடன் முகந்து
ககனமுந் திசைகளும் விழுங்கிப்
பண்ணையே பழன நாதரின் திருமுனைப்
பாடிநா டனைத்தையு மொருத்தன்
பெண்ணையே கொண்டு போகமுய்த் திடுமோர்
புயலெனும் பெயருடைப் பெரியோன். (5)

*தொடுத்தநாண் மலர்வேய்ந் தகிலளைந் துந்திச்
சுழிவயி னிலங்கமெய்த் தனங்க
ளொடுத்துமேல் வீசி மணிமருங் கலைய
வினங்கொள்வண் டொலிசிலம் பிரங்க
வடுத்தநீர் சுரத் மகளிரிற் றடங்க
ணிறஞ்சிவப் புறக்கரை யழிந்து
படுத்தபே ரணைப்போர் புரிந்ததா லந்தப்
பண்ணையங் கானற்சூழ் பெண்ணை. (6)

*அவ்வைபா டலுக்கு நறுநெய்பால் பருகி
யருந்தமி ழறிவினுற் சிறந்து
பவ்வநீ ராடைத் தாணிமான் மார்பிற்
பயிலுமுத் தரீயமும் போன்று
மொய்வராற் கெண்டை வாளைசேன் மலங்கு
முதலிய சனமெதிர் கொள்ளத்
தெய்வமா நதிநீர் பாக்குநா டந்தத்
திருமுனைப் பாடிநன் னாடே. (7)

*பாவருந் தமிழாற் பெயர்பெறும் பனுவற்
பாவலர் பாதிநள் ளிரவின்
'மூவரு' நெருக்கி மொழிவிளக் கேற்றி
'முகுந்தனைத்' தொழுதநன் னாடு
தேவரு மறையு மின்னமுங் காணச
'செஞ்சடைக் கடவுளைப்' பாடி
யாவரு மதித்தோர் மூவரி லிருவர்'
பிறந்தநா டிந்தநன் னாடே. (8)

வேறு

*அந்தத் திருநாட் டந்தநதி யமுதம் பெருகி யிருகரையுஞ்
சந்தத் துடன்கா ரகிற்கமழத் தட்கா வகஞ்சூழ் தடநிறைத்துக்
கந்தக் குவளை மேய்பகட்டின் காலா னெதிர்ந்து கதிர்முத்தஞ்
சிந்தச் சிந்தக் கோழு'முளைக்கு' முன்னே ருழவுஞ் செய்சங்கம். (9)

*கொழுநீர் மழவுண் கடைசியர்தங் குழைதோய் விழியி னெழுநிழலைக்
கழுநீர் மலரென் றொருபகலுங் காலான் மயங்கிக் களைந்துகைப்பார்
முழுநீ ருற்ற தமதுநிழன் முழுதுங் கொண்டு தொழுதிறைஞ்சி
செழுநீ ரரமங் கையரென்றுந் திகைப்பார் நகைப்பார் செறுவெங்கும். (10)

*கரும்புங் கமுகுந் தலைதெரியாக் கழனிச் செந்நெற் களையாகி
யரும்புங் குவளை நறுமலர்த்தே னூறு மெங்குஞ் சேருக்க
விரும்புஞ் சுருதி யிசைகேட்டு வேலைக் கழிக்கா னலங்கைதை
சுரும்புந் தும்பி களுமருந்த மாறு தென்றுஞ் சோறிடுமால். (11)

வேறு

*கம்பலைத் துழனிச் சேனைக் காவலர்க் காங்க ணீக்கிப்
பைம்புலத் துழுநர் தங்கள் பலவகை விளைவு மீட்டி
ஐம்புலத் தவர்க்கு மீந்தாங் கறத்தினை வளர்த்த லாலே
செம்புலக் கிழத்திக் காவி யானதச் செல்வ நாடே. (12)

வேறு

*எண்ணு மாகட லேழுமன் றொருகட லாகப்
பெண்ணை மாநதி நறுநெய்பாற் பெருகுமப் பழனப்
பண்ணை நீள்வயல் சூழுமப் பழனநன் னாட்டில்
வண்ண நான்கினு முயர்ந்துளோ னொருமுனி வந்தான். (13)

*ஐந்து பாவுடை நால்வகை கவிக்கதி பதியாய்
வந்து வட்டமா மணியினன் மணிமுடி புனைந்து
பைந்து ழாய்முடிப் பரமனைப் பயில்கவித் துறையஞ்
சிந்தை யான்மகிழ்ந் தன்பர்தந் திருவுளம் பெற்றான். (14)

*தென்னர் சேரலர் செம்பியர் எனப்பெயர் சிறந்த
மன்னர் மூவரும் வழங்கிய வரிசையா லுயர்ந்தோன்
முன்ன ரெண்ணிய முத்தமிழ்ப் பாவல ரெவரும்
பின்னர் வந்தொரு வடிவுகொண் டனரெனப் பிறந்தோன் (15)

*‘தார காபணன்’ வண்டலைத் தண்டலைச் சனியூர்
வீர ராகவ ன’ருட்பெறும் ‘வில்லிபுத் தூர’
னார ராமுடி மண்மிசை யுயர்புகழ் நிறுத்தித்
‘தீர காகளம்’ பெறுதலின் யாரினுஞ் சிறந்தோன். (16)

வேறு

*எங்குமிவ னிசைபரப்பி வருநாளில்
யாமுரைத்த விந்த நாட்டிற்
‘கோங்கர்குல வதிபதியாட் கொண்டான்’என்
றொருவண்மைக் குரிசிற் றோன்றி
வெங்கலியின் மூழ்காமன் கருநடப்பேர்
வெள்ளத்தில் வீழாமல் நான்காஞ்
சங்கமென ‘முச்சங்கத் தண்டமிழ்நூல்’
கலங்காமற் றலைகண் டானே. (17)

*மற்றவனிப் புவியாளும் வளவனுக்கு
முடிகவிழ்த்தும் வழுதித் தெவ்வைச்
செற்றவனுக் கவனியெல்லாஞ் செங்கோன்மை
நிலையிட்டுஞ் செல்வ மெல்லாம்
கற்றவருக் கிருகையுடைக் கற்பகம்போ
லினிதளித்துங் கமல மாதுங்
கொற்றவையும் மனங்களிப்பத் தன்னாமம்
மேருவினுங் கோட்டி னானே. (18)

*தென்னாட்டில் வடநாட்டிற் குடநாட்டிற்
குணநாட்டிற் றெவ்வ ரோடக்
கன்னாட்டிற் றமர்பொருதுங் கங்கைநீ
ரு[ட்]டி[டு]வித்துக் கண்டன் வேங்கை
எந்நாட்டுக் கொற்றமெல்லாம் பெற்றபுக
ழிப்புவியில் யாவர் பெற்றார்
நன்னாட்டுக் கொற்றமெல்லா மிவன்புகழோ
டவதரித்து நண்ணிற் றன்றே. (19)

*ஆற்றியவிற் செல்வத்தால் ‘அளகையை’ [வென்]
றருங்கவினா லமர ரூரை
மாற்றியபொற் றடமதில்சூழ் ‘வை[வ]க்கை’யென்னு
நன்னகரி மருவு ‘பாகை’

தோற்றியவத் 'கோரங்கர்பிரான்' (சூக)[சூரர்] முடி
நாட்கொண்டான் சுற்றத் தோடு
போற்றியவிப் புவிமுழுது மன்றியும்பர்
மொழிகொண்டே புரந்தா னம்மா. (20)

*பிறந்துய்யக் கொண்டானிப் பேருலகிற்
பெருவாழ்வு கூறு நாளில்
நிறைந்தபுகழ் 'சனிநல்லூர்' வில்லிபுத்து
ரனை'நோக்கி நீரு நாளும்
பிறந்ததிசைக் கிசைநிற்கப் 'பாரதமாம்'
பெருங்கதையைப் பெரியோர் தங்கள்
சிறந்தசெவிக் கமுதமெனத் 'தமிழ்ப்பாடல்
விருத்தத்தால்' செய்க வென்றான். (21)

*இருக்காதி மறைமொழிந்தான் இயம்பியவிப்
பெருங்கதையை யாருங் கேட்கச்
சுருக்காகப் புராணமுறை சொல்லுகவென்
றவினவனுஞ் சொல்ல லுற்றான்
பெருக்கான முதலாய பெருங்குலத்தோ
ரிக்கதையின் பெற்றி கேட்பிற்
செருக்காக வவன்மைந்தன் 'வரந்தருவான்'
இப்பதிகஞ் செப்பி னானே. (22)

முகவுரைச் சருக்கம் முற்றும்

பாயிரம் உட்படத் திருவிருத்தம். 32

—:o:—

நூல்

2. வினதைச்சருக்கம்

திருவனைய'வினதை'யழற் காந்தியுமுன்
னதவடிவுந் திகழ மைந்தர்
தருகவென வும்புரையிற் 'கத்துரு'வா
யிர்மைந்தர் தருக வென்று(ங்)

கருதியிருங் 'காசிபனை' வேண்டிநெடுந்
தவம்புரிந்து கணிப்பில் காலம்
அருள்சுரந்த வாறளித்தான் இருவருங்கர்ப்
பந்தரித்தா ரகங்க ளித்து. (1)

'கத்துரு'முட் டைகளீன்று நெய்க்குடத்தில்
வைத்திருந்து காக்குங் காலை
யத்தலையஞ் ஞூறுண்டு சென்றதற்பின்
சேடனுட னனந்த னீலன்
வித்தகவா சுகியயிரா வதனேதக்
ககன்சபலன் விடகார்க் கோடன்
கொத்துதனஞ் செயன்சுமனோ கனெலாபுத்தி
ரன்,முதலோர் குழுமி வந்தார். (2)

எழில்'வினதை' யதுகண்டு பொறுமையினாற்
றுனீன்ற விரண்டி லொன்றை
விழைவுறுமைஞ் ஞூறுண்டு சென்றதற்பி
னுடைத்தனளால் விளங்க ரைக்கீழ்
தழுவுறுப்பில் லாதவனாய் 'அனூரன்'எனப்
பிறந்தனன்அத் தனிமா மைந்தன்
முழுதுமுறுப் புகணிறையா முனமண்டந்
தனையுடைத்தாய் மூடத் தாளே!. (3)

அதனாலைஞ் ஞூறுண்டு 'பாற்றுண்டிக்
கத்துருவுக்' கடிமை யாகிப்
பிதிராமற் றிரிவையுறு மண்டத்தை
யாயிரமாம் பிறவி லாண்டு
சதிரோடுங் காத்தனையே லதில்வருவோ
னுன்சாபந் தன்னைத் தீர்ப்பான்
சிதையாத வலியனென வுரைத்தேகிக்
'கதிரவன்றேர்ப் பா'க னானான். (4)

அப்படியே 'வினதை'யிரண் டாமண்டந்
தனைப்புரந்தாள் அக்கா லத்தின்
மைப்படிவந் தவுணர்களும் அண்டருந்தங்
களுக்'கமுதம்' வருதல் வேண்டிச்
செப்பரு'மே ருவி'ன்றலையின் முத்தேவ
ருறைபொழுது சேர்ந்து கூடி
யொப்பினெடு மொழிந்தளவின் மாலயன்மந்
தாகிரியை யுன்னி னாரால். (5)

'பன்னரு' மந் தரகிரியைக் கொடுவாவென்
றனந்தனோடு பகர வேகி
நன்மைதிகழ் பதினோரா யிரமுயாம
யோசனையே நண்ணு மந்த
வன்மலையைக் கொடுவரலும் 'மத்தா'க்கி
யதன்கீழோர் வலிய 'வாமை'
தன்மையொடு 'தாங்கவமைத் தருங்கயிறாய்
'வாசுகியைச்' சாரச் செய்தார். (6)

தலைப்புறத்தி லவுணர்களுங் கடைப்புறத்தில்
வானவருந் தமிற்பி டித்துக்
கலக்கிநெடும் பாற்கடலைக் கடைபொழுது
விடமெழுதற் கண்டெல் லோரும்
நிலைக்கவருந் தினருட னமுதமயி
ராவதமே நெடுவெண் கற்கி
இலக்குமிதன் வந்தரியேர் கவுத்துவமா
தியவெல்லா மெழுந்த மாதோ. (7)

திருவினொடுங் கவுத்துவத்தை யரிதரித்தான்
அமுதத்தைப் படியி லாண்மை
உருத்துச்சைச் சிரவமென்னும் பரியயிரா
வதமிமையோர் பதிக்க ளித்தான்
விரியவுணர் கொளக்கனன்று 'மோகினி'யாய்
அவுணர்தமை மிகம யக்கிச்
சுரர்களுக்கீந் தனன்நெடுமா லமுதமுணும்
பந்தியிலோர் 'சோர ராகு'. (8)

வானவர்த முருக்கொண்டுற் றமுதமுணுங்
கான்'மதியும்' வர'வெய் யோனுந்'
'தானவர்கா லனுக்'குரைத் தார்அமுது
வயிற்றடைமுன் 'சக்க ரங்'கொண்
டினமுறு மவன்றலைகொய் திடலுமுடற்
படியில்விழுந் திறந்த தம்மா
வானசுதை தலையுறலா லுயிர்பெற்றெ
ழுந்[த]துமற் றமரர் காண. (9)

அன்றமுதன் மதிகதிர்க்கு மிராகுவ்'க்கும்
பகையான தடங்கிற் றில்லை
நின்றவசு ரருஞ்சுரரும் போர்செய்ய[ச்]
'சுரரிடத்து நேய மானன்'
கொன்றுவரக் கண்டவுணர் பாதலத்திற்
புகுந்தொளித்தார் 'குலிச பாணி'
யொன்றுமிடத் திருக்கிளரா ரமுதத்தை
யவரவர்(தாங்)தம் முறையிற் போனார். (10)

நிறையமுதி னொடுவந்த வரிபரிவா
ரிதிக்கரையி னின்ற தோர்நாட்
சிறுகிடை'கத் துருவினதை' யிருவருமக்
'கடற்கரை'யின் சிறப்புக் காண்பான்
குறுகினர்வெண் மணற்குன்றத் தேறினர்கூங்
குயிலினொடு கூவி நின்றார்
நிறைகமழ்புன் னையம்பொ தும்பர்க் கிளியினொடு
குதலைமொழி நவிற்றல் செய்தார். (11)

ஒழுகொளிசேந் துகிர்க்கோடிகள் பழுத்திடினன்
றுகுமென்ன வொருத்தி சொன்னாள்
விழுமியவக் கொடிபழுத்தா லுன்னிதழ்க்கொப்
பெனவொருத்தி வியந்து சொன்னாள்
கழியினுநா ணீலங்க (ளை)டமைக்கொய்து
கொய்தெறிந்தாள் கடிதொ ருத்தி
அழகியவேள் கணைகொடிய தென்றேகொய்
ததனையெறிந் தாயென்றான் மற்றொருத்தி. (12

உன்னகைக்குத் தோற்றொளித்த தாளத்தை
யுன்கண்ணோ டுறவு கொள்வான்
மன்னுகட லுந்தியிடற் கண்டனைகொ
லெனவொருத்தி மகிழ்ந்து ரைத்தாள்
அன்னசெய லன்றவையுன் னகையினெழி
லிரப்பான்வந் தடைந்த தாகும்
என்னவுரைத் தனளொருத்தி யங்குற்றோர்
உளத்தெர்டுகண் ணின்பங் கூர. (13

வேறு

அலைபொரு வேலை வேலை யணியெலா நோக்கி நோக்கி
புலவியே செல்லும் போதி னொளிவுற்ற மடுவுண் மேவும்
புலனுடைத் 'திம்ம பூபன்' புகழுருக் கொண்ட தேபோல்
இலகி 'யா கண்ட லன்'றன் இவுளிநின் றிடுதற் கண்டார். (14

இந்திரன் பரியைக் கண்டாங் கிந்துவின் களங்கம் போலச்
சந்தவால் கருமை யுற்ற தகைமைகண் டனையோ வென்று
முந்து'கத் துரு'வு ரைத்தாண் முருக்கிதழ் 'வினதை' நோக்கி
யெந்தநேத் திரத்திற் கண்டா யில்லையே 'கருமை' யென்றாள். (15)

நிறையிருங் 'கருமை' யுண்டே னீயெனக் கடிமை யாக
வுறைதரு நிறமின் றாமேல் உனக்குநா னடிமை யாக
வலிகவென் றிருவர் தாமுஞ் சூளுரை யறைந்து 'வானத்
திறையவன் பரியை'க் கிட்டிக் காண்டுமென் றேகுங் காலை; (16)

'கத்துரு' வென்பாள் மாலைக் காலமா யிற்று நாளை
யுத்தம பரியைக் காண்டு மென்றனள் உள்ள மொப்பி
வித்தக 'வினதை' தானு மீண்டனள் 'கத்து ரு'த்தன்
புத்தியி லிணைத்தென் னுங்கொ லென்றுளம் புழுங்கி நைந்தாள். (17)

சேல்விழி 'கத்து ரு'த்தன் செய்யமக் களைய ழைத்து
சாலவே 'வினதை' யோடு 'சபத'மொன் றுரைத்து வந்தேன்
கோலமாங் 'குதிரை வாலை'க் குருகி(னு) [று]ங் காம ரூபத்
தாலரு மை'மை' யாகி யவ்விடை யுறுக வென்றாள். (18)

தாயுரை யேனுந் தன்மந் தப்பின மொழிமொ ழிந்தால்
ஏயவே கேட்க வொண்ணா தென்றுமுன் மறுத்தா ரன்னை
யாயவர் தமைமு னிந்தே யடற் 'சன மேச யன்'றன்
மாயமா மகத்தி னீர்போய் மறிந்திறந் திடுமி னென்றாள். (19)

அன்(ன)னைசா பத்துக் கஞ்சி யடற்கொடுங் கார்க்கோ டன்றான்
தன்னிகர் 'குதிரை வாலை'த் தனிக்கரு நிறஞ்செய் துற்றான்
மின்னவி ருதைய காலை 'வினதை' யோ டாங்க ணுற்றுச்
சொன்னவா றிருத்தற் காட்டித் தோமில்'கத் துரு'ந கைத்தாள். (20)

'வினதை'யுந் தாதி யாகி மிகமிக வேவற் செய்தாள்
அனையகா லத்தி ருந்த வண்டமுங் கடைந்த தற்பின்
மனநிலைக் 'கருடன்' வந்து பிறந்தனன் வலிய னாகி
யுனலரு மன்னைக் கின்ப முறும்படி யுலாவ லுற்றான். (21)

சகமெலா முலாவி மேவுந் தன்மை 'கத் துரு'பொ ருமன்
மிகவுமென் மக்க டம்மை வெரின்மிசைச் சுமந்து லாவி
யிகலற வருவா யென்றாள் எண்ணிலா வலியி னானக்
'ககபதி' சுமக்க லுற்றான் அன்னைசொற் கடவா னாகி. (22)

உலவியே திரியு நாளி லொருநாள்வெம் பணிக டம்மை
யலகரு முதுகிற் றூங்கி யருக்கன்மண் டலமட் டேக
விலகருங் கிரணத் தாலே விழுந்துபல் 'பணிக' ளோய்ந்து
நிலமிசை தவிப்பக் கண்டு நீடனை தியானத் தாலே. (23)

'வாசவன்' மழைபெய் விக்க வாளரா மூர்ச்சை தீர்ந்த
நேசமார் 'ருடன்' றாய்முன் னின்றுவெம் பணிக டம்மை
யேசில்யான் வலிய னாகி யிருக்கவுஞ் சுமப்ப தென்னை
மாசிலா நீயன் னாருக் கடிமையாய் வரவென் னென்றான். (24)

முன்னடந் தனவனைத்து மொழிந்தபின் மைந்தா வுன்னால்
என்னுடை யடிமைத் தன்மை நீங்குமென் றெண்ணி யுற்றேன்
'சென்னெறி மைந்த னாலே தாய்துயர் தீரு மென்றல்'
பன்னுநூ லொழுக்க மன்றோ வென்றன ளன்னை பார்த்து. (25)

பொங்கரு ளன்னைசொற் கேட்டுப் புழுங்கமெய் பணிக ளைப்பார்த்
தெங்கடம் மடிமைத் தன்மை தீருதற் கேது வேண்டும்
உங்களுக் கென்று ரைத்தான் 'உவணர்கோன்' பணிகள் வான்மேன்
மங்குறு 'வமுதந்' தந்தாற் றீருமென் [றுரைத்த]மாதோ. (26)

பணிகளின் மாற்றங் கேட்ட[ப்] படியியற் றிடுவ னென்னு
ந(ணி)[ணு]கியன் புற்றுப் பெற்று ணஞ்செயு மிறிவு தீர்ப்பா
னணுகரு மமுதங் கொண்டிங் கடைகுவ னென்று னச்சொற்
றணிவரு மமுத மாக வின்றவள் சாற்ற லுற்றாள். (27)

மாருத 'முன்சி றைக்கு' மதியமுன் முதுகி னுக்குச்
சீரிய சிரமுன் னான வுறுப்பினுக் கங்கி தேவன்
பாரிய துணையாய் வைகப் பகாரு மமு தங்கொண்டு
வீரமாய் வருவா யென்று விடுத்தனள் வணங்கிச் சொல்வான். (28)

எனக்குணு மாகா ரங்காட் டெனக் 'கட லிடத்தி னுற்ற
'வனக்கிரா தரை'யுண் டேகு மதித்துநீ யுண்ணுங் காலை
தனித்தொரு மறையோன் கண்டந் தனிலெரிப் பானன் னோனை
நினைத்துநீ வேறு நீக்கி நி[ன்]றெழின் முடிக்கச் செல்வாய். (29)

மறையவர் கோபந் தானே வாளுமாந் தீயு மாகுங்
கறைகெழு விடமு மாகுங் கருதிமற் றவரைப் பூசி
யுறவொடு புரிந்தா ருள்ளத் துன்னிய தெல்லா மெய்தும்
இறையினிற் செல்க வென்றாள் வணங்கின னேகு கின்றான். (30)

கடற்கணே வந்து 'மேருப் பெருமுழை' கடுக்கும் வாயான்
மிடுக்குடை யனேகங் கோடி 'கிராதரை' விழுங்கும் வேலே(ளோ)
மிடத்திடை யெரிப்ப துன்னி வேதிய வெளிப்ப டென்ன
வடுத்தவென் 'வேடப் பெண்ணே' யன்றிநான் வாரே னென்றான். (31)

வேதியர் தமைய டைந்தோர் மிகமிகக் கடைய ரேனும்
நீதியுத் தமரே யென்று நேரிலாத் தைய லோடு
கோதிலந் தணனை விட்டான் குளிர்ந்தவன் வாழ்த்திச் சென்றான்
மாதவக் 'கருடன்' பெற்ற 'காசிப னி'டத்து வந்தான். (32)

வந்தனன் வணங்கி யெந்தாய் 'வாளரா' வினங்க ளுண்ணக்
கந்தவா 'ரமுதங்' கொண்டு கடுகநான் வரச்செல் கின்றேன்
அந்தமில் புளினர் தம்மை யருந்தியு மடங்கிற் றில்லே
நந்துறு பசிய டங்க நல்லுண வளித்தி யென்றான். (33)

ஈஞ்சுண வறியா னுன 'விபாவசு' வென்னும் 'பார்ப்பான்'
காஞ்சனு வாசை யாலே கடியதன் றம்பி யாகி
யோஞ்சிடா திகல்செய் 'சுப்பி ரதீபனுக்' கொன்று மீயான்
ஆஞ்சினக் கரிய 'வேழ' மாகெனச் 'சாப' மிட்டான். (34)

மூத்தவன் றன்னைத் தம்பி முடுகியே 'யாமை' யாகி
யாத்துறை செல்க வென்று னகலமோர் நூறீ ரைந்து
மீத்திக ருயா மென்னும் யோசனை மெய்யு டைத்தாஞ்
சூர்த்த'பே ராமை' யானுன் (று) [தொ]டர்பகை யினையன் றனும். (35)

யோசனை ப[ன்]னி ரண்டா முயரமற் றதனிற் பாதி
வீசுறு விரிவு மான'வேழமே' யாகி நின்றான்
தேசுறு 'சரோவ ர'த்தின் றீரமீ துற்று முன்போல்
ஓசையோ டிகல்செய் கின்ற 'தும்பியு மாமை'தானும். (36)

அவையிரண் டையுமரு ருந்தி யேகென்று னருந்த வத்தோன்
பவமிறன் காலி னுலே யிடுக்கிமேற் பறக்கும் போது
கவலைதீ ரம்பு தீர்த்தக் கரையில்யோ சனைநூ றுகி
நவில்விரி வுயர்வு பெற்ற 'வடதரு' நண்ணிற் றங்கண். (37)

என்மிசை யிருந்த ருந்திப் போவென வியம்பிற் றந்தத்
தொன்மர மதனிற் கொம்பேறி நிற்றலுஞ் சுமைபொ றமற்
நன்மையார் 'பனை'யொடிந்த ததனிடைத் தவஞ்செய் துற்றார்
தன்மைகொ ளனேக 'வால கில்லியர்' தலைகீ ழாகி. (38)

அப்'பணை'தனைய வர்க்கா யகன்றவா யலகாற் கவ்வி
மெய்ப்படு 'காசி பன்பான்' மீண்ட[னன்] றவத்த ரைக்கண்
டொப்பிலீ [ரி]தைவி டுத்தால் உங்களுக் கிடுக்க ணுமென்
றெய்ப்பொடு கௌவி வந்தான் இறங்குமி னெனத்து தித்தான். (39)

இறங்கியம் முனிவர் போனார் 'இமகிரிச் சார' னேக்கி
அறந்திகழ் 'காசி பன்'றன் அரும்பெறன் மகனை நாடிப்
பிறங்'சிம கிரி'க்கப் பாலே சனமிலா பேரி டத்தின்
உறும்படி 'பணையை'ப் போகட் டுயர்'வரை' யேறி நின்று. (40)

'ஆனையோ டாமை' தன்னை யருந்திநீ யேகு கென்றான்
ஊனமி 'லுவண னந்த வாறுசெய் துவங்தெ ழுந்தான்
வானமேற் சிறையின் காற்றன் மலைகளப் பாற்ப றக்கத்
தானனி பறந்து சென்றான் 'சராசர' மெவையு முட்க. (41)

எழுந்தவன் செல்லுங் காலை 'யிந்திர புரத்தி' லங்கிப்
பொழிந்தது திக்க யங்கள் பொழிமத மடங்கி நின்ற
செழுந்திசைப் பால ருள்ள நடுங்கின[ர்] தெறுமுற் பாதம்
வழங்கிய தென்னென் 'றுசான்' றன்னிடை. 'மகவான்' சென்று; (42)

காணு'முற் பாதம்' வந்த காரண மியம்பு கென்றான்
மாணுடைக் 'காசி பன்'சேய் வரம்பெறுங் காம ரூபி
பேணுறு மன்னைக் காகப் போமு தெடுத்துப் போகச்
சேணிடை வருகின் றுனிந் திரவவன் செய்தி கேட்டி. (43)

பொருவிற்'கா சிபன்'று னிந்தப் புதல்வனை வேண்டி யாகம்
பரிவொடு செய்யும் வேலை பலபல முனிவர் யாருந்
தெரி'சமி தா'தி கொண்டு செல்பொழு 'தங்குட் ட'த்தின்
மருவுருப் பெற்ற 'வால கில்லியர்' மகிழ்ந்து தாமும். (44)

தங்களாற் பரிக்கத் தக்க சமிதைகள் கொண்டு றுங்கால்
அங்குநீ நகைத்தற் கண்டே யவருனை முனிந்து வீறு
தங்குமுன் னினுமோர் நூறு தனிக்குண மதிகம் பெற்ற
துங்க'விந் திரனை' யுண்டாக் குதுமெனச் சொல்லி னரால். (45)

ஆங்கவர் கோபந் தீர வமைக்குநற் 'காசி பன்'றன்
ஈங்குற வருசேய் புள்ளிற் கிந்திர னுக வென்றான்
தீங்கில தன்மை பெற்ற 'வுவணர்கோன்' செல்கின் றுனென்
றேங்கு'போன் னே'னு ரைத்தான் ஒல்லையி லவனும் வந்தான்: (46)

அமுதகா வலரை மாற்றி யமுதத்தைச் சூழ வைகுஞ்
சமமி'றீ வேலி' தன்னைத் தனிநதிப் புனலை வாய்கொண்
டிமையள வினில வித்தாங் கெழுந்துகூ ரியதோர் 'நேமி'
யமைவறச் சுழறற் கண்டே யணுவுருக் கொடுபு குந்தான். (47)

புகுந்துவெவ் விடத்தி னாலே யுலகினைப் பொடிக்கத் தக்க
பகிர்ந்தவாய்ப் பணி(வி) [யி] ரண்டைக் கண்டுதன் பதத்தா லூன்றி
யகந்தவெம் படத்தி னின்றே 'யமுதகும் பங்'க வர்ந்து
மிகுந்ததன் வலியி னாலே விண்ணிடை மீண்டான் மாதோ. (48)

விண்ணிடை 'யரி'முன் நின்று மிக்கவுன் வலியைக் கண்டோம்
உண்ணனி மகிழ்ந்தாங் கேட்டி யுறுபல வரங்க ளென்ன
நண்ணரு மமு துண் ணாது நரைதிரை மரண மின்றி
யண்ணலே யிருத்தல் வேண்டு மழிவிலுன் 'றேரி'ன் மீதே. (49)

அருங்'கொடி' யாகி யுன்பால் அமைவுறுப் பத்தி செய்ய
வரும்படி வருதல் வேண்டு மென்னவப் படிவ மூங்கித்
திருந்துநம் மூ[ர்]தி யாகிச் சேர்தியென் றருள நன்றென்
றிருங்கிரி பறத்தல் போல[ப்] பறந்தன னிணையில் லாதான். (50)

அவன்மிசை 'வச்சி ரத்'தை 'யமரர்கோன்' முனிவி னேவத்
தவலரும் வேகத் தோடு சார்தலு மவனை நோக்கி
யுவகைமா முனிபாற் றோன்று முனையவ மானம் பண்ணப்
புவனியி லொண்ணு தென்றென் பூஞ்சிறை தன்னி லொன்றின்; (51)

சிறிதுநீ கவர்ந்தே கென்ன வப்படிச் செய்யக் கண்டே
யுறுவலி 'சுபன்ன னென்றார் உம்பர்அவ் 'வும்பர் கோமான்'
இறுதியி லாவு னக்கிவ் வமுதத்தாற் பயனே யில்லை
கறைவிடப் பணிகட் கீயா தென்கணே நல்கு கண்டாய். (52)

என்கணே நல்கு வாயேல் எண்ணியே முழுது மீவேன்
உன்கணே யெனவு ரைத்தா னுரைத்தலும் என்ற னன்னை
[பு]ன்கணே ததுத விர்ப்[பான்] புனி தமில் 'பணி'கண் முன்னர்
மன்குலா' வமுத'ந் தன்னை யிருத்துவன் மதித்து நானே. (53)

என்னனை சிறுமை தீர்த்த பின்பணி யினங்க ளுண்ணு
முன்னமே யமுதந் தன்னை முடுகினிற் கொடுபோ வென்ன
வுன்னுடை வலியெ லாமென் னுடன்உரை யென்னக் கேட்டுப்
பன்னரு 'முவணர்' கோமான் அன்பொடு பகா லுற்றான். (54)

அயலவ(ரை)ர் தமைநிந் தித்தல் அடைந்தநற் புகழைக் கூறல்
இயல்பல வெனினுஞ் சொல்கேன் இப்புவி தனையெ டுப்பன்
வியனுடைக் கடல்க ளேழுஞ் சிறையினு லிறைப்பன் வீசி
வியன்சக மூன்றுஞ் சூழ்ந்து கணத்தினி லுறுவ னென்றான். (55)

அத்தற்குள மகிழ்ந்து நண்பு வேண்டினே னெனவ றைந்தான்
விதப்புறு 'குலிச பாணி' மிகவுநன் றெனப்'புள் வேந்தன்'
இதப்பட வுரைத்தான் உள்ள 'மிந்திரன்' மகிழ்ந்து னக்குத்
துதிப்பதற் கேது வான தோமறு வரங்கேள் ! என்றான். (56)

திரிபுவ னேசன் நீயாஞ் செயலினு லும்பர் கோவே !
யரவினங் களையெல் லாம்நா னருந்திட 'வர'ந்தா வென்றான்
உரக'போ சனனே' யாகி யுறைகவென் றளித்துப் பின்னே
சுரபதி வரப்ப றந்து 'தூயபுள் வேந்தன' சென்றான். (57)

சென் 'றர' வினத்தின் முன்னே தீதறு 'தருப்பை' மீதே
மின்றிக ழமுத கும்பந் தனைநனி வியந்தி ருத்தி
நன்றுற வுமக்குத் தந்தேன் நல்லமு தெங்கள் பு[ன்]மை
யின்றுதீர்ந் தது'வெய் யோனு மிந்து'வு மிதற்குச் சான்று. (58)

நீவிர்போய் முழுகி வந்து நிறைந்திட 'வமுத பானம்'
பாவனை யோடு செய்மின்க ளென்றுதன் றாயைப் பாரா
மாவலி முதுகி லேற்றி மறைந்துறு மிந்தி ரற்குக்
காவில்'கண்' காட்டிப் போனான் றனக்கொரு நிகரி லாதான். (59)

அப்பொழு 'தர'வி னங்கண் முழுகிவந் தணுகு முன்னங்
கைப்பொடு வமுத கும்பங் 'காவலன்' எடுத்துப் போனான்
தப்பற வதுமே வுற்ற 'தருப்பை'யை வந்து நக்கிக்
கப்புடை நாவுண் டாகி யிருந்தன கடுநா கங்கள். (60)

தருப்பையை நக்க லானே சர்ப்பசா திகளுக் கெல்லாம்
உருக்கிளர் நாவி ரண்டா யுற்றன வன்று தொட்டு
விருப்புறு 'தருப்பை' யெல்லாம் மேம்படு 'சுதாகும் ப'த்தைப்
பரித்திடப் பெறலான் மிக்க 'பவித்திர' மான மாதோ. (61)

மன்புகழ் கருடன் றன்னை வந்தடைந் தவருந் தானும்
அன்பொடு சிறந்து வாழ்ந்தா (ள) [ர] ளவிலா மாடந் தோறும
பொன்பதி 'மடுவைத் திம்ம பூபதி' கல்வி மேருத்
தன்பல கிளையுந் தானுந் தழைத்துவாழ் வுறுதற் போல. (62)

இக்கதை படித்தோர் கேட்டோர் எழுதினோர் கொடிய 'வாலங்'
கக்குவெம் 'பணி'யால் மேவு கடும்பய மின்றி நல்க
மக்களுஞ் சுற்றந் தானுஞ் சூழமங் கலம்பூந் தையல்
மிக்கதம் மனைப்பான் மேவ வீற்றிருந் தருளு வாரே. (63)

வினதைச் சருக்கம் முற்றும்

ஆகத் திருவிருத்தம் 95

——:o:——

3. சரத்காரன் சருக்கம்

தொடர்புடை யன்னை யுந்தன் றுணைவருங் கூடிச் செய்த
கொடுமையை நினைத்துச் 'சேடன்' குறித்தவர் தம்மை நீத்துக்
கடிமல ரோனை யுன்னிக் 'கந்தமா தன'மே யாதிப்
புடவிமா தலங்க டோறும் புகுந்தருந் தவம்பு ரிந்தான். (1)

வேறு

அளவிற் கால மருந்தவஞ் செய்ததற்
குளமகிழ்ந்'துர கேசன்'முன் னேங்குறு
வளமு டைச்'சது (ர்) மாமுகன் றோன்றியே
தளர்வி லா'வரங்' கேளெனச் சாற்றினன். (2)

அன்னை யுமென்று ணைவரு மாதியே
தன்னை நேர்வின தைக்குந் தருமவன்
மன்னு சேய்க்கு மதித்தப காரமே
முன்னி யற்றினர் அன்னதை முன்னியான்; (3)

அகமெ லிந்தன னைய தவம்புரிந்
திகலு டற்பொறை நீத்திட வெண்ணினேன்
புகலெ னக்குநீ யென்று புகன்றனன்
தகவு பெற்றிடுஞ் சர்ப்ப விராசனே. (4)

அரவ நாதன் அறைந்தது கேட்டுமா
தருமன் நீ(ணீ)சம புத்தி தரித்துளாய் !
தரையெ லாமிகத் தாங்கத் தகுவை ! நீ
வருபு (ணீ) [ள்ளீ] சன் வளஞ்சொலக் கேட்டியால். (5)

'வால கில்லியர்' தந்த வரத்தினால்
ஏல வீறிற்'புள் ளிந்திர ஞ்'யினான்
மேலே 'யிந்திரன்' றன்னைவென் றானவன்
பாலி னன்புகொ ளென்றனன் 'பங்கயன்'. (6)

'பங்கயன்' சொற்படி 'யுவணன்' றன்னொடு
அங்கு நண்புகொண் டம்புவி முற்றுமோர்
தங்கு தன்றலை மீதுறத் தாங்கிமற்
றெங்க ணுந்துதி செய்ய விருந்தனன். (7)

புடவி முற்றும் புகழ்ப்'பணி நாயகன்'
இடைய றாமல் இயல்பொடு தாங்கினன்
'படுவை யம்பதி திப்மையன்' வந்தடைந்
திடுமெ லோரையுந் தாங்குத லென்னவே. (8)

வேறு

சனமே சயன்றன் யாகத்திற் சர்ப்ப மெல்லா மிறந்திடுமின் !
எனவே தாய்சொல் லியசொல்லை யிதயத் துன்னி மிகப்பயந்து
தனி'வா சுகி'யென் பவனிளையார் தம்மோ டகலா நண்பரையும்
இனமாய்க் கூட்டி யவர்தம்மோ டெழுந்த துயரி னுரைக்கின்றான். (9)

சிரத்தை யுடன்மா தவம்புரிந்து 'சேட ஞ்'ஞென் 'றய'னுதவும்
வரத்தி னானே புவிதாங்கி மகிழ்ந்து சுகத்தோடு றைகின்றான்
இருத்து மமுதங் கடைநாளில் இழுக்க விழுக்க நான்பட்ட
வருத்த மதுகண் டெனக்கிறவா வரத்தை யளித்தான் 'மணி வண்ணன்' (10)

இனத்தா செல்லாம் இறப்பாரென் றெண்ணி யுளைந்தே னெனுமளவிற்
சினத்தோ டேகி 'மறையவரா'ய்ச் 'சருப்ப யாகஞ்' செயவேண்டா
மெனப்போ யிரந்து மிதற்கிசையா திருந்தா ளுகி லவண் விழுந்து
பணித்தே யோடிக் கலக்குதுமென் றுரைத்தார் கொடிய 'பாப்பரசர்'. (11)

அவரிற் சில [ர்]வே தியருரைக்கு மணிமந் திரங்கள் வந்துவந்து
கவனத் துடனீர்த் திடும்பொழுது கலைதா மீர்த்த லரிதென்றார்
மவுனத் தோடொன் றாய்மடி யிற்று யில்வான் மனத்தின்மதித்
தவுணுற் றிருந்தே னென்றினிதி னறைவான் ஏலா புத்திரனே.

தவமா விருடி 'காசிபன்'பாற் றவரு முனிவர் பலர்கூடி
யவமா யன்னை சுதரைமுனிந் தரிய சாப மிடுங்காலை
நவைதீர்த் தருணீர் தவிராம விருந்த தென்னை நவிலுமவைக்
கிவையா மென்று பரிகாரம் இயம்பு கென்று ரவருடனே. (13)

உலகி லுயிரைப் பிடிக்குமுன முரக சாதி தனக்குவரும்
இலய மகற்று திருந்தனமால் இனிமை தரும[ப்] பணியரசின்
வலிய மரபு 'வாசுகியின் வந்தாள்' 'சரற்கா ரணைமருவி
பிலை வுதவு 'மத்திகனல்' உய்யு மென்று ளிருந்தவத்தோன். (14)

அன்று கேட்டே னெனச்'சோ[ல்]லு'
மெலாபுத் திரனை யணைத்துமகிழ்ந்
தின்று பிழைத்தோஞ் 'சரற்காரன்'
என்னு முனிவ னியல்வதுவை
என்று புரிவா னெனவழிபார்த்
திருக்கு நாளிற் சரற்காரன்'
மன்னு மறைநூ லறிந்துமுனி
ரிணந்தீர்த் தவனாய் வந்துற்றான். (15)

வனத்திற் சரிக்கு நாளிலொரு
வறிய கிணற்றி லவன்பிதுர்க்கள்
முனைப்பல் லெலியாற் கடிக்கப்பட்
டிடுமோ ரறுகின் முதல்பற்றி
யினத்தி னுடனே தலைகீழாய்
நிற்க வவரை யிவன்கண்டு
வினைக்க ணீங்கி தவஞ்செய்வீர்!
நீர்!யா ரென்றான் வினையில்லான். (16)

அறத்தி னின்றோய்! தவமுடைய
மல்லே மெங்கண் மாபுதனிற்
பிறக்கு முரிய 'சரற்காரன்'
எனுமோர் பாவி பிறழ்வதுவை
சிறக்க முடித்து மகப்படையா?ச்
செயலாற் கொடியவ தோகதியின்
றுறைக்கண் ணுடைய வுடைந்தேம்யா
மவனோ டுரையாய் துணைவிற்போய். (17)

யாங்கள் பிடித்த 'வறுகி'ன்முத
றன்னைக் 'கால னெலி'யாகி
யீங்கிப் போது கடிக்கின்றான்
ஒருவேர் தப்ப விருந்ததுகாண்!

நீங்க் வரிய 'வதோகதி'யி
 னிறுத்த வாறு 'சரற்காரன்'
றுங்கு மகவு [வு]டைத்தானேற்
 'றுறக்க முறு'வெங் தகவென்றார். (18)

பிதுர்க்க ளுரைத்த் வுரைகேட்டுப்
 பிறங்கு வதுவை புரிந்ததற்பின்
இதத்த 'மகவு'பெற்றேனென்
 றெண்ணி னனே 'சரற்காரன்'
மதித்து நுங்கட் சிறுமையற
 வென்பேர் பெற்ற மங்கையொரு
பதிக்க (வு)[ணு]ண்டேல் அவளைமணஞ்
 செய்வே னென்று பகர்ந்தனனால். (19)

அகத்தி னினைத்த படிமுடிப்பை
 யென்ற பிதுர்க்க ளடிவணங்கி
மிகைத்த தன்பேர் பெறுமவளை
 மிகவுந் தேடி வருமளவில்
உகைத்த 'வோற்றர்' பகரக்கேட்
 டுயர்'வா சு'கிதன் றங்கைதனைப்
புகர்ப்பொய் மாற்று 'சரற்காரன்'
 எதிரே கொண்டு புகுந்தனனால். (20)

புகுந்து வணங்கி யிவளையுனக்
 களித்தேன் மாதாம் புனிதமுற
வுகந்து கோடி யெனநன்றென்
 றுளி'ரக் கன்னி' தனைநோக்கிப்
பகர்ந்த மொழிக்கு மறுமாற்றம்
 பகர்ந்தா யென்னி லுன்னையவன்
இகந்து விடுவே னென்றுமணஞ்
 செய்தான் உலகி லிணையில்லான். (21)

மணஞ்செய் திடுநாண் முதலாக
 மாறென் வருமோ வென்றுபயந்
திணங்கு பத்தி செயுநாளில்
 எழுஞ்'சூ ல'டைந்தாள் 'சரற்காரை
குணங்கொள் ளவடன் மடிமீது
 குலாவுந் தனது சிகைத்தலைவைத்
தணைந்த கணவன் றுயிற்கொண்டான்
 அருக்கன் மேற்பாற் கிரியடைந்தான். (22)

சந்தி யமயம் அணைந்ததனற்
றக்க மறையோர் அகன்றனநால்
இந்த வேலே யெழுப்பாம
விருந்தாற் கால மதுபிழைக்கும்
நந்து துயிலே யெழுப்பியிடின்
நாடி முனிவு செய்யுங்கொல்!
புந்தி மெலிய முனிந்தாலும்
பொறுப்ப லென்ன வெழுப்பினளால். (23)

எழுப்பி விடுத்த தென்பேதா
யென்னச் 'சந்தி' செயுங்காலம்
பிழைக்கு மென்ன வெழுப்பினன்யான்
பெரியோ யென்ன யான்றுயின்றால்
அழற்றுக் 'கதிரோன்' மறைகுவனே
வதனை யெண்ணு தவஞ்செய்தாய்
உழைக்கண் மயிலே யினியுன்பால்
உறைவ திலேயென் றுரைத்துப்பின்: (24)

உனது கருப்பத் துறைபவன்றான்
'உதைய' ஞெடுசெங் கனலொப்பான்
வினையி லிவனு விருமாபும்
விளங்கு மினிய 'வாசுகியான்'
மனது மெலியா துறையென்று
வகுத்துத் தானுந் தவஞ்செய்யப்
புனித னகன்று னப்படியே
போயங் குறைந்தாள் புரையில்லாள். (25)

இருக்கு நாளிற் 'சமுசார'
மிகுந்தோ ஞகி யனகனுமாய்த்
தருக்கு நிறை'யத் திகன்'என்னுந்
தனிப் பேருடையா னுதித்தனனல்
விருப்பின் வளர்ந்து [சவ]னனருள்
வீறு தனையன் 'பிரமதி'பாற்
பெருத்த மறைகள் அங்கங்கள்
முழுதுங் கற்றுன் பே[ருற்றுன்]. (26)

சரத்காரன் சருக்கம் முற்றும்

ஆகத் திருவிருத்தம் 121

—:o:—

4 சருப்பயாகச் சருக்கம்

'சனமே சயபூ பதி' தனது
தந்தை யான 'பரீட்சித்துச்'
சினமார் கொடிய 'தக்[க]சனல்'
இறந்த வாறு திக'முதங்கன்'
முனிதா னுரைப்பக் கேட்டயர்ந்து
முதன்மை யமைச்சர் த(னை)[மை] நோக்கி
துனியா லீது நடந்தநெறி
சொல்வீ ரென்னச் சொல்லுவரால். (1)

வீர விறல்வாள் ம[க]னுக்கும்
'விராடன் மகள் 'உத் தரை' தனக்குஞ்
சீரின் மரபு 'குருமரபு'
தீர்ந்து போகு மமையத்திற்
சார்ரு மறமா திகள்விளங்கத்
தக்க 'பரீச்சித்' தென்னுமொரு
பேரி னுடனே புவிமகிழப்
பிறந்தான் வளர்ந்து சிறந்தானே. (2)

உலக மெங்குந் தனதொருகோ
லோச்சி யரசர் திரையளப்பத்
தலைமை பெற்று நீமுதலாந்
தனையர் த(னை) [மை]யு மீன்றெடுத்துக்
குலவு மறுப தாண்டுகளி
கூர்ந்து 'பரதன்' றனைப்போல
அலகி லாத கலித்தீமை
யடக்கி வாழ்ந்தான் வாழ்நாளில். (3)

வேட்டை யாடும் விருப்பினனாய்
மேவிக் களிறு முதல்விலங்கை
வாட்டி 'யிராமன்' போலவொரு
வலிய விலங்கின் பின்றொடர்ந்து
காட்டில் வரும்போ தருந்தவஞ்செய்
'சமீக முனியைக்' கண்டெனது
பூட்டுக் கணையோ டிவண்வந்த
தெங்கே போயிற் றெனப்புகன்றான். (4)

ஆண்டு மவுனத் தோடிருந்த
வந்த முனிவன் கழுத்தில்வன்

மாண்ட வரவை விற்கணையால்
வாங்கிப் புனைந்து போயினனால்
பூண்ட வத்துச் 'சமீகமுனி'
புதல்வன் 'சிருங்கி' யுடன்'கிரீசன்'
மூண்ட வாறு தனையுரைப்பக்
கேட்டுச் சால முனிந்தனனால். (5)

தேனு முலைப்பா னுரகன்றன்
வாயி னுரைமாத் திரமறிந்து
ஞான முனியென் றந்தைதனை
நாடி யரவைக் கழுத்திலிடு
'மீன வரசன்' இன்றுமுத
லேழு நாளிற் 'றக்ககன்'வாய்த்
தான விடத்தா லிறப்பனெனச்
'சாப' மிட்டான் உயர்'சிருங்கி'. (6)

'சிருங்கி' தாதை யருகணைந்தங்
கரவை நீக்கித் திறலரசன்
புரிந்த செயலுந் தான்சபித்த
செயலும் நாடிப் புகன்றனனால்
இருந்த 'சமீகன்' சுதன்முகத்தை
யேற நோக்கி யுலகாளுந்
திருந்து மிறையை யேன்சபித்தாய்;
பேதா யென்று செப்பினனால். (7)

சினத்தாற் றவமு 'மணிமாதி
சித்தி க'ளும்பே ரறமுமற்று
மனத்தே பொறுமை யிலான்றவமும்
ம(த்தமெதா)[ற்றோ]ன் றிருவுந் தருமமிலான்
தனித்தே யாளுந் தேசமுமோ
ருடைந்த பாண்டந் தனினுறுநீர்
அனைத்தே யாகக் கெடு(ெ)மன்றோ
வரச னவனை யேன்சபித்தாய். (8)

ஒரு'நால் வருண'த் தரையுமவர்க்
குரிய நீதி வழுவாமன்
மரியா (தி)[தை] யினு னடத்துமிவர்க்
கிணையா மரசர் மற்றுளரோ

விரிசீர் 'மாந்தா தா'சகுவே
  மிக்க 'விரதம ' முதலானோர்
கிருதா தியின்மற் றிவரைப்போல்
  நடத்தி னாரோ கேடறவே. (9)

வெய்ய சினத்தான் நீயளித்த
  'சாபந்' தன்னை மிகத்திருப்பி
யுய்யு மாறு புரிதி!யென
  வுரிய தந்தை சொலக்கேட்டே
பொய்யிற் 'சாபந் தனை'மாற்ற
  வரிதென் றுரைத்தா னப்புதல்வன்
துய்ய 'சமீக முனி'யொருவன்
  றேமிற் சீடன் றனையழைத்து, (10)

தடுப்பிற் 'சாபம்' வந்தவழி
  'யரச னோடு சாற்றென்று
விடுத்த வுடனே [ய]வன்வந்து
  வேந்தே! சிருங்கி சாபத்தாற்
கடிக்க வருவன் 'தக்கன்'முன்
  'கருட ன'னையா ரெழுநாண்மட்
டடுக்க வுறைவா யெனக்'குரவன்'
  அறைந்த படிசொற் றகன்றனனால். (11)

இறைவன் முன்செய் திடும்பிழையை
  யெண்ணித் துன்பத் தொடுகூடிக்
குறைவிற் 'கம்ப' மொன்றுநிறீஇ
  யதின்மேன் மேடை குயிற்றியதின்
மறுவி ல'மைச்சர்' விடந்தீர்க்க
  வல்லார் சூழ விரவுபகல்
உறையு மவதா னத்துடனே
  'யுலகா ளிறைவ' னிருந்தனனால். (12)

உரக விடத்தா 'லிருதினை'கட்
  குண்டு பயமென் பதையுன்னிப்
'பிரம ன'ளித்த மந்திரத்தைப்
  பெற்ற 'தவக்கா சிபன்'என்னும்
மொருநற் 'பனவன்' 'றக்கக'னு'
  லுலகா ளிறைவ னிறவாமற்

கருதித் தீர்ப்பான தினலே
 கனமுந் தனமு முளவென்றே; (13)

எண்ணி வருந்தா ரியற்'சிருங்கி'
 யிட்ட சாப மேவப்பட்
டண்ணன் மருவத் 'தக்ககனு'
 மான்ற மறைவே தியனுகி
நண்ணி யெங்கே செல்கின்ருய்
 நவில்வா யென்னப் 'பணியிறையான்
'மண்ணி லிறை'மா யாதிருத்த
 வருகின் றேன்என் ருன்மறையோன். (14)

கொல்ல வரு'தக் ககன்'யானே
 கொடிய வெனது விடத்தீயாற்
புல்லு முயர்போ கையிதனைத்
 தீர்ப்பா ருளரோ 'புதுமறையோய்'
ஒல்லை திரும்பு திரும்பாயேல்
 உயர்ந்த 'வடத்தை'க் கடித்தெரிப்பேன்
தொல்லை யிருந்த படிசெய்தால்
 ருெடர்நீ வல்லை யெனக்கடித்தான். (15)

கடித்த வளவிற் பொடியாகி
 விழுந்த ததனைக் க[டி]த்தேதன்
தொடுத்த 'மனுவான்' முன்போல
 'விண்'டொட நின்றிடச் செய்தனனல்
வடித்த வுனது விஞ்சைக்கு
 மகிழ்ந்தேன் 'முனிசா பத்தை'யினித்
தடுப்ப தரிதங் கவனளிக்குந்
 'தனத்தை' நானே தருகின்றேன். (16)

கொடுபோ வென்று 'தனங்'கொடுத்தான்
 குலவி 'மறையோன்' கொடுசென்ருன்
'வடமீ' திவர்ந்த வொரு'பனவன்'
 வல்லை யெரித்த பொழுதிறந்தான்
உடனே யெழுந்த பொழுதெழுந்தான்
 'புரத்தி' லவன்வந் தோடியுரைத்
திடலா லாண்டு நடந்தசெயன்
 முழுது முணர்ந்தா ரெல்லோரும். (17)

வேறு

'இகலரசன்' ஏழாநாட் பொழுது போந்த
  தினிப்பார மிலேயெனவி ருக்கும் வேலைத்
தொகு'முரகர்' தமைநீவிர் மறையோ ரர்கித்
  தூயவவன் கனிகளைச்செங் கையி லேந்தித்
தகுமாசர் கண்டுதவு மென்று கூறித்
  தக்ககனு மருமமதாய்ச் சார வந்து
நிக[ரிலவர்] அவ்வாறு வேதந் தன்னை
  நிகழ்த்தும்பதக் கிரமத்தோ டுரைத்து நின்றார். (18)

நிற்குமவர் த(னை)[மை]'யரச ன்'ழைத்துத் தந்த
  நறுங்'கனி'க டமைவாங்கி நீட நோக்கி
போற்றிப்பின் னுடனருகி ருத்திச் சூழ்வோர்
  தம்பாற்'பூங் கனி'யளித்தோர் கனியைத் தானும்
கற்'கையுகி' ராலழுத்தும் போதி லந்த
  நறுங்கனியி லொருகரிய புழுவாய் மேவித்
'தக்ககனே ர'ரவாகிக் கவ்விப் போனான்
  றனி'மேடை யுடனரசன்' பொடிபட் டானால். (19)

இருந்தவரெல் லாம்'அசனி' விழுந்த தொப்ப
  வேங்கியகன் றுருன்னை யீன்ற தாதை
விரிந்த'பர லோக'த்தை யடைந்தான் செய்யும்
  விதிப்படியே கருமங்கண் மறையோர் செய்து
பொருந்தமுடித் தார்'சனமே சயபூ பால'
  புவனிமு ழுதுமுனது மனுநன் னீதி
திருந்தவளர்த் தாயுனக்கு நிகர்ப்பா ரென்று
  செப்பியிருந் தார்அமைச்சர் அந்த வேலே; (20)

மனத்தின்முனிந் 'தரச'னெனைப் பெற்றோ னவி
  வதைக்கவரு வதுமன்றி மீட்க மேவுந்
தனித்தமறை யோன்றன்னைத் திரும்பி வந்த
  'தக்ககனை'முதலான சர்ப்ப சாதி
யனைத்தினையுஞ் 'சர்ப்பமகம்' புரிந்து கொய்வேன்
  அளித்தருளென் றந்தைக்கு 'முதங்க னு'க்குந்
கனத்தமகிழ் வுறப்புரிவேன் மறையீர் சொல்வீர்
  கடுஞ்சர்ப்ப மகமுடிக்குங் கரும மென்றான். (21)

'பணிமகளு'செய் திடுவினையைக் கேட்ட தன்றிப்
பற்றிமுடித் திடுவதில்லை யென்னக் கேட்டு[த்]
தணிவில்லை யெப்படியா யினுஞ்செய் கின்றேன்
சதுர்மறையீர் வம்மின்க ளென்று கூட்டி
யணிகிளருஞ் 'சிற்பி'யா லி'யாக சாலை'
யமைத்த[த]னுக் கேற்ற'வுப கரண' மெல்லாந்
தணிதமற வருவித்து 'மனைவி' யோடு
களித்தரிய 'தீக்கை'கொடு வைகுங் காலை; (22)

எதிலொரு 'சிற்பகலை' வல்லோன் வந்திங்
கியற்று'மக' நிறைவுபடா தென்னக் கேட்டு[த்]
தீதிலரும் புகழரச னேவற் பெற்றுத்
திகழ்'சண்டி பா(ற்)[ர்க்]கவ'னங் கோதா வாக
வேதகலை வல'கபில பிங்க லன்'றான்
விகலரிய வத்துவரி யாக நின்றான்
காதலொடு 'சங்கேயன்' பிரம னாகக்
'கவுசேயன்' உத்காதா வாகி யுற்றான். (23)

டயன்மருவு 'வியாசர்'தவம் பயிலா வைசம்
பாயனரே சுகர்சுமந்தர் சு(வா)[வே]த கேது
உயர்கபிலர் நாரதர்கே வலரே குண்ட
ரொடுசார்சா ரங்கர்கா களரே மற்று
வியனுடையு ரோமேசர் சாண்டி லியர்மேன்
மிக்கபரா சரரதி நேய ருள்ளத்
துயர்வகலும் புற்கலியர் தேவ சன்மா
வாதியரே ச[ப்பி]யர்க ளானார் மன்னோ. (24)

நன்னிலைக்க[ட்] கலைகள்புனை ந் தோம கன்மம்
நடத்திவரு கையின்'மந்திர' சக்தி யானே
தன்னெறி லேர்மநெடுங் 'குண்டத் தீ'யிற்
சாற்றரிய கொடுமைபுனை தறுகட் கோர
பன்'னாக சாதி'களெண் ணிறந்த கோடி
பலநிறத்த பயங்கரமா முருவம் பெற்ற
மன்னுலங் களையுமிழ்ந்து வந்து வந்து
மறிந்துசட சடவென்ன வெரிந்த மன்னோ. (25)

விரித்தவொரு தலைமுதலாய்ப் பன்மை பெற்ற
வீறுதலை யுடையனமற் றிரண்டு மூன்றென்
றுரைத்திடு'யோ சனை'நீள முடைய 'சர்ப்பம்'
உறிஞ்சுமொலி 'மந்திரங்க' ளீர்க்கப் பட்டு
அருத்தமுடன் அமுதமொழி குழகு மோதை
மாறுது முறுகி'யன லெரி'யுஞ் சத்தம்
பெருத்தவுடல் வெடித்திடவே யெழுந்த வோதை
பிறங்கியவெண் டிசைகளெலாம் நிறைந்த மாதோ. (26)

அப்பொழுதே தக்ககனு'டை[ப்] 'பத்தினி' யோடே
'யமரேச' னிடத்திற்போய்க் காகா வென்று
செப்புதலும் 'வாசுகி'யே முதலா னோர்க்குத்
திற'லுரக' மகத்திற்சா வில்லை யென்று
மெய்ப்'பிரமன்' உரைத்ததுகேட் டிருத்த லானே
விண்ணவர்கோன்' அபயமளித் தனன்அவ் வேலை
தப்பறுசீர் 'வாசுகி'தன் றங்கை' யான
'சரத்க[ா]ரை' முகநோக்கி யுரைக்க லுற்றான். (27)

வேறு

படமுடை யாவி னினமழி யாதுன்
பாலனு 'மத்திகன்' கருதித்
திடமொடு புரத்தற் கமையமீ தவனுற்
றிறற்'பணி மக'ந்தவிர்ந் திடுமென்
றிடாகல் 'பிரமா' வுரைத்தல்கேட் டுன்னை
யிருஞ்'சரற் காரனு'க் களித்தேன்
பொடிபடு 'மரவி' னினமெலா மினியோர்
புன்கணம் பொழுதுதாழ்ந் தனையேல். (28)

விரைவினிற் 'சனமே சயனே'னு மிறையாபா[ன்]
மிக்கவுன் புதல்வனை யனுப்பிப்
புரி'பணி மகத்தை' நிறுத்துதல் வேண்டும்
பரிவுட னென்னமுன் னவன்சொல்
இருசெவிக் கமுதா யேற்றுநன் மகனை
இன்பொடு நோக்கியுன் 'மாமன்'
பரிவுட னுரைத்த படிசெயக் கடவாய்
பால!வென் றனள்'சரற் காரை.' (29)

பெற்றவ ளுரைகேட் டுயர்புடைப்பணியின்
பெருங்குல மிறந்து போக
மற்றுள வெல்லாம் பிழைத்திடப் பணி(யா) [சா]
மகத்தினை நிறுத்துவே னென்று

பற்றுமே வியதன் மாமனுக் 'கபயம்'
பண்புட னளித்துநான் மறையுங்
கற்றமெய்ப் 'பனவர்' சூழ்'வத் திகன்'றான்
கடி'மகச் சாலை'யி லகன்றான். (30)

வியனுருக் காந்தி யாலிருஞ் சபையை
விளங்கிடச் செய்துமென் மொழியால்
உயர்[வு]று 'சனமே சய'ன்றனை நோக்கி
யொள்ளிர்'விது குல'த்தினிற் பிறந்தோய்!
இயல்புடை யுயிராய் 'முனிவ'ரா யினைநீ!
'இராமனே' முதலினோர் போலப்
பயனுறு 'புவி'யைப் புரந்துயர் கீர்த்தி
படைத்தனன் உன்னையீன் றவனே. (31)

செய்திடும் யாக முகத்தின்மா மறையோர்
திருத்தியுற் றிடப்பொருள் கொடுத்தாம்
மெய்தரு 'தரும னன்னயன்' பாச
பாணியும் விளங்குறு கண்ணன்
கய்தவ மகற்று முயர்பிர யாகை
தனிற்புரி கடிமக மெனவே
யெய்துப யன்பெற் றதுபுவித் தலைவ!
வீண்டுநீ பண்ணிய மகமே. (32)

தருக்கிநீ புரியும் பெரியபே ரெச்சந்
தனக்கனு கூலமா யிருந்த
வரம்பெறு மறையோர் விஞ்சைகண் முழுதும்
வல்லவர் 'அயன்'றனை நிகர்த்தோர்
திருக்குறு 'வியாச ரே'வரினு முயர்ந்த
சீரிய ரிந்தமா 'மக'த்துக்
கொருப்[ப]டு மினிய சதச்சிய ரானார்
உயர்விது போலமற் றுளதோ. (33)

வாழிநீண் டுநிக ரற்றநீ வாழி!
வாழியென் றுயார சனையுங்
கேள்விசேர் மறைநூற் கற்றவர் தமையுங்
கேடறு மழற்பக வனையுங்

தாழ்வறத் துதித்தான் 'அத்திகன்' அவன்மேற்
சாற்றரும் பெருமகிழ் வாகி
'ஆழிசூ ழுலகங் காப்பவன்' உனக்கு
வேண்டிய தென்னென வறைந்தான். (34)

சத்தியந் தவறு வரசனே, 'யம்மான்'
றனையனே யென்றனக் குறவாம்
பைத்தலை 'யுரக' மிறந்திடா வாறிப்
'பணிமக'ந் தனைநிறுத் திடவே
'அத்திக' னுரைத்தா னுரைத்திட லுஞ்சற்பாத்
திரத்திடை யளித்ததோர் தானம்
இத்தர ணியினின் றனந்தமாய் வளரும்
ஈகுதி! யென்றனர் யாரும். 35.

இணையறு 'சனமே சயன்' அதற் கிசைவுற்
றியற்றிடு 'மக'ந்தனை நிறுத்தி
'யணை'மிசை யிருந்தான் அந்தணர் மனுவால்
அம்பரத் திடையுளோந் தலறிக்
குணதிசை யிறைவன் நிறுத்தவு நில்லாது
கொட்படு வந்ததக் ககனை'க்
கணமதிற் றிருப்பி விட்ட'வத் திகனைக்
கண்டவர் யாவரும் புகழ்ந்தார். (36)

இயங்'கர' வினங்க ளுய்யுமா றியற்றும்
இக்கதை படித்தவர் கேட்டோர்
வயங்கிய 'சர[ற்]கா ரன்'றனை யவன்றன்
'மனைசரற் காரரையை' யவடான்
பயன்கொள வீன்ற 'வத்திகன்'றனையுட்
பரிவொடு நினைத்துளர் எவரும்
'புயங்க'பீ டைகளற் றிருப்பர்நீ டாயுட்
பொலிவுற வாழ்குவர் களித்தே. (37)

சருப்பயாகச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 158

——:o:——

கருதருங் கவிக டிந்து கடலிடை யுலகுக் கின்பந்
தரு'சன மேசய' ன்'ருன் சதிர்பெற விருக்க வோர்நாட்
டெருளுறு மாசர் சூழச் சிறப்புட னிருந்த போது
விரிதரு தவத்தான் மிக்க 'வியாச'மா முனிவன் வந்தான். (1)

வந்தருள் 'வியாதன்' ருல்சீர் வழுத்தலாந் தகைமைத் தன்று
முந்துறு சக்தி பெற்ற முழுதுணர் பராச ரர்க்கோர்
'கந்த'மே பெற்ற மேனி 'கன்னி'பா லுதித்தோன் போரிற்
பிந்துறாப் 'பாண்ட வர்க்கு'ப் 'பிதாமக' ளுகி யுற்ருன். (2)

பிறந்தபோ தேவி ருத்தி யிளமதி போலப் பெற்ருேன்
சிறந்தமா மறைகள் அங்கந் திகழிதி காசங் கற்ருேன்
அறந்தவம் விரதங் கோபம் பொறுமையா லதிக ரில்லோன்
நிறந்தவோர் வேதந் தன்னை நான்குபங் காக்கி நின்ருேன். (3)

பிரமமெய்ஞ் ஞானி மிக்க பிரமமா விருடி மெய்யே
விரதமா வுடையன் சுத்தன் விறற்கெழு 'பாண்டு' தன்னைத்
'திருதராட் டிரனை' ஞான விதுரனைப் பெற்ற சீலன்
பொருவிற்'சந் தனு'வேல் வேந்தன் சந்ததி பொலிய வாழ்ந்தோன். (4)

அந்தமா முனிவன் வேத பாரக ராதி யுள்ள
சந்தமா ணுக்கர் சூழத் தண்டுகுண் டிகையி ளுேடு
பந்தமின் மறையோர் மன்னர் அமைச்சர்கள் பலரும் போற்ற
நந்து'வா சவன்'போ லுற்ற வாசனை நண்ணி ளுனல். (5)

நண்ணிய பொழுதெ ழுந்து நற்சனத் தோடு கூடி
விண்ணிறை யணையிற் 'பொன்னை' விருப்புட னிருத்தல் போல
வண்ணநற் றவிசி ருத்தி மறு [வறு] வருக்கி யாதி
[யு]ண்ணயப் பொடுசி றந்த 'வர'ளுெடு முதவி ளுனல். (6)

அவ்விறை தனைம கிழ்ந்தே யருண்முனி கண்ணு ளுேக்கிச்
செவ்விதுற் றனையோ வென்னத் திகழ்முனி புங்க வர்!நின்
மெய்வளர் கருணை தன்ளுல் வினைதரு பகைய கற்றி
யிவ்வுல களித்து நின்றேன் என்றனன் அரசர் கோமான். (7)

என்றபின் னிறைகை கூப்பி யெம்பிதா நிகரா யுள்ள
நன்றறி பாண்ட வர்க்கும் நன்கிலாக் கௌர வர்க்கும்
ஒன்றுருப் பேத மாகிக் கொடுஞ்சம ருற்ற வாற்றை
மன்றினீர் கண்ட வாறே வழங்குதி ரென்ன லோடும்; (8)

தனதரு குற்ற 'வைசம் பாயனன்' றன்னை நோக்கி
கனமுறை யைந்தாம் வேத மானவிக் கதையி னைத்தும்
புனைமணி மகுடக் கைவேற் புரவலர்க் குரைத்தி யென்றான்
வினைதவிர் மாத வத்து 'வியாதமா முனி'வன் றானே. (9)

அவையிடை குருவைப் போற்றி யருட்செய்மா தவரைப் போற்றி
குவவுடைத் திணிதோள் வேந்தன் குளிர்முகந் தன்னை நோக்கி
யுவமைதீர் 'பார தத்தை' யுரைக்குதுங் கேட்டி நீயே
நவையிற்பாத் திரனு மென்று நன்முனி யுரைக்க லுற்றான். (10)

வேறு

*எங்கண் 'மாதவ' னிதயமா மலர்வரு முதயத்
'திங்கண் மாமர பினிற்'பிறந் திசையுடன் சிறந்தோர்
அங்கண் மாநிலத் தரசர்பல் கோடியவ் வரசர்
தங்கண் மாக்கதை யான்அறி யளவையிற் சமைக்கேன். (11)

*பொருந்த வானுறை நாட்களை நாடொறும் புணர்வோன்
அருந்த வானவர்க் காரமு தன்புடன் அளிப்போன்
திருந்த வானவர்க் கரியவன் செஞ்சடை முடிமேல்
இருந்த வானவன் பெருமையை யார்கொலோ விசைப்பார். (12)

*மண்ட லம்பயி லுரகர்பே ருயிர்ப்பினுன் மயங்கி
மண்ட லம்பொர வருந்திய பெருந்துயர் மாற
மண்ட லந்தனை நிழலெனு மாயினாற் றனது
மண்ட லம்பொழி யமிர்தின்மெய் குளிரவே வைத்தோன். (13)

*பைம்பொன் மால்வரை மத்தினிற் பணிவடம் பிடித்திட்[டு]
உம்ப ரானவர் தானவ ருடன்கடைந் திடவே
தம்ப மானது மன்றியத் தழல்விடந் தணிய
அம்பு ராசியி லன்றமு துடன்அவ தரித்தோன். (14)

*பத்தி ரட்டியி லீரிரண் டொழிந்தபல் கலையோன்
மித்தி ரர்க்கவை கொடுத்துமுன் மீளவுங் கவர்வோன்
'அத்தி ரிப்பெய ரந்தணன்' முகந்[அம்பகந்]தனி லும்
சித்தி ரக்கனன் முகத்தினும் பிறந்தொளி சிறந்தோன். (15)

*அந்தி யாரண மந்திரத் தன்புடன் அவனை
வந்தி யாதவர் மண்ணினும் வானிலு மில்லை
உந்தி யாரழ குடையபே ருரோகிணி வயிற்றிற்
புந்தி யாலுயர் 'புதனை'யப் புண்ணியன் பயந்தான். (16)

* வளைநெ டுஞ்சிலைக் கர்த்தன் மகபதி மைந்தன்
உளையெ ழும்பரித் 'தேரின னு'றவுதொன் றுணரான்
விளைய ருந்தவ விபினமுற் றம்பிகை விதியால்
'இளை'யெ னும்பெயர் மடவா லாயின னென்ப. (17)

* மார காகள மெழுவதோர் மாமல[ர்]க் காவிற்
'றார காபதி புதல்வன'த் தையலைக் காணூ
வீர காமபா ணங்களின் மெலிவுற மயங்கித்
தீர நாமமுஞ் செவ்வியு மிகும்படி திளைத்தான். (18)

* 'புதனு' மந்தமென் பூவையும் 'புரூரவா விளை'த்தஞ்
சுதனெ னும்படி தோற்றுவித் தனரவன் றேன்றி
யிதன லம்பெறு மழகினுந் திறனினு மிலங்கி
மதனெ னுங்கலை முருகனு மெனும்படி வளர்ந்தான். (19)

* பொருப்பி னைச்சிற கரிந்தவன் புத்திரன் மங்கையரில்
'உருப்ப சி'ப்பெய ரொண்டொடி யுருவினிற் சிறந்தாள்
தருப்பொ ழிற்பயி லாலையிற் றுனவர் காணூ
விருப்பி னிற்கவர்ந் தேகினர் அவளுடன் விசும்பில். (20)

* கொண்டு போதலும் 'அபய'மென் ருெருபடி கூவ
அண்டர் யாவரு மஞ்சின ரவருட னடுவோர்
வண்டு சூழணங் கையம் 'மதிமகன் மகனு'ங்
கண்டு தேர்நனி கடாவினன் அசுரர்மெய் கலங்க. (21)

* நிறந்த ருங்குழ லரிவையை நிறுத்திவா ளவுணர்
புறந்த ருஞ்செயற் புரிந்தபின் புரந்'தரன் றூதன்'
மறந்த ருங்கயல் விழியினை மண்மிசை யணைந்து
சிறந்த வன்பொடத் தெரிவையை நலம்பெறச் சேர்ந்தான். (22)

* மாய னுருவில் வந்தரு ளந்தமான் வயிற்றில்
'ஆயு' வென்ருெரு செம்மலை யம்மக னளித்தான்
தேயு வும்பல தேவரும் மகிழமற் றிவனே
மேய விண்புகழ் வேந்தரால் வேள்வியால் மிக்கோன். (23)

*மகுட மும்பெருஞ் சேனையுந் தாணியு முற்றும்
சகட நீரெனச் சதமகம் புரியருந் தவததோன்
'நகுட' நாமவே னராதிப[ன்] நாகருக் கரசாய்
மகுட மேந்திய குரிசிலா யுவின்றிரு மைந்தன். (24)

* புரந்த ரன்பதம் பெற்றபின் புலோமிசை முயக்கிற்
கிரந்தி ரந்தவ னேவலி 'யான'முற் றேறி
வரந்த ருங்குறு முனி'முனி வாய்மையான் மருண்டு
நிரந்த ரும்பெரும் 'புயங்க'மா னவனுமன் னிருபன். (25)

* மற்ற வன்றரு மைந்தன்வேன் மைந்தனு னுயர்ந்த
கொற்ற வன்றிருக் கொற்றவைக் கிதம்புயங் கொடுத்தோன்
முற்றும் வன்பகை முகங்கெட முகந்தொறுந் திசையிற்
செற்ற வன்பெருஞ் செற்றமிற் குணங்களிற் சிறந்தோன். (26)

*'யயாதி' யென்றுகொண் டிவனையே யெவரினுஞ் சிறக்க
வியாத னும்புகழ்[ந்] துரைத்தது மற்றிவன் மேனாட்
புயாச லங்களுக் கிசையவே 'புகரவன்' புதல்வி
குயாச லந்தழீஇ யிருவர்வெங் குமாரரை யளித்தான். (27)

* அன்ன காலையி லவடனக் காருயிர்த் துணையாய்
முன்னி சைந்தபே ரிசைவினு லேவலின் முயல்வான்
நன்ன லந்திகழ் கவிதனக் குரைகெழு நண்பா
மன்ன வன்றிரு மடவா லறிவுறு வண்ணம்; (28)

* ஆழி மன்னனவ் வணங்கினை யணங்கெனக் கண்டு
பாழி வன்புயம் வலந்துடித் துடலுறப் பரிந்து
வாழி தன்மனை மடவர லறிவுறு வண்ணம்
யாழி னோர்பெரும் புணர்ச்சியி னிதயமொத் திசைந்தான். (29)

* மருவி ளங்கொடி யனையமென் மருங்குலாள் வயிற்றிற்
கருவி ளைந்தபின் கருவிளங் கண்ணியுங் காணு
வுருவி ளங்கினுள் உலகுடை நிருபனுக் கிவண்மேற்
றிருவு ளங்கொலென் றழன்றுதன் றுதையிற் சென்றாள். (30)

* சென்று தாதையைப் பணிந்திது செப்பலுஞ் சினவேல்
வென்றி மன்னனை விருத்தனும் வகையவன் விதித்தான்
அன்று தொட்டவ னரைமுதற் பிணிகளா லுணங்கி
இன்று நூறென நரைமுதிர் யாக்கையோ டிருந்தான். (31)

---

* 29 ஆம் செய்யுள் இதன் தாய்ப்பிரதியில் காணப்பட வில்லை. இங்கு வில்லி பாரத அச்சுப்பிரதியிலிருந்து எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது.

* சாரு மன்பினிற் கற்பினிற் சிறந்த'சன் மிட்டை'
சேரு மன்பினு முயர்வினுந் தேசினுஞ் சிறந்து
மேரு வென்றிட மேதினி யாவையுந் தரிப்பான்
'பூரு' வென்றொரு புண்ணிய புதல்வனைப் பயந்தாள். (32)

* அந்த மன்னவன் மைந்தரை யழைத்தெனக் 'குசனார்'
தந்த மூப்பைநீர் கொண்டிரும் மிளமைதந் தென்ன
மைந்தர் யாவரு மறுத்திட மகிழ்வுடன் மூப்பை
இந்த மைந்தனே கவாந்துதன் னிளமையு மீந்தான். (33)

* விந்தை பூமகள் முதலிய மடந்தையர் விரும்ப
முந்தை மாதவம் யாவையும் பலவகை முற்றிச்
சிந்தை யாதரந் தவிர்ந்தபின் சிந்தனை யின்றித்
தந்தை மீளவும் இளமைதன் றனையனுக் களித்தான். (34)

*இடியு மாறுகொ ணெடுமுடி 'யயாதி'யன் றிவர்க்கே
முடியு மாலையு முத்தவெண் கவிகையு முரசும்
படியும் யாவையும் வழங்கியெம் பணி'மதி' மரபிற்
கடியும் நீயென மனமகிழ்ந் தளியுடன் அளித்தான். (35)

* விரதம் விஞ்சிய வேள்வியிற் கேள்வியின் மிக்கான்
சுரத மங்கையர் முலைக்குவ டணைவரைத் தோளான்
'பரத னே'ன்றொரு பார்த்திபன் பாதமு மிசையஞ்
சுரத மின்புற வக்குலந் தனில்அவ தரித்தான். (36)

* சுரர்ச மூகமுஞ் சுராரிகள் சமூகமுஞ் சூழ
விரசு பூசலில் 'வாசவன்' நடுங்கிவென் னிடுநாள்
அரசர் யாவரும் அறுமுகக் கடவுளென் றயிர்ப்ப[ப்]
புரசை நாகமுங் கடவிட நாகமும் புரந்தான். (37)

* முக்கு லத்தினு மதிகுல முதன்மைபெற் றதுவென்
றெக்கு லத்தினி லரசும்வந் திணையடி யிறைஞ்சி
மைக்கு லத்தினிற் 'புட்கலா வர்த்தன' மெனவே
யக்கு லத்தினி 'லத்தி'யென் பவன்அவ தரித்தான். (38)

* கொண்டல் வாசனுங் குபேரனும் நிகரெனக் குறித்துப்
புண்ட ரீகன்முன் படைத்தவப் புரவலன் அமைந்தான்
எண்டி சாமுகத் தெழுதுசீ 'ரியக்க'மா னகரும்
அண்டர் தானமு முவகைகூர் 'அத்தின' புரியே. (39)

*மீன மாகிய விண்ணவன் வினதைமுன் பயந்த
யான மீதெழுந் தருளிவந் திருபதம் வழங்கக்
கான நாண்மலர் கயத்திடைக் கயமும்வெங் காவும்
ஆன மானவர் இருவரும் அக்குலத் தவரே. (40)

* பொருபெ ரும்படைத் தொழில்வ்யப் புரவிதேர் மகமா
மருவ ருந்தொழின் மன்னர்நீ தியின்றெழில் வளங்கூர்
சுருதி யின்றெழின் முதலிய தொழிலினைத் தினுக்குங்
குருவெ னும்புகழ்க் 'குரு'வுமக் குலத்திலங் குதித்தோன். (41)

* வருகு லத்தவ ரெவரையும் வரிசையா லின்றுங்
'குருகு லத்தவ' ரெனும்படி பேரிசை கொண்டோன்
இருகு லத்தினு மாசறு தேசினு லவனுக்
கொருகு லத்தினு முரைப்பதற் குவமைவே றுண்டோ. (42)

அனைய நற்'குரு' குலத்தின ரனேகர்வந் தவனி
யினிதி னுண்டபின் 'சந்தனு' வெனும்பெயர் நிருபன்
கனைக டற்புவி புரந்தன னவன்பெறு கழற்காற்
றனையர் தோய்ந்தருள் பன்னியர் தம்வயிற் றிடையே. (43)

மருவ ருந்தவ 'வியாத'னு மறைமுனி யருளாற்
றிருத ராட்டிரன்' 'பாண்டு'வில்' விதுரனு'ஞ் செனித்தார
'உரக கேதனன்' ஆதியர் தமைமுன்னோ னுதவத்
'தரும' னாதியர் தங்களைப் 'பாண்டு'வுந் தந்தான். (44)

வேறு

அன்புறு பாண்டு வென்னும் அரசன்விண் மீத டைந்த
பின்பு'பாண் டவர்'வில் வித்தை முதலிய பிறங்கக் கற்று
முன்பரா யிருக்கு மேன்மை முடித்துரி யோத னாதி
யென்பவ ரழுக்கா றெய்தி யிருந்தன ரிருந்த நாளில். (45)

வரு'பணிக் கொடியோன்' வாயு மைந்தனுக் கால மிட்டும்
விரி'பகீ ரதி'யிற் கட்டி யுறக்கத்தில் விடுத்தும் பாம்பைப்
புரைவா யுதர் னத்தி டைக்கடிப் பித்தும் பொன்று
தானுறப் பிழைத்த லானே யுளத்திடை துன்ப முற்றான். (46)

குத்திரம் அன்பி லாம 'லவர்'பாற் கொடிய செய்ய
வத்தனை விதமு நாடி 'விதுரனே' யகற்றி னுறல்
வைத்திடுஞ் சென்ம வோரை யிடத்தினில் வைகும் 'வெள்ளி'
யுய்த்திடுஞ் சுகத்தை யெல்லாம் உதவிடுந் தன்மை போல. (47)

* 11 முதல் 42 முடிய உள்ள செய்யுட்கள் வில்லி பாரதம் குருகுலச் சருக்கத்தில் காணப்பெறுகின்றன.

கன்னனே சகுனி தந்தை யொடுமிகக் கலந்து பேசி
மன்னிய வரக்கி னூனே மாளிகை யமைத்தி ருத்தி
யுன்னருங் கொடியன் றீவைத் துருத்தலும் விதுரன் சொல்லால்
அன்னிய வொருவன் காட்டும் வழிகொடு பிழைத்தார் மாதோ. (48)

மங்குறு 'வீமன், பின்ன 'ரிடும்பனை' வதைத்திட் டன்னோன்
றங்கையை வதுவை செய்து தருங்'கடோற் கசனைப்' பெற்றான்
பொங்குசீ ரந்த ணர்க்காய்ப் பொரு'பகா சுரனை'க் கொன்றான்
பங்கமி லேந்து பேரும் 'பாஞ்சால' னிடத்து வந்தார். (49)

கனலிடைப் பிறந்த மின்னை யாங்கனங் கடிம ணஞ்செய்
துனலருஞ் சீர்மைத் தாய 'வத்தின புர'த்தி னுற்றார்
வினையறு கண்ணில் வேந்தும் விதுரனும் புகன்ற சொல்லாற்
றனிகொள்'காண் டவவ னத்தின்' புனத்திடைத் தங்கி னூரால். (50)

தம்புய வலியி னாலே தகத்திசை விசையஞ் செய்தே
யம்புவி முழுதுந் தாமே யாண்டன ரிவர்க ளோடு
செம்பரு திகளா றென்ன வெங்கணுந் திகழச் செய்து
பம்புசீர் அறிஞர் தம்மோ டுலகெலாம் பரவ வாழ்ந்தார். (51)

செருமலி 'விசயன்' றன்னைத் 'தீர்த்தயாத் திரை'செய் திங்ஙன்
வருகெனத் 'தன்ம ராசன்' வழங்கலு மவ்வா றேகிப்
பரிவுடை 'நாக கன்னி' 'பாண்டியன் மகளே'ன் றோதும்
இருவரை வதுவை செய்தாங் கிருந்தபின் 'றுவரை' புக்கான். (52)

கண்ணனுக் கினிய தங்கை ,சுபத்திரை' தனைக்க லந்தான்
விண்ணவர் பரவுங் கண்ணன் விரும்புறு நண்பா லோசை
நண்ணு'காண் டாவ னத்தை நாகரும் புகழத் தக்க
வெண்ணருந் திறல்'வில் லாளி' யெரிக்குண நயந்த ளித்தான். (53)

அக்கினி தேவன் முன்னின் றரிய'காண் டீப' வில்லுந்
தொக்கதோ றுலேவி லாத தூணியு மிரண்டு தேரும்
மிக்குற வளித்தான் அந்த வேலையின் 'மயனை'க் காத்தான்
தக்கவில் விசயற் கன்னோன் மணிமிளிர் சபையொன் றீந்தான். (54)

அச்செயற் பொறுது பாவி யாகிய சுயோத னன்றான்
இச்சைவந் திருஞ்சூ தாடி யினியபாண் டவரைக் கானிற்
கச்சுற விடுத்தான் ஆண்டு கண்டபன் மூன்றின் பின்னர்
நச்சிவந் தவனைக் கேட்க நாடளிக் காமை யானே, (55)

வெய்யபோ ராடி வென்று வெம்பரி மகமே யாதி
துய்யபல் வேள்வி செய்து துரிசற வுலகை யாண்டு
பையவே சொர்க்கம் பெற்றார் பாண்டவ ரென்று சீர்சால்
வையகம் பரவும் வைசம் பாயனன் வழங்கி னானால். (56)

இக்கதை சுருக்க மாக வியம்பினை விரிவிற் கேட்கப்
புக்கதென் னுள்ளம் ஐய, புகலென மதித்த போது
மிக்கநன் மரபி னுள்ளோர் வியனெறி முழுதுஞ் சொல்லித்
தக்கதொல் வியாதன் றந்த தன்மையைப் பகர லுற்றான். (57)

கதைச்சுருக்கச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தம் 215

——:o:——

6. வேத வியாசர் சருக்கம்

அறநெறி வழுவி டாவோர் வசுவெனும் அரசர் கோமான்
உறுதவம் புரிந்தெண் ணில்லா வுயர்பெரு வரங்கள் பெற்றான்
கிறைவர் புகழுந் தானே யிந்திர னாகி வாழ்ந்தான்
அறிஞர்போற் றிடும வன்பா லமரர்கோன் வந்து சொல்வான். (1)

கனியறந் தனையெ துக்காய்ச் சாங்காம் பண்ணு கின்ற
மனிதரைப் புரத்தி நீநான் வானவர் தமைப்பு ரப்பன்
இனிதழி யாத சொர்க்கம் ஏறுவை யதனால் நீயே
யுனலரு மெனக்கு நண்பா யுறுதிகல் லூரவுத் தோளாய்! (2)

உன்னுடைச் சேதி தேசத் துறுமவர் தருக்கி வாழ்க
மன்னிய பொருளைத் தந்தை யிருக்கையின் மைந்த ரானோர்
பின்னமாய்ப் பிரித்தி டாமற் பெருஞ்சுவை வாக னத்தில்
உன்னியே யெடுத்தி டாம லுறக்கட வதுவெல் வேலோய்! (3)

மூவுல கத்தி னுள்ள முதிர்தரு மறங்கள் யாவும்
நீவிரித் தறிக நீயே நீடுமூ வுலக மெங்கும்
போய்வரப் படிக வன்னப் புண்ணிய விமான மொன்று
தாழ்வறத் தந்தேன் கோடி சகமெலாந் தாங்குந் தோளாய்! (4)

வேறு

புலவரென உபரிசர னேனுநாம
 மன்பிஞெடு பொருந்தி வாழி
கலிதவிர்பொன் னிறமருவு வைசயந்தி
 யெனுமொருதன் கமல மாலே
யிலகுறவே தந்தனன்நீ தரித்துக்கொள்
 இதனுலே யதிக வாளி
பலபடைகள் வருத்தவெங் கதையென்றுந்
 தந்தனன்நீ பரித்தல் செய்வாய். (5)

என்றருளிச் சுரபதிசென் ருன்கமலே
 மாலேயுட னிலங்கிச் சோதி
துன்றுவிமா னத்தேறித் தன்புரத்தில்
 வந்தடைந்து சுகிக்கு நாளில்
மின்றிகழ்நா லெட்டுமுழத் தக்கதையா
 திருமுழப்பொன் மேடை மீது
வென்றிதரு தனித்திங்க டன்னினிறீஇ
 மலர்மாலே விளங்கக் காற்றி; (6)

பல்லியமார் கலிபோல முழங்கவதை
 மகவதியாய்ப் பாவித் தன்பால்
நல்லியபூ சனேபுரிந்து மறையவர்க்கோ
 தனமீந்து நடக்கக் கண்டு
மல்லலவன் றேயத்தார் தாமுநடத்
 தினரதனே மகிழ்ந்து விண்மேற்
றெல்லேமக வான்உபரி சரன்எதிரே
 நின்றிறைவ, சொல்லக் கேட்டி. (7)

நீநமைய ருச்சனேசெய் தாயுன்போ
 லப்பூசை நியமத் தோடிங்
கூனமறப் பூசித்தோர் செல்வமுறக்
 கடவதென வுரைத்துப் போனுன்
மான'வசு புர'த்தருகே 'சுத்திமதி'
 நதியைமகிழ்ந்து நோக்கி
யீனமில்'கோ லாகல'மால் வரைகொண்ட
 தில்விழவெ திர்ந்த தாறு. (8)

அதனுனே யக்கிரியைத் தாள்கொண்டு
பிளக்கவுதைத் தரசன் போனான்
புதிதான பிளப்பின்றிப் புதுவெள்ளம்
போயதுநற் புதுவெள் ளத்தின்
மதிவீறு மாணென்று பெண்ணென்று
பிறந்தனவம் மக்க டம்மைத்
துதிசேரு 'சுத்திமதி நதி'மங்கை
யழைத்திறைபாற் றுணைவின் வந்தாள். (9)

வந்திவளென் மகள்'கிரிகை' யிவளையுனக்
கில்லாளாய் மகிழ்ந்து கோடி
முந்துமிவன் பயன்மயறு மிவனைச்சே
னுபதியாய் முன்னிக் கோடி
மைந்துறுவை யெனவுரைத்தாள் அப்படிக்கைக்
கொண்டிறைவன் வாழு நாளின்
நந்தவிலோர் நாட்கிரிகை' பூப்புற்று
நீராடி நயந்தி ருந்தாள். (10)

அந்நாளில் வசுபதி! நீ வேட்டைக்கே
கெனப்பிதுர்க்க ளறைந்து போனர்
உன்னுமற் றவர்சொல்லை மறுக்காமல்
வேட்டைக்கா டுற்று மன்னன்
புன்னுகத் தருவின்கீழ் 'மலையக்கால்'
வரவிருந்த போதில் அந்த
மின்னுசை மேவுதலால் வீரியத்தை
யுகுத்தனன்அவ் வீரி யத்தை; (11)

ஓரிலைதைத் ததிலிட்டுத் தன்பால்வாழ்
பரிசனத்தை யுற்று நோக்கி
யீரமுறக் கொடுபோய்நங் 'கிரிகை'யிடத்
துதவுகவென் றீய்ந்து விட்டான்
ஊரவழி செல்வுழிமற் றொருபருந்து
கலகமிடு துயரி னலவ்
வீரியமொண் புனல்'யமுனை' யென்னும்பே
ராற்றினிடை வீழ்ந்த தன்றே. (12)

'அத்திரி'யென் றொருதெய்வ மகள்'பிரசை'
சாபத்தால் அந்த வாற்றிற்
சித்திரமீ னாயிருந்து விழுங்கிடக்கொர்ப்
பந்தரித்த செயலி னானே
பத்துமதி சென்றிடுபின் வலைஞர்பிடித்
தம்மீனைப் பரிந்து கீறி
வைத்தவுடன் மீன்வயிற்றி லோர்மகளு
மோர்மகனும் வந்து தித்தார். (13)

அனையவர்த மையுபரி சரனிடத்து
வைத்திவர்க ளருமீன் பெற்றார்
எனவுரைப்ப வாண்மகனை 'மச்சனே'னப்
பேரிட்டா னிறைவ னாக்கி
வனிதைதனை யொரு'மச்ச கந்தி'யெனப்
பேரிட்டு வலைஞர் கோமான்
றனதுகரத் தளித்திவளுன் மகளாக
நடத்துகெனச் சாற்றி னானல். (14)

அவடனையோ டத்துறையி னிறீயோட
நடத்துகென வமைத்தான் மன்னர்
கவலைகொளம் மீன்றெய்வ மகளாகிப்
போயினள்'கன்னி தன்பாற்
தவம்புரிய 'பராசரமா முனி'சார்ந்து
பேரெழிலின் றன்மை நோக்கி
உவகையுளத் திச்சைகொண்டு நீயாரென்
றுரைத்திடலு முவந்து சொல்வாள்: (15)

செயலிலா வலைஞர்களுக் கிளையவள்யா
னவரவர்க்குத் திகழன் பூற
மேய'வோ ட' மிதனை நடத்தியிவ
ணுறைவனென விளம்பக் கேட்டுத்
தூயபுகழ் வாசவகன் னிகையுனது
செயலுளக்கண் டிறந்த றிந்தேன்
நேயமொடு கரையேற வெனையோடத்
தேற்றுகென்ன நிகழ்த்தி நின்றான். (16)

மாதவனை யோடத்தி லேற்றியாற்
றிடைநடக்கும் வழியி லென்னை
நீதிமுனி நீயறிந்த வாறென்கொ
லெனவவள் நிலைமை யெல்லாம்
ஆதிமுடி யறியவுரைத் தெனைக்கூடு
கெனமுனிவ னறையக் கேளாத்
தீதறுமென் மீனாறு முடம்பினிடை
யெப்படிநீ சேர்வ தென்றாள். (17)

உன்னுடைய சரீரத்தின் மீன்புலவு
போகவொளிர் கன்னி யாகி
பன்னியிருந் திடுகவுயர் 'யோசனைகந்
தப்'பெயரால் வயங்கு கென்று
தன்னிகரா கியவரத்தை யளித்தனனக்
கணமேநற் றருபூ ணாதி
யின்னலிலா துறப்பெற்று விளங்கினளா
யேர்டத்தி விருந்து கொண்டு; (18)

எல்லவருங் காணவெளி யதனிற்கூட
லியன்றிடுமோ வெனப்ப ராசர்
நல்லமுனி மூடுபனி தனைவிதித்துச்
சுரதநெறி நடத்தி னானல்
அல்லனுறு மப்பொழுது சதிரொளியு
மறையுருவு மதில்மெய்ஞ் ஞானத்
தொல்லுணர்வு முடையவனாய் வேதவியா
சன்பிறந்தான் றுதிக்க யாரும். (19)

உற்றபரா சரமுனிவன் யோசனைகந்
திக்கருளை யுதவிப் போனான்
மற்றுமவ னுதித்தமுனி தண்டுகமண்
டலசடில மகுடத் தோடங்
கற்றமறு தாய்முன்னர் நின்றுனக்கு
வேண்டியிடு மமையந் தன்னில்
நற்றியெனை நினையென்று வனத்தினிடைத்
தவஞ்செய்ய நயந்து போனான். (20)

அந்தமுனி வேதத்தை நான்குவகை
யாய்ப்பிரித்தா னதுவு மின்றி
நந்தவரும் பிரமாவி னஞ்சத்த
ளைகயினு னயந்து மூன்று
சந்தமுறு முலகத்துக் குபகார
மாகியுறத் தவாத வன்பாற்
புந்திதரும் பாரதத்தை நான்குபா
லும் பொருந்தப் புகன்று னன்றே. (21)

வேதத்தை யொருதட்டில் பாரதத்தை
யொருதட்டில் விளங்க வைத்தாங்
காதித்தொன் முனிவர்பதி நிறுத்திடலும்
பாரதமே யதிக மாகத்
தீதற்ற தவமுனிவர் யாருமுளத்
ததிசயித்துச் சிறப்பிற் கொண்டார்
பேர்தத்தை யுதவுமதிற் சகச்சிருட்டி
வழிகூறப் புரிந்து கேட்டி. (22)

வேதவியாசர் சருக்கம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 237.

7. சகவுற்பத்திச் சருக்கம்

சுராசுரர் முதலானோர் கூறுகி
வருங்'கங்கை சுதனே யாதி
குருகுல'வீ ரர்கள்கதை யாவர்க்குங்
கூறவரி தென்று கூறப்
பொருசமரில் அவர்மடிந்த காரணத்தை
யென்றனக்குப் புகலு கென்று
விரிகதிர்வாள் வேந்தனுரைத் திட'வைசம்
பாயனன்'றுன் விளம்ப லுற்றுன். (1)

இறைவர்தலை முறைகளெழு மூன்றையுமோர்
மழுராம னிறுத்த லானே
நிறையுமவர் மனைவியர்கண் மறையவரைப்
புணர்ந்துசதா நிலத்தின் மீது

குறைதவிர வீன்றிடனு மவராலே
யறநெறிகள் குலவி யெங்கு
முறைசனங்க ளிறவாமன் மிகுத்தமையாற்
றுங்கரிதென் றுலைந்தாள் பூமி. (2)

உலைந்'தவனி'' வதிமான், முக் கண்' ணுறையுஞ்
சபையினிடை யுற்று நோக்கி
இலங்குசனங் களைச்சுமக்க லாற்றேன்றீர்த்
தருள்கவென விறைஞ்ச லோடும்
மலங்கலரி சுராம்சங் 'காங்கேய'
ஞதியரா கவசு ராம்சம்
வலங்கொள்'சிசு பாலன்'முத லோராகப்
புவிமீது வகுத்தான் 'வேதன்'. (3)

வகுத்தவனி பூபாரந் தீரவொரு
வர்க்கொருவர் மனத்தின் மீது
பகைத்துமுடிந் தாரென'வா னவர்கள்தா
னவர்கள்'உற் பவித்த வாறும்
மிகைத்தவ்வோர் 'சராசரமா'ய்ப் பிறந்தமையுந்
தெரியமிக விளம்பு கென்று
'சகத்திறைவன்' உரைத்திடலும் உளமகிழ்ந்து
'கதைமுனிவன்' சாற்ற லுற்றான். (4)

'அய'னிதயந் தனிற்புனித 'மரீசி'யுடன்
அத்திரியங் கிரசன் அன்பின்
செயிரில்புலத் தியன்புலகன் கிருதுவெனு
மறுவர்களுஞ் செனித்தா ரவர்க்கு[ட்]
சயமிலகு 'மரீசி'யிடைக் 'காசிபன்'வந்
துதித்தனனத் தவத்தோன் றன்பால்
வியன்மருவு பூதங்கள் சராசரங்கள்
பிறந்தனகாண் வீர வேலோய்! (5)

விதிவலக்கால் பெருவிரலிற் 'றக்கனு'தித்
தனனிடக்கால் விரலின் மிக்க
புது'வருணி' பிறந்தனளாங் கிருவர்க்கு
மாயிரம்பேர் புதல்வர் வந்து

மதியதனால் யோகநிலை கண்டுகதி
யடைந்தனர்பின் வயங்கு தக்கன்
விதிமுகைய ரைம்பதுபே ரைப்பயந்தான்
உலகமெலா மிகவுண் டாக. (6)

அவரினுயர் கீர்த்தியிலக் குமிதிருதை
யேமேதை புட்டி(யருகி) சிரத்தை
தவகிரியை விருத்திலச்சை மதியென்னும்
பதின்மரையோர் தரும னை
குவலயமான் 'மனுவுக்கு'க் கொடுத்தனன்மற்
றிருபத்தேழ் கோதை மாரை
நவமதிக்கு நல்கினனுங் கவர்கள்'அசு
வனி'முதலா நாம முள்ளோர். (7)

அரிநிகர்கூர் விழியதிதி திதிதனுக்கா
லைதனுயு வாயு பின்னை
விரையளகச் சிங்கிகையே மனுவென்பாள்
சுரபியொடு வினதை சீராற்
பொருவருங்கத் துருமுனியே யெழிற்குரோதை
யரிட்டையெனப் புகலப் பட்ட
உரிமைகொள் பதின்மூவரையுங் காசிபமா
முனிவனுக்கன் றுதவி னனால். (8)

அரியபுக ழுடையந்தப் பதின்மூவர்
தங்களிலோ ரதிதி தன்பால்
பொருவிலருந் தாத்துருமித் திரன்அரிய
மன்சக்கிரன் புகழ்க்க பர்த்தி
துரிசிவரு [1]ஞஞ்சில்விவச் சுவான்பூடா
சவிதாதுவட் டிரனே விட்டு
விரவுகதிர்ப் புத்திரரென் றுறிரண்டா
தித்தர்சுரர் விரைந்து தித்தார். (9)

பிறங்குதிதிக் கிரணியன்வந் துதித்தனன்மற்
றவனுக்குப் பிரக லாதன்
சிறந்தசமு லாதனடற் (சிவிய) [கிலாத]னொடு
விலோமன்வாட் கலனென் றைவர்

1. இங்கு வருணன், அம்சுமான் என்ற இருபெயர்கள் குறிக்கப் பட்டுள்ளன.

பிறந்தனரான் னவரினுயர் பிரகலாத
னுக்குவிரோ சனனே கும்பன்
பிறங்குபடை நிகும்பனெனு மூவர்பிறந்
தனர்வரிவின் விரோச னன்பால்; (10)

மாவலிவந் துதித்தனன்அம் மாவலிபால்
வாணன்முத னூறு மைந்தர்
மேவினர்பின் றனுவுக்கு விப்பிரசித்
தாதியாய் விளங்கி நாற்பான்
ருவில்சுரே சருதித்த னர்அவர்க
டனையர்அவர் தனைய ராஞேர்
பூவுலகி லளவின்றிப் பெருகினர்பின்
காலையெனும் பூவை தன்பால். (11)

விசனரோ தாதிகள்வந் துதித்தனர்பின்
றனுயுவுக்கு விசான் றீரன்
றிசைபெறுவோர் விசையன்வுருத் திரனென்னு
மவர்பிறந்தார் சிங்கி கைக்கன்
றுசுவிராகு பிறந்தான் மனுவின்பாற்
கந்திருவ ருதித்தார் பல்லோர்
சு(கி)[சி]யமுதா நூற்றுப்பதி னுயிரமின்
னுருதித்தார் சுரபி தன்பால். (12)

வினதையிட மனூரனெடு கருடனிரு
வருமுதித்தார் புகழ னூரன்
றனதிடைச்சம் பாதிசடா யுபிறந்தார்
கத்துருவின் றன்பாற் சேடன்
கனநிலைவா சுகியாதி பணிபிறந்த
குரோதையிடைக் கணன்பி றந்தான்
புனிதமுடை யரிட்டைக்குச் சித்தர்முத
லோர்பிறந்தார் புவியின் மீது. (13)

உனலருமங் கிரீசனுக் கமரர்குரு
சமுவத்த யோக சித்தி
யெனுமொருபெண் பிறந்தனரத் திரியிடத்தி
லிளவலரா யெல்லாம் வல்ல

புனையருள்சேர் முனிவர்பிறந் தனரரக்கர்
பலர்பிறந்தார் புலத்தி யன்பால்
வினையிலரும் புலகன்பாற் கின்னரர்கிம்
புருடர்பலர் விரைந்து தித்தார். (14)

கிருதுவின்ப தங்கசன கசாம்பிபிறந்
தேவலனுங் கேடி லானுக்
கொருபிரசா பதிபிறந்தா னவனிக்குத்
தாம்பிரையே யுரிய புத்தி
பிரிவிலாசு மனசுவியே சுசனைரதை
சாண்டிலியே பிரபா சைப்பெண்
குரிசறுமிவ் வெழுவருந்தே வியரானார்
அவரினுயர் தாம்பி ரைக்கு. (15)

சுகவருணன் புத்திக்குத் துருவன்உள
மகிழ்சுமன சுவிக்குச் சோமன்
தகுசுதனைக் கனிலமிகு ர்தைக்குநகு
டன்பொருவில் சாண்டி லிங்[க்]காங்
குகருமக் கினிகுலவு பிரசாசைக்
கரும்பிரத்தி யூட னோடு
மகிழ்பிரபா வெனப்பட்டோர் பிறந்தனர்மற்
றவரட்ட வசுக்க ளானார். (16)

அந்தவரு ணன்றாவந் துதித்தனனத்
தருமனென்பான் றுருவ னுக்கு
வந்துபிறந் தனன்சோமன் சோமனுக்கு
மற்சன்முதன் மூவி ரண்டு
புந்திமகார் வந்தனர்நன் னகுடனுக்குச்
சோதியரும் புனகுருத்த வனை
னுந்துமணி வன்றனக்குப் புலோமனும்விஞ்
ஞானரதி யும்பி றந்தார். (17)

அக்கினிக்கு வீறுகுமா ரன்பிறந்தான்
அரும்பிரத்தி யூட னுக்கு
மிக்குயர்தே வலன்பிறந்தான் பிரபாவென்
பானுக்கு விசுவ கன்மன்
தக்கமக னுகிமிகு சிற்பிரசா
பதியாகித் தடவி மானந்
தொக்கவிர தங்களணி யாதிபுரிந்
துதவிமிகத் துளங்கி னுனல். (18)

வரமுனிவர் பணிந்துதிபா ணித்துருகுந
தாணுவின்றன் மனத்தில் பாலே
மிருகவியா தன்சறுவ னசைகபுத
னெடுபுகழே மிகுங்க பாலி
தரைபுகழ்நித் தியன்பவனே பிஞகியுகிர்ப்
பி[பு]ரத்தினனே தானு மற்று
மொருவாம னேசனெனும் உருத்திரர்
பதினொருவர் உதித்தார் வந்து. (19)

தனிவனசன் வலக்கையிற் றருமனெனு
மனுப்பிறந்தான் றரும னுக்கு
முனேகொள்சமன் பொறுமையனுங் காரனெனு
மவர்பிறந்தார் முதன்மை யான
வினியசவி தனுக்குமுயர் வடவையுருத்
துவட்டிரைக்கு மெழில்பெற் றோங்கி
வினேயிலசு வினிதேவர் பிறந்தனரால்
உலகினுள வியாதி தீர்ப்பான். (20)

கமலனுளத் துயர்பிருகு பிறந்தனனப்
பிருகுவின்பாற் கவிபி றந்தான்
சமமில்கவிக் குயர்வெள்ளி பிறந்தவுணர்
குருவானன் றயங்க வற்குக்
கமமுடைய துவட்டிரையும் விதாத்துருவும்
பத்திரனுங் கன்மன் றூனு
மமையினெடு பிறந்தவுணர்க் கோமகரு
மமர்புரியு மவர்க ளானர். (21)

அப்பிருகு பாற்சவனன் பிறந்தனன்மற்
றவனுக்கே யவுரு வன்றூன்
வைப்பெனவே பிறந்தனன் மற் றவனுக்கிரு
சீகன்முதன் மைந்தர் வந்தார்
மெய்ப்புனித ருசிகருக்கு மகிழ்சமதக்
கினிபிறந்தான் மிகும வன்பால்
ஒப்பின்மழு ராமனுதித் துலகிலதி
சயமாகி யுற்ற னன்றே. (22)

பின்னுமுயர் பிரமனுக்குத் தாதா[வு]ம்
விதாதாவும் பிறந்து மேன்மை
துன்னுமனு வுக்கினிய ராணூர்அவ்
விருவருக்குந் துணைவி யாகி
மன்னுமிலக் குமிபிறந்தாள் அவண்மனத்
தளவில்லா மைந்தர் வந்தார்
பன்னருஞ்சேட் டன்றருமன் சுரநதியென்
பவரைவரு ணன்ப யந்தான். (23)

அவரினுயர் தருமனுக்குப் பயனெடுமா
யன்மிருத்தென் றுங்கு தித்தார்
தவமுறுந்தா தாவுக்குக் கிரவுஞ்சி
சிரேனியொடு தக்க பாசி
நவயில்சுகி புகழ்திருத ராட்டிரியென்
றரிவையர்க ணயந்து தித்தார்
உவமையிலக் கிரவுஞ்சிக் கியற்காக
முலூகங்கள் உதித்த வன்றே. (24)

சேனிக்குச் சேனகபோ தம்பிறந்த
பாசிக்கும் செய்ய வாசங்
காணினுறு பருந்துதித்த சுகிக்களவிற்
சுகம்உதித்த கடிதின் மற்றும்
ஊனமி லாத்திருத ராட்டிரைக்குப்
பகமன்ன முயர்நே மிப்புள்
ஆனவையோ டறக்குருவி முதற்குருகு
பிறந்தனகா ணளவி லாமல். (25)

வியன்மருவு காசிபன்றன் மனைமுனியென்
பவளுக்கு மிருகி யென்பாள்
உயர்மிருக மடந்தையரி பத்திரமதி
மாதங்கி யொளிர்சார்த் தூலி
நியமமுறு சுவேதையொடு சுரபிமிகு
சுரசைபுகழ் நிரையே யென்னும்
பயனுடைய பத்துமட வார்பிறந்து
விளங்கினராற் பகரன் னேரில்; (26)

மிருகிக்கு மிருகங்கள் மிருகமடந்தைக்
கருங்காடி விளங்க ரிக்கு
மருவரிய வானரங்கள் பத்திரமதிக்
குயர்அயிரா வதம்பே ராகி

வருமயிரா வதத்துக்குத் தேவகஜ
கங்கள்மகிழ் மாதங் கிக்குக்
கரிகளிருஞ் சார்த்தூலங் கரிபுலிகள்
பிறந்தனகாண் கால வேலோய்! (27)

சொல்லரிய சுவேதைக்குத் திசைக்கரிகள்
பிறந்தனகாண் சுரசை பாலே
யெல்லுலவு ரோகிணிபத் திராங்கியொடு
கந்தருவி யெனப்பி றந்த
மெல்லியரில் உரோகிணிக்குப் பசுக்கள்பத்
திராங்கிக்கு விருக்கம் வெற்பு
வல்லியுதித் தனகுதிரை பிறந்தனகந்
தருவியெனு மடந்தை தன்பால். (28)

வேறு

இப்படி யுலக மெல்லா மியைந்துதித் தனவிக் காதை
செப்பினர் கேட்போர் யாருந் திருவளர் செல்வம் பெற்று
தப்பற விளங்கு வர்க டானவர் அமரர் கூறுந்
துப்புடை யரசர் வந்து பிறந்தது சொல்வங் கேட்டி. (29)

நாரணன் கூறே யாகி நற்பல தேவன் கண்ணன்
தாரணி விளங்க வந்தார் தகுமா மகளின் கூறாய்
யோரணி பன்னீ ராயி ரம்பெயர் மடவார் வந்து
காரண மான கண்ணன் கலந்திட மகிழ்ந்தி ருந்தார். (30)

சனற்குமா ரன்கூ றாகித் தகுபிரத் தியும்னன் வந்தான்
இனப்படு தேவர் கூற்றில் எதுவொடு விருட்டி போசன்
கனத்துவந் தானே யாதி காவலர் பலர்பி றந்தார்
தனிச்சிசு பால னாகி' யிரணியன் சார்ந்தா னன்றே. (31)

வசுவாடு புகர்தா மாதி வரவுருத் திரா ருக்கன்
இசைபெறு துவாப ரப்பே ருகம்இவ ரஞ்சந் தன்னில்
திசைகொள்வீ டுமன்று ரோணன் றிறலுடை யசுவத் தாமன்
உரைபெரு கிருபன் கன்னன் சகுனிவந் துதித்திட் டாரால். (32)

அனனெனப் பட்ட தோர்கந் தருவன்அம் பிகைசே யானான்
வனமுறு சுமதி யென்பாள் மாறிற்காந் தாரி யானாள்
துனிதரு கலியன் றானே சுயோதன னாகி வந்தான்
சனமுடை யரக்கர் தாந்தாந் துச்சாத னன்முத லானோர். (33)

பிரகலா தன்பெ ரும்போர்ச் சமுகிலா தனசியே பெற்றி
திரிவில்வாட் கலன்கூ ருகிச் சல்லியன் றிருட்ட கேது
வெரிபுரை துருவ சேனன் பகதத்தன் எனப்பி றந்தார்
அரியவிப் பிரசித் தென்போன் சராசந்த னாகி வந்தான். (34)

வயசிரன் சுவான போரா வயம்புணக் கனமூ ரத்தன்
சயமுறு சங்கன் வேக வந்தன்என் பவர்க டாமே
அயர்வில கேகய தேசத் தரசராய் வந்து தித்தார்
பெயர்கொள்விப் பிரவி ருத்தி பெருஞ்சிமு வாண னானன். (35)

ஏகலவ் வியனே வேக வந்தனென் பவர்க டாமே
மேகநேர் பிரதி வந்தியன் நமித்தேச னாகி வந்தார்
ஓகையிற் சுபனன் றானே யுக்கிர சேன னானன்
.... (36)

மகிழ்சு வக்கி ரீவன் கிருதவன் மாவாய் வந்தான்
தருவிட பருவன் றீர்க்க பிரசனாய்ச் சனித்தி ருந்தான்
திகழ்பிட தச்சு வன்றான் றீர்க்கவச் சிரனே யானன்
மிகுபுக ழாசன் றானே விடநிகர் மல்ல னானன். (37)

அசுவமா பதியே ரோம சமானனா கிப்பி றந்தான்
விசையமா ரதிவன் சேனா விந்துவா கப்பி றந்தான்
திசைபெறு விரூபாக் கன்றான் சித்திர வன்ம னானன்
அசைவிலா வான கன்றான் சிறுபவா மலிக ரானார். (38)

சண்டவத் திரனே பூரிச் சிரவனாய்ச் சனித்தி ருந்தான்
மண்டிய நிகும்பன் றானே தேவாபி யாக வந்தான்
அண்டருங் கும்பன் சோம தத்தனா கிப்பி றந்தான்
எண்டரு சாம தன்றான் இயற்சுபா ரிசனே யானன். (39)

சந்திரன் சந்திர வன்ம னாகியே சனித்தான் போரில்
பிந்திடா வக்கு ரூரப் பேருடை ருசிக னானன்
சிந்து நேர் கபிட்டான் றய்ம னசேனனா கப்பி றந்தான்
மைந்துடை மயூரன் றானே விசிவக னாகி வந்தான். (40)

அணிதரு தீர்க்க னவன் காசியி னரச னானன்
குணிதமில் படைச்சு பாணன் குரோதகீர்த் தியனே யானன்
துணிவுறு சண்ட கன்றான் சுனகனா கப்பி றந்தான்
மணமலி யலங்கல் வீரன் வசுமித்திர னாகி வந்தான். (41)

வலனுயர் பாங்கில்தே சாதி பதியென வந்தான் மிக்க
மலிபுக ழாயு மச்ச மண்டல வாச ஞனன்
சலமுடைக் குரோத கன்றன் றகுதண்டத் தானுய் வந்தான்
உலவில்வல் லசுர ரஞ்சத் துதித்தனர் அளவி லாதோர். (42)

நேயமில் விருத்தி ரன்றன் நெடுபிளி மந்த ஞனன்
பாயசீ ராசன் றனே பவுண்டர வாசு தேவன்
ஆயினன் குய்ய கன்றன் அருளறு சிகண்டி யானன்
பேயசீ ரியமன் றனே வில்விதுர ஞகிப் பிறந்தான். (43)

மருத்துவர் தங்கூ றகித் துருபதன் மகிழ்வி ராடன்
திருத்துசாத் தகியென் போர்கள் செனித்தனர் சித்தி யோடு
விருப்புறு புத்தி யென்ன மேவிய தெய்வ மாதர்
உரைக்கரும் புகழ்சேர் குந்தி மாத்திரி யாகி யுற்றர். (44)

தருமனே தரும ராச ஞகியே சனித்தான் வாயு
விரிதிறல் வீம ஞனன் இந்திரன் விசைய ஞனன்
திரமருத் துவர்க டாமே நகுலசா தேவ ரானர்
வார்புகழ் திட்டத் துயும ஞகியே யங்கி வந்தான். (45)

என்றவர் தன்மை யெல்லா மிவ்வகை யுரைப்பக் கேட்டு
துன்றிய மகுட வேந்தர் தொழுசன மேச யன்றன்
மன்[றில்]நீ யின்னேர் தம்மை விரிவினில் வழங்கு கென்ன
முன்றிகழ் கருணை வைசம் பாயனன் மொழித லுற்றன். (46)

சகவுற்பத்திச் சருக்கம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 283.

—o—

8. யயாதிச் சருக்கம்.

விவசுவத னென்னுங் கதிரவன் றனக்கு
வீரவை வசுவத மனுவு
மூவப்புறு மயனும் யமுனையுஞ் சனியு
முயர்பதி யும்பிறந் தனராற்
பவித்தவம் மனுவின் மகள்இளை யிடத்தே
பரிவுறு புதன்பிறந் தனன்மற்
றவற்குளவ் வேற்கைப் 'புரூரவன்' பிறந்தா
னவன்புவி முழுதையும் புரந்தான். (1)

அவ்விறை யுலோபந் தன்னொடு கூடி
யந்தணர் பொருளெலாங் கவர்ந்தான்
மெய்விதி யதுகேட் டருளொடு விடுத்த
மிகுஞ்சனற் குமாரனை யெனுதை
மைவரு மாசன் றன்னையுன் மத்த
னுகவே மயலுறச் சபித்தான்
அவ்விய மில்லா முனியகன் றனன்கந்
திருவலோ கத்திடை யடைந்தான். (2)

அந்தவா னுலகத் துருவசி யோடுசேர்ந்
தாயுவென் பவன்முத லாறு
மைந்தரைப் பெற்றன் வரமி லாயு
மதியுடை 'நகுடனை' யீன்றான்
முந்துமக் 'நகுட' னறுமா மகத்தை
முடித்துவா சவபத மடைந்தான்
புந்திகொ ணகுடற் கியல்புடன் 'யயாதி'
பிறந்தனன் புவியெலாந் துதிக்க. (3)

அருள்புனை 'யயாதி' சரித்திரந் தன்னை
யறைந்திடி லதிசய மடையும்
பொருள்பெற வுரைத்துங் கேட்டிவெவ் வீரம்
புனைவிட பருவனென் றுரைக்கும்
வெருள்விட மனைய வசுரனுக் குயர்ந்த
வெள்ளியோ ரியற்குரு வாகி
இருள்புனை யவுணர் குலமெலா முயர்வா
னிருந்தன னிருந்திடு மளவில்; (4)

விண்ணவ ரவுணர் போர்செயு மிடத்து
'மிருதசஞ் சீவன' மனுவான்
எண்ணிலா திறந்த வசுரரைப் 'புகரோன்'
எழுப்பியே செய்தல்கண் டமரர்
உண்ணலி வொடுமம் மனுவினைக் கற்பா
னுறுபவர் யாரென வுன்னிக்
கண்ணரு ளுடைத்தங் குருமக னுகுங்
கசனிடத் தடைந்துரை செய்வார். (5)

நீயெம தாசான் குமரனெங் கிளையை
நிறுத்துவ துன்கடன் நீயே
போயருஞ் சுரர்கள் இறந்திடா துறைவான்
புகரிடத் தடைந்தவ னுளத்துக்

கேயநன் குறுத்தி யந்தமந் திரத்தைக்
கற்றுவா வெனவே விடுத்தார்
தூயநற் 'கசனு'ங் கொடுவிட பருவன்'
சுகத்துறு புரத்திடை யடைந்தான். (6)

சுக்கிரன் றன்னைக் கண்டடி தொழுது
சுரர்குரு வுதவிய மகன்யான்
மிக்கவுன் னேவல் செய்திட வடைந்தேன்
மிகவருட் புரிதியென் றிடலும்
புக்கவக் கசன்றன் மென்மொழி சாந்தம்
புந்திமற் றிவற்றினை நோக்கிப்
பக்கமுற் றுயர்மா ணுக்கனு யாக்கி [ப்]
பரிவுடன் அருள்செய விருந்தான். (7)

செய்யெனு முனமே செய்துமா சான்றன்
றிருமகள் 'தேய்வயா னைக்கு
கொய்யுமொண் மலர்கள் கனிபல வளித்துங்
கோதறச் சேவைசெய் தொழுகும்
வய்கலி லவன்மேற் குரவனுண் மகிழ
வருட்செய லறிந்துவா ளவுணர்
மெய்யுறு மவனைக் கொன்றுறப் பிணித்தோர்
விருக்கமீ திருத்திவிட் டனரால். (8)

கசனவன் வராத தன்மைகண் டாசான்
அருண்மகள் கருத்தினி லயர்ந்து
நிசியும்வந் தணுகிற் றேமதே னுவுநன்
னெறிபட வந்தது கசன்றான்
நசையுற வருதல் கண்டிலன் என்ன
நற்பிதா வுளக்கனு ருடி
விசையவா ளவுணர் கொன்றதை யறிந்து
மிருதசஞ் சீவியை விடுத்தார். (9)

விடுத்தவம் மனுவுங் கசன்றனை யெழுப்பி
வருதலு மிகமிக மகிழ்ந்தாங்
கிடுக்கணற் றுறைநா டன்னின்மற் றொருநா
ளியல்புறு மவனைவெவ் வசுரர்
பிடித்துயி ரகற்றி யனலிடை யெரித்துப்
பிறங்குடற் பொடிதனை எடாவுட்
குடித்திடு மதுவிற் கரைத்துண வுதவக்
குரவனுங் குடித்தறி வயர்ந்தான். (10)

அன்புறு கசன்வந் தணுகிடா மையினல்
அருட்குரு மகளுளர்ந் தளர்ந்து
தன்பிதா வோடுசொற் றிடுதலும் ஞானத்
தனிக்கணு லெங்கணு நோக்கித்
துன்பமாய்த் தன்னுள் நோக்கிடக் கண்டு
சொல்லரு மந்திர மதனல்
இன்புற வெழுப்ப யான்வரும் வழிகாட்
டென்றனன் உளத்திடை நினைத்தே. (11)

மற்றுநம் வயிற்றைக் கீறியே வரின்எம்
மருவுயிர்க் கிடர்வரு மென்னுத்
தன்னுளே யிருக்கு மவன்றனக் கினிய
சாற்றரு மரியசஞ் சீவி
யென்னுமந் திரத்தை யாங்குப தேசித்
திருத்தலும் அகல்வயி றதனை
யுன்னியே கீறி வந்துதன் குரவ
னுயிரையும் அளித்தன னவனே. (12)

தானவர் குரவ னெழுந்துபின் 'மதுவாற்
றனதுள மயங்கிய தறிந்திங்
கூனமா மதுவைக் குடித்திட லாகா
தின்றுதோட் டதனையுண் டவர்கள்
ஊனமார் நிரையம் புகுவரேன் றுரைத்தான்
உயர்கசன் அவரிரு சரணப்
பூநனி வு[ண]ங்கி யங்கமு நிழலும்
போலருஞ் சேவைசெய் திருந்தான். (13)

இப்படிக் குரவ னிடத்தினி தொழுகி
யிருந்துபன் னுள்விடை பெற்றுத்
துப்பிதழ்த் 'தெய்வ யானிபால் வந்து
தொன்னகர்க் கேகுவ லென்ன
வைப்பெனு முனையான் பிரிந்திட லாற்றேன்
வரியெனை நானுமோர் கன்னி
யொப்பரும் பிரம சாரிநீ யெனக்கு
மாகுமிங் கேதுவா மென்றுள். (14)

அவ்வுரை கேளாத் தன்செவி பொத்தி
யருள்குரு தனையை!நீ தங்கை
செவ்விய தருமந் தப்பலா காதென்
றுரைத்தசொற் செவியிடத் தணுகப்

பொய்வரு மிடையாள் நெஞ்சகம் புழுங்கிப்
புந்தியை யழித்தனை யுனக்கின்
றவ்விடை பெற்ற மந்திரம் பலியா
தேகவென் றிட்டனள் சாபம். (15)

நானுயர் தருமந் தப்பின திலையே
நன்றி[து] வென்னிடைக் கேட்போர்
பானனி பலிக்கக் கடவது நீதான்
பகாறம் பிழைத்தனை யன்றோ
வூனமின் மறையோர் மணஞ்செயா தொழியக்
கடவதென் றுரைத்துவிண் ணிடைப்போய்
வானவர்க் குபதே சம்புரிந் திருந்தான்
மறைநவிற் கசனென்னு முரவோன். (16)

ஆங்கதின் பின்னர் கொடுவிட பருவன்
அளித்தசன் மிட்டையென் றுரைக்கும்
பூங்கொடி தன்பால் ஆயிர மடவார்
போந்துசே வித்திடக் கடிதின்
வாங்கடைத் தெய்வ யானைதன் னுடனே
வனத்திடை புகுந்தொரு தடங்கண்
டோங்கிரு கரையிற் கலையவிழ்த் திருத்தி
யுறுபுன லாடினர் மகிழ்ந்து. (17)

ஆடுறும் பொழுதோர் சூறைவந் தடிப்ப
வணிகலை சிதறியே விடலுந்
தேடருங் குரவன் மகளணி கலையைத்
திருந்துசன் மிட்டைகட் டினளால்
ஊடுசன் மிட்டை' கட்டுறுங் கலையை
யொண்கரத் தேந்தியுன் றனது
ஈடிலாக் கலையான் புனைந்திடத் தகுமோ
பெற்றி யாசிரியர் மகள்யான். (18)

எனவவ ளுரைப்ப வுன்பிதா வானோன்
என்பிதா விடத்தடைந் திருந்து
மனமகி ழாசி கூறுவன் அவன்றன்
மகளெனப் படுநீ தானே

துணிகொடு நிந்தை கூறுவை யென்று
சொல்லரு மொருவ[ற்று]ங் கிணற்றில்
நணிபிடித் துந்தி வீழ்த்தியாங் 'கவுண
நாரி' தந் நகரிடைப் புகுந்தாள். (19)

வேறு

அப்பொழுதி னிவ்விடை யடற்படை யயாதி
யொப்புடைய வேட்டையி னுவப்புடை யனுகி
மைப்பகடு கேழலரி யாதியை வதைத்தே
யெய்ப்பொடுதண் ணீர்பருகு மெண்ணமுடன் வந்தான். (20)

வந்தனன் அருஞ்சிறு கிணற்றிடை மயங்கிப்
பைந்தழை பொருந்துகொடி யைக்கடிது பற்ற
நைந்தழுது கொண்டருநல் நங்கையுறல் கண்டு
சிந்தையி னிரக்கமொடு தேறவுரை செய்தான். (21)

நீயெவ ரளித்தமகள் கூவலிடை நீசென்
றேயவிழு காரணமென் இங்ஙனுரை யென்ன
மூயவி(வ்) வனத்தினுனை முற்பொழுது கண்டேன்
நாயக! சிறந்த'புகர்' நல்குமகள் யானே. (22)

மானவயி லோய்!எனது மன்னுபெயர் 'தேய்வ
யானை'யெனை யன்புட னெடுத்துவிடு கென்ன
யானையனை யான்உயர் வலக்கர மளித்தே
கானிடை மடக்கொடி களிப்புற வெடுத்தான். (23)

எடுத்தவன் விடுத்தபின் எழிற்புர மடைந்தான்
மடக்கொடி தனித்துறைதல் கண்டொரு மடந்தை
படுத்தவுணர் தங்குரவ னோடுசொல வன்னான்
இடுக்கணுற வந்தசெயல் என்கொல்!என வந்தான். (24)

வேறு

துன்பமுற் றிடலெ னன்னாய்! சொல்லென நிகழ்சன் மிட்டை
வன்புசெய் ததையு ரைத்துன் னகர்க்குநான் வருவ தில்லென்
றன்புற மொழிந்தாள் கேட்டாண் டன்னவ டந்தை தானும்
உன்பினே வருவ னென்றுன் உதுவிட பருவன் கேட்டான். (25)

அக்கணத் தோடி வந்தே யணிதிகழ் தெய்வ யானைக்
கெக்குண மியைந்த தெவ்வா றிய[ற்று]வ னெனவ ணங்க
மிக்கசன் மிட்டை தன்னை யாயிரம் மின்ன ரொன்றன்
பக்கலிற் றாசி யாகப் பணித்திடி லெனக்கொப் பென்றாள். (26)

அந்தவா றவரை யெல்லா மளித்தனன் அவுணர் கோமான்
சந்தத மவர்க ளோடு சார்ந்[து]நீ டவ்வ னத்தின்
முந்துறு தெய்வ யானை முருகுகொப் பளிக்குந் தெய்வக்
கொந்தவிழ் மலர்கொய் தின்பங் கொடுவினை யாட வந்தாள். (27)

தன்னிக ருந்திக் கொப்போ தானெனக் கொய்து நோக்கி
மின்னிடை நுடங்க நின்று மன்கரத் தால்வ ளைத்த
புன்னையங் கொம்பின் மூய்[ப்] பூம்பொடி யுகுத்த லானே
பொன்னினாற் செய்த பாவை போன்றிலங் கினளொ ருத்தி. (28)

பண்ணமை தீஞ்சொற் செவ்வாய்ப் பாவையன் னவளொ ருத்தி
வண்ணநற் றிலகந் தன்னை நோக்கலு மலர்ந்த தம்ம
புண்ணிய மடுவைத் திம்ம 'பூபதி' யெதிர்வந் துற்றோர்
உண்ணளி னக்கு மூாம்பே ருவப்பொடு மலர்ந்த தொப்பாம். (29)

கொண்டலங் குழலா ளோர்பெண் குளிர்மொழிக் குருகிக் கொங்கு
வண்டுகள் இசைகள் பாட மலரொடு பொலிந்த தென்றாற்
றொண்டையங் கனிவாய்க் கூர்க்கட் டுடியிடைக் களபக் கொங்கை
"யொண்டொடி மடவார் சொல்லுக் குருகிடா தவர்கள் யாரே!" (30)

பிறங்கிசை வண்டு சேராப் பேருடைச் செண்ப கத்தில்
உறுங்கவின் மலரைக் கொய்து மோந்தன ளுவந்தொ ருத்தி
நறுங்கடி மலர்சே விக்க வாழநன் னாசி யோடு
பிறந்திடு மோரி னத்தைக் கூடிய பெற்றி போல. (31)

நல்லதன் றனிமு கத்தை நனிதரு மதிய மென்று
முல்லையங் கொடிய ரும்பு முகையவிழ்ந் திடம கிழ்ந்த
வல்லுறுங் குழலொ ருத்தி யனங்கள்பின் றொடர்ந்து சூழ
மெல்லென நடந்து வந்து மேவினண் மாவின் நீழல். (32)

மல்லிகை முல்லை யென்னு மருமலர் கொய்து கொய்து
மெல்லிருங் கூந்தன் மீது தரித்தனள் வியந்தொ ருத்தி
சொல்லருந் தங்க ளுக்குந் துணைசெயு முறவாய் வைகு
மல்லினை வந்து வந்து தழுவிவா ழமைவு போல. (33)

பணிமொழிக் குவளை யுண்கட் பணைமுலை மடந்தை யிவ்வா
றணிமலர் கொய்யும் வேலை யருமணற் றென்ற றூது
தண்ணிவற வழைப்ப வந்த தன்மைபோ லொப்பி லாத
மணிமுடி 'யயாதி' யன்னார் மலர்பல விறைப்ப வந்தான். (34)

வேட்டையின் விருப்பால் வந்த வேந்தன'த் தெய்வ யானை'
மாட்டுவந் தணுகி யுன்பின் வருபவள் யார்கொ லென்ன
வாட்டிறல வுணர் கோமான் மகள்இவ ளெனது செய்ய
தாட்டுணை வருடு மேவற் றுசிகாண்! மாசி லோயே!, (35)

கூவலில் வீழ்ந்த போது குளிர்மலர்க் கரம ளித்து
மேவுற வெடுத்தா யன்றென் மிக்கைப் பிடித்த தாகும்
ஆவலில் வதுவை செய்திவ் வாயிர மின்ன ளாரும்
வாவுறு மி[வளு] மேவல் செய்யநீ வாழி யென்றாள். (36)

நீயொரு பனவர்க் கன்னி நின்னை[யான் மன்னன்] வேட்டல்
ஆயதன் றென'வென் றந்தை யகிலமு மறிந்தோன் சொல்ல
வேயுமோ வென'வு ரைப்ப' வேயுமென் றுரைத்தான் வேந்தன்
தூயதன் றந்தை தன்னை நினைத்தன டுணைவின் வந்தான். (37)

நினைத்தவக் கணமே வந்த நீடருட் டாதை தன்னை
மனத்தளி யொடுவ ணங்கி மன்னவ னிவன்று னென்கை
தனைப்பிடித் துவந்தா னன்றே தனிமணஞ் செயவொ ணாதென்
றுனிப்புகல் கின்றான் ஐய! வொழுங்குற வுரைத்தி யென்றாள். (38)

மன்னவிங் கிவளை நீயே மணஞ்செயத் தகுமா லென்று
தன்னிகர் வதுவை செய்து "சன்மிட்டை" தன்னை யப்போ
வுன்னரு மிவன்பாற் சேர்த லொன்றுமே நீங்க லாக
மின்னணி கலையன் ளாதி நல்கென விடைகொ டுத்தான். (39)

வெள்ளிதன் னடிப ணிந்து மிகமணஞ் செய்த பெண்ணும்
ஒள்ளிழைத் தாதி யோரு முடன்வர நகர்க்கண் மேவி
யள்ளிலை வேற்கண் வேந்தன் அணிதிகழ் பணிபொற் கோயில்
உள்ளுற வைத்தான் 'சுங்கன்' உதவிய மங்கை தன்னை. (40)

அவளனு மதியி னானே யசோகநல் வனத்தி னூடு
தவளமா ளிகையின் வைவேற் றானவர் கோமா னீன்ற
பவளவாய் மின்னை வைத்துப் புகாவன் பாவை யோடு
திவளுறு கலவி செய்து மகிழ்வொடு சேர்ந்தி ருந்தான். (41)

இருந்திடு மமயந் தன்னில் யதுதுரு வசு'வென் றேறுதுந்
திருந்துறு மிருவர் தம்மைப் பயந்தனன் றிகழ்சன் மிட்டை
பொருந்துறு புணர்ச்சி யின்றி யிளமைதான் வறிதே போக
வருந்திவெங் காம நோயால் வைகினள் வைகு நாளில்; (42)

அன்னமின் விதிபின் னுந்த வரசனுண் டணையக் கண்டு
மன்னவ ரேறே பாரென் னிளமைதான் வறிதே செல்ல
இன்னலுற் றிருந்தேன் என்ற னிறைவிதன் பதிநீ யன்றோ
வன்னிலை யெனக்கு நீயே பதியினி யருள்செய் யாயே. (43)

தாதியர் தம்மை வாலர் தங்களைச் சேயா னோரை
யாதர வுடனே காத்தல் அறமதற் கிணையொன் றில்லை
தீதிலென் னுசான் றந்த செல்வியை வரித்த தேபோல்
ஏதிலென் னையும்வ ரிப்பாய்! என்றடி தொழுது நின்றாள். (44)

மின்னனு யுனது பாலே மேவுத லொழிக வென்று
மன்னிய புகரோன் சொன்னான் அவனுரை மறுக்கற் பாற்றோ!
உன்[னு]தி யென்று ரைத்தான் ஒன்னல ருயிரை வாரித்
தன்னிகர் கூற்ற முண்ணக் கொடுத்திடுந் தாம வேலான். (45)

ஒருயிர் மீட்கும் போதி னுயர்மணஞ் செய்யும் போதிற்
பாரிடை மறையோர் தம்மைப் பசுக்களைக் காக்கும் போதில்
நேரிலா வொருவர் தங்கைப் பொருணிலை நிறுத்தும் போதில்
வாரமா யரும்பொய் சொல்லத் தகுமென வுரைத்தார் மேலோர். (46)

ஆகையாற் பூத்து நீராட் டமர்ந்துனை விரும்பி னேனை
யோகையாற் கூட லாமென் றுரைத்தன ளதற்கி சைந்து
போகமா மமுது முண்டான் புகலருஞ் சூல டைந்து
சேகிலோர் சுதனை யீன்று டிருந்துதா னவர்கோன் செல்வி. (47)

ஆங்கதை யறிந்து தெய்வ யானைதா னவள்பால் வந்து
மாங்குயி லனைய செல்லாய்! வாலைநீ யுனக்கு மைந்தன்
பாங்குற வந்த தென்கொல்! பகரென வொருநல் யோகி
தீங்கற வடைந்து பிள்ளை தந்தருள் செய்து போனான். (48)

என்றுரை செய்த லோடு மேகினண் மெய்யென் றன்னண்
மின்றரு மணிசன் மிட்டை வேந்தனை மேவி மேன்மை
ஒன்றிய துர்க்கி ரனோடு முயானு பூரு வென்ன
முன்றிகழ் மூன்று மைந்தர் பெற்றனள் முறையி னுங்கே. (49)

மைந்தர் மூவருமாய் வந்து மனையின்முன் விளையா டுங்கால்
முந்துறு முன்னைப் போல மூவழற் போல வைகும்
இந்தவொண் புதல்வர் யாரென் றிறைவன்பா னின்று கேட்ட
சுந்தரப் புகரோன் செல்விக் குத்தாஞ் சொல்லா துற்றான். (50)

யாதுமொன் றுரையா துற்ற தன்மைகண் டினிய சேய்காள்!
தீதினுந் தந்தை யாரே செப்புமி னென்ன லோடும்
பூதல விறையை நோக்கிக் காட்டவப் போதி னுள்ள
மீதுவெஞ் சினம டைந்து தாதைபான் மேவி னாளால். (51)

தந்தைபான் மேவிக் கண்ணீர் தாண்மிசை யாட்டுங் காலை
வந்துநல் 'யயாதி' தானும் வயங்கிருந் தான்று றக்கம்
புந்தியி னுறவால் விம்மிப் புரவல னறத்தை நீத்து
வந்ததா னவிதன் கொங்கை மணந்துமைந் தரையு மீன்றான். (52)

அய்ய!வுன் சொற்க டந்தான் அவமதித் தென்ன லோடும்
வெய்யவு னிளமை யானே வேந்த!விங் கிதனைச் செய்தாய்
நய்யநீ கிழவுத் தன்மை நண்ணிடக் கடவாய்! என்று
பொய்யிலா மெய்ய னான 'புகரவன்' சாப மிட்டான். (53)

உளமையாற் றிருவ ரான வொண்டொடி வேண்டுங் காலை
இளகுறு தகன்று லங்க ணிளங்கருக் குலைத்த தீமை
விளையுமென் றிதனைச் செய்தேன் விருத்தமெய் பொறுக்க லாற்றேன்
உளையுமுன் மகளின் போக மமைந்தில தின்னு மென்றான். (54)

என்னலுங் கருணை கூர்ந்தே யினியவுன் முதுமை தன்னை
யுன்னுடை மக்க டம்பி லொருவனுக் கீந்தன் னோன்றன்
இன்னலி ளிளமை வாங்கி யிணையிலாப் போகந் துய்த்த
பின்னர்நீ முதுமை வாங்கிப் பெரும்புவி யவனுக் கீவாய்! (55)

இறைவ!நீ தெய்வ யானை யுடன்இனி யேகு வாயென்
றறைதலும் யாவு மன்பு மாங்கடன் வரவே வெய்ய
கறையடி வாசி தோராட் கடல்புடை வந்து சூழத்
துறையுடை வாவி சூழ்தன் றொன்னக ரிடத்து வந்தான். (56)

அரிவுரி யன்ன மெய்யு மெயிற்றணி யசைந்த வாயும்
நரைவினிற் சென்னி பாத நடுக்கமு மூன்று தண்டும்
உரைதடு மாற்ற மும்பின் னுரைதரு கூறு மாகி
மருவிய மூப்பி னோடு வந்திருந் தனன்றள் ளாடி. (57)

மக்களை வரையு நோக்கி மாறிலா வெனக்குப் போகம்
பக்கமிங் கமைந்த தில்லை பாரினு [னொ]ருவன் வந்தேன்
றொக்குறு முதுமை வாங்கித் தூயநல் லிளமை தன்னை
யிக்கணந் தருதல் வேண்டும் என்றனன் குன்ற மன்னன். (58)

தன்னிலே வருபுன் மூப்பை யிளமையிற் றுங்கிச் சேரா
தொன்னரை யடைந்தாற் காம னளகைய னெனினும் வேண்டார்
மின்னனே யார்க ளென்று விருப்பிலார் முகங்க விழ்ந்து
துன்னுநால் வருமி ருந்தார் தொல்விறை முனிந்து சொல்லும். (59)

மயல்யது குலத்தார் வேந்தன் றன்மைதான் மாறி நிற்க
வெயினர்நாட் டிறைவ ராக வியற்'றுரு வசு'கு லத்தார்
பயனறு குறிஞர் பாலர் பாயின மன்ன ராக
வியல்பிலா விளமை தன்னில் இறக்கமற் றனுகு லத்தார். (60)

எனக்கொடுஞ் சாப மீந்து பூருவை யினிது நோக்கி
யுனக்கிது தருமோ வென்னத் தருமென வுரைத்த லோடுந்
தனித்ததன் முதுமை தன்னை யவன்வயின் றரித்த வன்றன்
வனப்புறு மிளமை தன்னை வாங்கின னிணையி லாதான். (61)

திருந்தமு தன்ன தீஞ்சொற் செப்பிளங் கொங்கை யார்கண்
ணெருங்கலர் நீலம் பூத்த நெடுமணிக் குன்ற மென்ன
வெரிந்தவிற் காமன் மாறு வெழிலுருப் பெற்ற தென்ன
வரிந்தபைந் தாமத் திண்டோண் மன்னவன் வைகி னுனல். (62)

இம்மையின் மன்ன னங்கத் திழிவகன் றிலங்கி னுன்
மைம்மலி பொழிலின் போது மதுப்பொழி 'மடுவை' வாழுந்
திம்மயன் றனைய டைந்தோர் சிறுமைதீர்ந் தக்க ணத்தின்
மெய்ம்மகிழ் சிறப்புற் றோங்கி விளங்கிய வாறு போல. (63)

மன்னவ னளவிற் கால மகிழ்சு[க] மனுப வித்த
பின்னரொண் பூரு வுக்குப் பிறங்குத னிளமை நல்கி
யன்னவன் மூப்புத் தன்பால் அணைந்துற வாங்கிக் கொண்டு
தன்னிக ரமைச்ச ராதி தலைவர்யா ரையும ழைத்தான். (64)

அழைத்தபின் 'பூரு' வுக்கே யணிமுடி சூட்டிப் பட்டந்
தழைத்துற நல்கி யாங்குத் தகவுட னிருக்கும் வேலை
மழைத்தடச் செங்கை வேந்தே முன்னவ ரிருக்கப் பட்டம்
வழுத்தபூ ருவுக்க ளித்த வாறுசொ லென்றுர் யாரும். (65)

யதுமுத னுன்கு பேரும் என்னுரை கடந்தார் பூரு
முதிருமென் மொழிக்கு ளானு னவன்வயின் முடிகொ டுத்தேன்
அதிற்படப் புகரோ னன்று புகன்றது மவ்வா றென்று
பதியுரைத் திருத்தி வேதப் பனவரோ டடைந்தான் கானில். (66)

குலாலசக் கிரமே யன்ன கொடும்பவம் நீங்கு மாறு
பலாதிக ளருந்தி வன்னிப் பகவனெண் முகத்தி னானே
நிலாவிய பிதுர்க்க ளுக்கு நிறைவுறப் புரிந்து தீமை
யிலாத'வா னப்பி ரத்தம்' என்னுநன் னெறியி னின்றான். (67)

விரும்புறு முயர்''சி லோஞ்ச விருத்தி''யா லதிதி சேடம்
அருந்திமற் றைந்து மாறு மடக்கியா யிரப்பே ராண்டு
பெருந்தவ மியற்றி யாங்குப் பின்னரோர் முப்ப தாண்டு
திருந்திய நீரா காரஞ் செய்துடல் வருந்தி னானல். (68)

ஒருவரு டஞ்செல் காலை யுண்டுமைந் தழலி னின்றும்
பெரும்புன் விடையோர் தாளி னின்றுபொன் பொத்த தோடு
விரிதவம் புரிதல் காணு 'விண்ணவர் சோமான்' முன்னின்
றுரியபொன் மானத் தேற்றிக் கொண்டுத னுலகிற் போனான். (69)

அங்கு(ள்)ளோர் பூசை கைக்கொண் டமுதமுண் டிருந்த பின்னர்
பங்கய னுலகி லெய்திப் பகாரும் பூசை கொண்டு
தங்கியெண் ணில்லா வாண்டு தருசுக மடைந்தி ருந்தே
பொங்குசீ ரிறைவன் மீண்டு புரந்தர னுலகில் வந்தான். (70)

அவனுளக் கனிவை நோக்கி யமரர்கோன் உனக்கன் பான
தவமுடைப் 'பூரு' நல்ல தருமியோ வென்று கேட்ப
நவமுறு மொருவ ருக்கு நன்மதி சொல்லத் தக்கான்
பவமிலான் ஞானி மெய்யன் பவித்திர னென்று ரைத்தான். (71)

அறங்கள்பல் கோடி செய்தாய் அமரலோ கங்கள் கண்டாய்
சிறந்தனை பெருமை யெம்மாற் செப்பிடுந் தகைத்தோ வென்னத்
திறம்படு மாக்கர் சித்தர் சுராசுரர் செயவொண் ணாத
பிறங்குமா தவங்கள் செய்தேன் பெரியன்யான் என்றான் பின்றான். (72)

அவ்வுரை பொறுது விண்ணோன் அமரலோ கத்தி னன்மை
செவ்விதீர்ந் ததுநீ கீழாஞ் சிறையுல கடைவா யென்ன
வெவ்வம தாற்றே னென்ன வினியவந் தரலோ கத்தின்
நைவதின் றடைவா யென்ன வடைந்தனன் நாம வேலான். (73)

வேறு

அந்தர லோகத் துற்றதன் மகள்பிள் ளைகளானோர்
மைந்துடை 'யட்டகன்' முதலா மெண்மர்கள் வந்துற்றே
நந்தலி லாவொளி மயமா கியபுவி நாதற்கண்
டுந்தும ருக்கிய முதலா னவைசெய் துவந்தார்கள். (74)

நல்வினை யாமுன் செய்தமை யாலுனை நனிகண்டேம்
வல்வினை தீர்ந்தேம் நீயா ரிவ்விடை வந்தாயென்
சொல்வாய் நாயக! வென்னக் கருணை சுரந்தன்பால்
எல்விரி சோதித் தனிமய மன்னன் இயம்பலுற்றான். (75)

வரைபுரை நகுடன் புத்திரன் யானே மகிழென்பேர்
பொருவில் யயாதியென் மைந்தன் பூரு'ப் புரைதீரென்
உரிய தவத்தால் அயனுல காதி யுற்றுச்சீர்
மருவு புரந்தர லோகத் தன்பொடு வந்தேனால். (76)

வாசவ னென்னை வினவலு மென்றவ மகிமைக்குத்
தேசுறு கின்ற வியக்க ராக்கர் சேனுற்றோர்
ஏசுறு தானவர் செய்தவ மொவ்வா தென்றேனால்
ஆசறு மாதவ மதமுற் றாய்நீ யதனானே; (77)

புண்ணிய லோகப் போக மகன்றது போநீயென்
றெண்ணி யுரைத்தனன் இந்திர னதனா லீண்டுற்றேன்
எண்ணிய மைந்தீ ரென்றான் மன்னவன் அவரெல்லாம்
நண்ணிய வுன்றன் பேரர்கள் என்றார் நவையுற்றார். (78)

அட்டக னாதியர் பின்னு மிறைஞ்சி யறம்பாவம்
நட்டுறு சற்கதி துற்கதி யெல்லாம் நவிலென்னக்
கட்டுறு மாகம வேத புராணக் கரைகண்ட
[நட்டமில் கீர்த்திய னாய] 'யயாதி யுரைக்கின்றான். (79)

வேறு

உயிர்கண்மேற் றயவுறல் உண்மை சொல்லுதல்
அயர்வொடு பிறர்படு துயர மானதை
யியல்புறு தன்றுய ரென்னக் காண்குதல்
வியனுடைத் தருமமென் றுரைப்பர் மேலையோர். (80)

தலம்புகழ் மறையவர் தம்மைப் போற்றிடில்
இலங்குறு சற்கதி யெய்து மன்பொடு
புலன்றிக ழவர்த(ம்)மைப் போற்றி டாவினை
கலங்குறு துற்கதி காட்டு மென்பால். (81)

பூத்தவள் உதிரமும் புருடன் விந்துவும்
வாய்த்திடும் வாயுவால் வந்து சேர்ந்துதன்
மாத்திரை யாலுட லாகி மன்னுயிர்
ஏத்திடு முறுப்புக ளேறக் கூடுமால். (82)

அன்னைத னுதரமா மவம லக்குழி
தன்னிடை யிருந்தபின் சால நிந்தையர்
முன்னரும் பவத்துணை நெருக்கி யுள்ளயர்ந்
தின்னியு மாய்விழுந் தழுது சோருமால். (83)

செவிதுவக் கிருவிழி செய்ய நாக்குமூக்
கவிர்மன மிவற்றினு லருஞ்சத் தாதிகள்
கவருள வென்பன காணு மாயிர
பவமொடு புண்ணிய மேரு பான்மையால். (84)

புனிதநல் வினைமிகப் பொங்கி வெய்யவல்
வினைதனை யடக்கிடும் வெய்ய வல்வினை
நனிமிக லுரியநல் வினையைச் சாய்த்திடும்
இனியநீர் தீமிகுத் திட்ட வாறுபோல். (85)

அறத்தினுல் உத்தம சென்ம மாயுறும்
மறத்தினு லீனசென் மங்கள் வந்திடும்
திறத்தினுன் மறந்தனைத் தீர்த்து வானிடை
நிறுத்தறந் தன்னையே செய்வர் நீர்மையோர். (86)

அலைவரு புண்ணிய முடைய ராரெனில்
இலகுமா சாரிய னிடத்திற் பத்தியும்
நலனுடை நல்லவ ரிடத்து நண்ணலுந்
தலமகிழ் வுறப்புரி தன்மை யோர்களே. (87)

பிரமநற் சரிதையி லறத்தின் பெற்றியே
திரிவிலா வனத்துடன் மூன்று செய்தபி
னுரியநற் றுறவிடை யுற்று முத்தியின்
மருவியே யிருப்பால் வாய்த்த மேலையோர். (88)

இப்படி நடந்தவன் ஈரைந் தாகிய
தப்பிலா தலைமுறை யோருந் தானுமாய்
ஒப்பிலா முத்தியி னுறுவன் பிள்ளைகாள் !
கப்பறு முளத்திடை காணுங் காண்மினே. (89)

அக்கினி கோத்திர மான துந்தனி
மிக்கவத் தியானமும் வீறி யாகமும்
சிக்கறு ஞானமுஞ் சிந்தையாற் செய்த
தக்கவன் எவன்அவன் சாற்றில் உத்தமன். (90)

என்றுமன் னவன்உரைத் திட்ட போதினில்
உன்றனக் குரியவெங் களுக்கு முண்டுகொல் !
அன்றுறு முயர்கதி யென்ன நற்கதி
மன்றவே யுண்டென மயங்கி யுற்றனன். (91)

உற்றபி னவரையு மொக்கக் கொண்டுபோய்
மற்றுயர் வாகிய வுலகின் மன்னினன்
செற்றமி லறிவருள் செய்யு நூலெலாங்
கற்றவன் 'யயாதி'யாங் காவன் மன்னனே. (92)

உச்சமார் பூருவின் றந்தை யொண்கதை
விச்சய னுயர்சன மேச யன்றனக்
கிச்சையி னுரைத்தனன் குரவ னீரடி
வச்சநெஞ் சுடையவன் வைசம் பாயனன். (93)

யயாதிச் சருக்கம் முற்றும்.
ஆகத் திருவிருத்தம் 376.

---

9. துஷ்யந்தன் சருக்கம்

வாகை வேற்படை 'யயாதி' தன், மைந்தனும் 'பூரு'
வோகை யாற்சன மேசயன் றன்னையீன் றுவந்தான்
சேகி லாச்சன மேசயன் றிகழ்பிர மாசினன்
ஆகு மண்ணலைப் பெற்றனன் அவன்வயிற் றகத்தே. (1)

ஆடல் பெற்ற'சை யாதி'வந் துதித்தனன் அவன்பால்
பீடு சேர்க்கை யாதியா மிறையவன் பிறந்தான்
கேடி லாவவன் றனக்கயு தாணிகன் கிளைத்தான்
கூடு மொண்புக ழவன்கணக் குரோதன்வந் துதித்தான். (2)

வியன்பொ ருந்துமக் குரோதனின் மிக்கதே வாபி
நயந்து தித்தனன் அவனொரு ருசிகனை நல்கிப்
பயன்ப டைத்தனன் அவன்மதி மைந்தனைப் பயந்து
சயம்பொ ருந்தியே யுலகெலாம் புரந்தனன் றகவால். (3)

அங்கண் மாமதி மைந்தனன் பவன்எழு மலையாற்
பொங்கு பாரதி நதிக்கரை தன்னிடைப் பொருந்தித்
தங்கு மாறிரண் டாண்டுயர் சத்திர யாகந்
துங்க முற்றிட நடத்தினன் உலகெலாந் துதிப்ப. (4)

ஆங்க வன்றனை வாணியா கியநதி யணங்கு
பாங்கி னூற்புணர்ந் துயர்அதி ரசன்றனைப் பயந்தாள்
தீங்கி லாக்கா ளிந்திய திரசனைப் புணர்ந்தே
யோங்க லன்னதோ 'ளீளிதனைப் பெற்றனள் உவப்பால். (5)

உவமை தீரவன் ஓங்கு'துட் டியந்தனைப்' பெற்றான்
அவனு தித்தசின் னாளின்மா வரிமுதல் விலங்கை
நவமு றப்பிணித் தேவிளை யாடின னிவர்ந்தா
னிவரி யவ்வனத் தோங்கலை யெடுத்தெடுத் தெறிந்தான். (6)

மல்ல லோங்கவன் உதயமத் தமனமால் வரைத
னெல்லை யாகநல் குரவொடு வெம்பிணி யின்றித்
தொல்லை யம்புவி யிடத்துளோர் சுகமிகப் பொருந்த
நல்ல நூனெறி நடாத்தினன் நடாத்திடு நாளில். (7)

ஆன்ற தேர்கரி பரிபடைக் கையர்வந் தணுக
நான்ற நாவுடை ஞாளிக ளெங்கணு நடப்பத்
தோன்று வார்வலை தாங்கிய வனசரர் தொடர
வூன்றி வேட்டைசெய் திடநெடுங் கானிடை யுற்றான். (8)

அரியி னங்களைத் தலையற வடுகணை தூரந்தான்
கரியி னங்களை மத்தகம் பிளந்திடக் கடிந்தான்
வரியு டற்பல கோடிவெம் புலிகளை வதைத்தான்
சொரிச னீரொடு விழிக்கருங் கலைகளைத் துணித்தான். (9)

மீதெ ழுந்துபா யுழைக்குழாத் தலைகளை விறலோன்
நீதில் வெங்கணை யறுத்தலும் விண்ணிடைச் செறிந்து
போத மான்றலை யுடனுற வாடுதற் பொருட்டுக்
காத லோடுமீச் சென்றிடு மியல்பினைக் கடுக்கும். (10)

கோர வெம்புலி முதுகிடைத் தாவியே றுரைப்பத்
தூர வோடிமேற் றூண்டுசெம் மரைகளைத் தொடர்வ
நேர ரித்தொடை கவ்வியே நிறுத்துவ கொடிய
வீர ஞாளியை விளிப்பவ ரோசையே மிகுமால். (11)

செம்பு ரைப்படி விற்கொடு வீரர்கள் செலுத்தும்
அம்பி னோடுசெல் லுமோருழையை ஞாளிவந் தடர்த்த
வெம்பு தெவ்வரா லிளைத்தவர் விரைந்துசெல் வழிமேற்
பம்பு கள்வர்கண் மலைத்திடு[ம்] பான்மைபோல் வளைந்து. (12)

புயலி டித்தோகை யிரிந்தோட வார்த்துவெம் பொருநர்
கயில யிற்படை யெறிதலுந் துள்ளிவீழ் கடாக்கள்
இயலு டற்கணை விழித்தொகை படைத்தவ னெறியும்
வயிர வாட்படை யால்விழு கிரிகளை மானும். (13)

ஆனை யின்பல பேருடல் உருவியு மடல்செய்
மான வாளரி யினங்களை யுருவியும் வனத்தே
சேன மார்பெரு மரங்களை யுருவியுந் திறலோர்
தூனெ டுங்கணை யடங்கிய சொல்லரும் விரைவு. (14)

பாய மேல்வரு மேருழைகள் பற்பல வற்றைத்
தூய வேல்கொடு தாக்குபு புரட்டுவர் துணைவின்
மீயெ ழுந்துபாய் கோளரி யினங்களை விறலோர்
காயும் வாட்படை கொடுதலை துணிப்பாரற் கடிதின். (15)

அடலு டைக்கொடுந் திறலினர் மலைப்புழி யலைந்து
புடையில் வல்விலங் கோடுறு செயலினைப் புகலில்
மடுவை யம்பதித் திம்மயன் றனையோர் மலைப்ப
வுடைகு லைந்திளைத் தோடிய பகைஞரை யொக்கும். (16)

வேறு

இவ்வாறு வேட்டைபுரிந் திளைத்தெவரும் பிற்படவே
கைவாள்கொண் டியலறிவு கனிந்தமதி யமைச்சனுடன்
மெய்வாடி யிறைவன்றெண் ணீர்வேட்டு வருமளவில்
அவ்வானும் பரவுறுமோர் ஆச்சிரமங் குறுகியதால். (17)

இங்குநறு நீழலுள தெனவழைத்தற் போற்குயில்கள்
கொங்கவிழ்சேர் காத்திருந்து கூவுதற்கேட் டகமகிழ்ந்தான்
சங்குதிகழ் நதிகண்டு தண்புனலுண் டயர்வுயிர்த்தான்
பொங்குமலர் உதிர்புங்கு பொரிசொரித லெனக்கண்டான். (18)

நளிர்வனதே வதைகாண மணிப்பொற்றேர் நாட்டியபோல்
அளியினெடு பலகோங்கு மலர்ந்திலகு மணிகண்டான்
குளிர்புன்னை தாதிறைக்கப் படுபுளினக் குன்றெல்லாம்
ஒளிர்பொன்னாற் புரிமேடை யொத்துவிளங் குதல்கண்டான். (19)

அரியுமவ னுயர்மாவு மமர்ந்துபொருந் திடல்கண்டான்
ஒருவுதலிற் பன்னகமுஞ் சிகரியுமுற் றிடல்கண்டான்
மரையினொடு புண்டரிகங் கலந்ததட வளங்கண்டான்
பரிவுறுபூ சையுஞ்சுகமுங் கூடியுறும் படிகண்டான். (20)

மறையவர்கள் ஓமஞ்செய் மந்திரங்கள் புகலோசை
குறைவிற்பொருள் பெறுசாம கானத்தின் குளிரோதை
நிறைகிளிகள் நீராஞ்ச னஞ்சொன்முழக் கங்கேட்டு
இறையவனங் கினிமையுடன் இருசெவிக்கும் விருந்திட்டான். (21)

'கண்ணுவமா முனி' தவஞ்செய் காரணமாந் தலமிதென
வெண்ணியமைச் சனையுமவ ணிவறுத்தியிறை யேகுங்கால்
தண்ணளிசேர் ஒளிபன்ன சாலையின்முற் றத்தினிரு
கண்ணிணைகள் களிப்புறவோர் கன்னிதனைக் கண்ணுற்றான். (22)

நெடியதிரு மானுரத்தை நீத்துவரும் பூந்திருவோ
புடவியுலக் கத்தினியல் பார்க்கவரும் புலோமிசையோ
கடிமலரோ னரம்பையரைப் படைத்துப்பின் னுகந்திருந்திப்
படிமிசையிற் படைத்துவிடு பாவையே யெனநினைத்தான். (23)

வேறு

எய்த்து நுண்ணிடை யாள்கருங் கூந்தலுக் கிணைதான்
பொய்த்து நீங்கலு மருவலு மாமிருள் போலா
தொத்த தேதெனில் அயனிரு கதிர்களுக் குடையான்
மத்த வல்லிருள் படைத்துள னேல்அது மானும். (24)

சுந்த ரந்திகழ் கன்னிதன் றுணைவிழிக் குடைந்த
வந்த வல்விட மவிர்மதி புனையருண் மலையின்
கந்த ரந்தனில் ஒளித்ததென் றுற்கடுஞ் சமன்மே?
நிந்தை யேற்றிடக் கருதினோர் நிகழ்த்துவர் நிகரே. (25)

சர்ப்ப வல்குலாள் சீரியரோ மாவலி தனக்கும்
பொற்பி னங்கிய முலைக்குமோர் வாறுநாம் புகலின்
வெற்பொ ருந்தியன் றொருசிறு கொடிமிசை யெடுத்து
வெற்பி ரண்டினை நிறுத்திய விசித்திர மாமால். (26)

கொல்வ ரிக்கணாள் முகத்தொடு தோழமை கொள்வான்
எல்வ ளர்த்திடு கலைமதி தன்களங் கரிக்கும்
நல்வ யித்திய னொருவனை நாடுதற் கன்றோ
தொல்வ ளங்கெழு முலகெலாஞ் சூழ்ந்தலை குதலே. (27)

என்ன வுன்னியே வருபுவி யாசனை யெதிர்கண்
டன்ன மன்னவள் அரதன மீந்துநன் றகில
மன்ன விங்குநீ வந்ததென்! மதனிகர் நீயார்?
பன்னு கென்னலும் மதகளி றனையவன் பகர்வான். (28)

வேட்டை யாடுதல் விரும்பிவந் தனன்உயர் வீடு
காட்டு கண்ணுவ முனிவனைக் கைதொழ வடைந்தேன்
கேட்டி யெங்ஙன மேகினன் கிளருயிர் பருகும்
வாட்ட டங்கணாய்! சொல்லுதி யென்றனன் மன்னன். (29)

தூய மாமுனி தருப்பைகள் சமிதைகள் சுவைசேர்
காய ருங்கனி முதலிய கொடுவரக் கருதிப்
போயி னான்இனி யன்பொடு பொருக்கென வருவன்
நீயி ருந்தருள்! என்றனள் நிகரின்மின் னனையாள். (30)

முருகு வார்தொடைக் குழன்மினே யுனதுமென் மொழிக்கும்
வரம டந்தையர் தொழவரு முனதுநுண் மதிக்கும்
தரையி லொப்பிலை மன்மதன் வாழ்வெனத் தகுநீ
கருதில் யார்மகள்? என்றனன் கதிர்முடிக் குரிசில். (31)

ஆசிற் கண்ணுவன் மகள்யான் என்றனள் அவன்றான்
பேசி லூர்த்தவீ ரியன்பெறும் பெற்றியே தென்றான்
ஏசி லோர்முனி யீன்றமின் னாரென நிகழ்த்த
மாசி லெந்தைமுன் சொன்னவை கேளென வகுப்பாள். (32)

கோசி கப்'பெருந் தவமுனி கொடு[ம்]புல னடக்கி
மாசி லாத்தவம் புரிவது வாசவன் காணா
வாசி மேனகை தனையழைத் தவன்றவஞ் சிதைத்து
வாச டக்கெனச் செல்லுதி மங்கை!நீ யென்றான். (33)

வான ரம்பையர் பலரொடு மெழுந்தனள் வந்தாள்
மோன மாகிய 'கௌசிக முனிவனை'க் கண்டாள்
பூந றுந்தளிர் கொய்துகொய் தவனெதிர் புகுந்தாள்
ஞான மால்வரை யொடிபட நயனவே லெறிந்தாள். (34)

அளக வாசனை பரந்திட வவிழ்த்தனண் முடித்தாள்
களப மாமுலை திறந்தனண் மறைத்தனள் கலையால்
விளரி நல்லிசை யாடினள் சிறுநகை விளைத்தாள்
தளரு மெல்லிடை நுடங்கிட வொருத்திமேற் சாய்ந்தாள். (35)

வெய்ய வேட்கணை துளைத்திட முனியுள மெலிந்து
தையல் பால்விழி நடத்தலா லவனுழைச் சார்ந்தாள்
உய்யு மாறவ ளதரமென் கனியமு துண்டான்
கையி னுலணைத் தளவளாய்ப் புரிந்தனன் கலவி. (36)

இந்த வாறுசெய் திருந்திடு நாளிவள் பிறந்தாள்
சந்த 'மாலினி நதி' மணின் மிசையிவ டன்னை
யந்த மேனகைத் தனிரணைக் கிடத்திவைத் தகன்றுள்
புந்தி நொந்துயர் முனிவனுந் தவஞ்செயப் போனன். (37)

வேறு

தாதை முனிவன் றவமகிமை
  தன்னு லலகை பணியாதி
வாதை யின்றிச் 'சகுந்தல'மென்
  றுரைக்கும் புட்கள் வந்துபுரந்
தேத மகல வுறைபோதில்
  இலங்கு சீட ரொடுநாமிக்
கோதை தனைக்கண் டினிதெடுத்துக்
  கொடுவந் தீண்டு வளர்த்தேமால். (38)

அன்ன மளித்தோன் பயந்தீர்த்தோன்
  அளித்தோ னென்னு மூவருந்தன்
மின்ன ருர்க்குத் தாதையரிம்
  மூவ ருடனே வித்தைதனை
யுன்னி யளித்தோன் ஆசானென்
  றுரைக்கு மிவரோ டைவர்களும்
இன்ன லகற்றுந் தாதையராண்
  டைகயர்க் கென்னு மியனூலே. (39)

நண்ணு பயந்தீர்த் தமையானே
  நாமே தந்தை யிவளுக்குத்
தண்ணஞ் சிறைய சகுந்தலங்கள்
  புரந்த செயலாற் சகுந்தலையென்
றெண்ணி நாமந் தரித்தேமென்
  றெந்தை தவக்'கண் ணுவன்' உரைத்த
வண்ண மிவைகாண்! எனவுரைத்தாள்
  மங்கைப் பருவ மயிலன்னுள். (40)

தக்க முனிகன் னிகையாமென்
றடக்கி யிருந்த தன்மனத்தை
யிக்கு மதனன் கொடியநறு
வாளிக் கிலக்கா யீந்தருளி
மிக்க வவளுந் தன்மீது
விகார முண்டென் பதுமறிந்தெண்
டிக்கு நிறைந்த புகழ்விளங்கு
முயர்துட் யந்த னியம்புவான். (41)

இனிய தெய்வம் பிராம்மியமா
ரிடமே பிராசா பத்தியமே
தனியென் னுத விராக்கதமா
சுரங்காந் திருவம் பைசாசம்
எனுமோ ரெட்டு விவாகமுள
விவற்றி னீரு மணத்தினொடு
தனியே மருவுங் காந்திருவம்
இரண்டு மாசர் தமக்குரித்தே. (42)

ஆகை யாலக் காந்திருவம்
என்னு மணத்தா லணைந்தருளென்
றேகை யரச னுரைத்தான்மற்
றெந்தை யான வுயர்முனிவ
னுக மகிழக் கொடுத்தபினை
யவ்வா றியற்று கென்றுரைத்தாள்
வாகை வடிவே லொடுவிடத்தை
மருட்டும் நயன மயிலன்னாள். (43)

தன்னை யொருவற் களிப்பதற்குந்
தனிக்கந் திருவ மணத்திற்கும்
உன்னு மிடத்திற் றுன்கருத்தா
வாமென் றாச னுடன்படுத்தக்
கன்னி யிசைந்தென் வயிற்றுதித்த
காளை தனக்கு முடிசூட்டி
மன்னு மாசு கொடுப்பாயேன்
மணத்தி யென்றாள் மதிநுதலாள். (44)

கேட்ட வரந்தந் தனனென்று
 இளத்திப் பிடியுங் களிறுமென
நாட்டுக் கலவி நலஞ்செய்து
 நன்மந் திரிக டமைமுனிபால்
வேட்ட வுன்னை யழைத்துவர
 விடுப்ப லென்று மிகமகிழ்வு
பூட்டித் தனது நகரின்கட்
 போனான் இனிய துட்டியந்தன். (45)

முருக்கு வாய்ப்பைந் தொடிவளர்த்த
 முனியென் சொலுங்கொ லெனவஞ்சி
யிருக்கு மளவின் முனிவன்வந்
 திவளொண் காம சரத்தினொடு
பெருக்கு நாணும் பயமுங்கொண்
 டுறைதற் கண்டு பேரருளாற்
றருக்கி யாமோர் மணமுனக்குத்
 தகுங்காண்! என்று பினுஞ்சொல்லும். (46)

உனது குலத்துக் கேற்றபெருங்
 கணவன் றனையே யுற்றடைந்தாய்
இனிதுன் வயிற்றி னுறைபவன்று
 னெழுவண் புவிக்கு மிறையாவான்
மனது குளிர வேண்டியநல்
 வரங்கே ளென்று னென்புதல்வன்
அனக னாகி நெடுங்காலம்
 வாழ்க! வென்று ளவனீந்தான். (47)

மூன்று வருடந் தாய்பரிக்கப்
 பிறந்தான் சுதனும் முறைமையினு
னூன்று பெயரும் 'பரதன்'என
 வுரைத்துச் சாத கன்மமுதல்
ஏன்று நடத்த வளர்ந்துவனத்
 திருக்கு நாளில் அரிமுதலாய்த்
தோன்று மிருகங் களைத்தான்கட்
 டியேறி யாடுந் தொழிற்புரிந்தான். (48)

10

அதனாற் 'சருவ தமனன்' என
நாமத் தரித்தா ரருண்முனிவர்
சிதையாப் புதல்வன் புயவலியை
நாடி யரசு செயுங்காலம்
இதுவே யென்று மனத்தின்நினைந்
திமையோ ரமுதத் தைப்பழித்த
மதிவா ணுதலை யருகழைத்து
மறைநூல் வல்ல முனிசொல்லும். (49)

மறுவிற் குணங்கள் பலவுடைய
ரெனினும் மட்வார் பிறந்தகத்தில்
உறைத லாகா தொளிர்கணவன்
அகத்தி னுறைதல் வேண்டுமால்
பிறைநன் னுதலாய்! அரசன்பால்
பிள்ளை யொடுநீ போவென்று
முறைமை தவறாச் சீடரையுங்
கூட்டி விடுத்தான் முனிநாதன். (50)

முனிவன் உவப்ப வந்தரசன்
முன்னே நாணத் தொடுநின்றாள்
தனையெண் ணும விருப்பதனைக்
கண்டு தவனச் சிரமத்தி
னினிது நடந்த சிநேகத்தை
யெண்ணி லான்கொ லெண்ணினன்கொல்
அனைய கருத்தை யளவிடுதற்
கரிதென் றகத்தி னினைக்கின்றாள். (51)

அரசர் நூத னப்பிரியர்
அறியா தவரை வசப்படுத்தல்
புரித லாமிங் கறிந்துமறி
யாம லிருக்கும் புல்லியரை
யுரையி னானே வசப்படுத்த்
லாகா தெனினு மிவன்பாலே
விரைவின் வந்து வறிதேநாம்
திரும்பி யேகல் விதியன்றே. (52)

என்று கருதிச் சொல்லுகின்றாள்
இறைவா! வேட்டை புரிந்தென்பால்
அன்று வந்தா யிதஞ்சொல்லி
யணைந்தா யென்னை யதனுனே
நின்ற கதிர்போல் இவன்பிறந்தான்
நீபார்! இவனைப் பவுரவர்தந்
துன்று குலத்திற் கிளங்கோவாய்
நிறுத்தி! வேந்தர் தொழுந்தாளோய்! (53)

என்ன வுரைத்தற் கேட்டரசன்
எழின்மின் னே!நா னுனையறியேன்
உன்னி வந்த வழியேபோ!
வென்றான் அதுகேட் டுயிர்ப்பெறிந்து
தன்னி விருகண் ணீரொழுகத்
தலைசாய்த் திணையிற் கடைக்கண்ணால்
மன்னன் முகத்தை நோக்கிமிக
மனத்தைத் தேற்றி மொழிகின்றாள். (54)

என்னைப் பிறர்போ னோக்கியறி
யேனென் கின்றாய் நீயன்றி
பின்னை யொருவ ரறியாமல்
அணைந்தா யதற்குப் பெருமறைகள்
துன்னு மறங்கள் பூதங்கள்
உயிரோர் டியமன் றொல்கதிர்கண்
மன்னு சந்தி யிரவுபகல்
சான்றா மன்றோ? மனுநூலோய்! (55)

நீயன் றீந்த வரத்தைநினை!
நீடு கருணை புரி!பேதை
யாய வென்னை யவமானப்
படுத்த லாமோ? அரசேகேள்!
தூய சுதனைப் பெற்றவளாய்த்
தொல்லை யறஞ்செய் குணவதியாய்
மேய மடந்தை தனைநீத்தோன்
இம்மை மறுமை விடுத்தோனே. (56)

அறம்பே ரருளே யின்பமெனு
மவைக்கு விளக்கு சற்கருமத்
துறைவீ டினிய கதிக்கூற்றுங்
குலத்தை நடத்தற் குயர்மூலம்
பெருமா திக்கந் தனக்குநெறி
மகிழ்வு தனக்கும் பிறந்தகமர்ங்
குறைதீர் மனைவி யுடையவனே
கோதிற் பெருஞ்சீ ராண்டகையே. (57)

தலைவன் றனக்கு முன்னிறந்த
தையல் பரலோ கத்திருந்து
நிறைகொள் தலைவ னெப்போதிங்
கெய்து மென்று நெறிபார்ப்பா[ள்]
இலகு மவன்றுன் முன்மரித்தாற்
கூட மரிப்ப ளித்திறஞ்சேர்
தலைவன் நாரி தணையிகழ்ந்தாற்
றரும விரோத மாமெனுநூல். (58)

தருசீர் மகிழ்நன் பாரிகருத்
தன்னிற் புகுந்து மகிழ்சுதனாய்
வருவ னிலங்க வவரங்கங்
கலப்புண் டென்று மறைகூறும்
எரிகா ருகபத் தியமேபி
னுகவ னீய மெனவரல்போற்
புரைதீர் தந்தை தானேதன்
புதல்வ னாகி விளங்குவனால். (59)

ஆடி யிடத்திற் றன்னிழற்கண்
டன்பு மருவல் போற்சுதனை
நாடி மகிழப் பெற்றோன்புன்
னரகந் தன்னின் றெடுத்திடலால்
ஊடு மகிழ்‘புத் திரன்’எனும்பேர்
உரைக்குஞ் சுருதி யப்புதல்வன்
கேடில் விளக்கில் விளக்குதித்த
தெனவந் தானுன் கிளர்மெய்யால். (60)

வேற்று வசன மேதுக்கு
மிளரிக் குமரன் றன்னைமிகப்
போற்றி யணைத்துக் கோடிசுகம்
பொருந்து மமுதத் தோடுடையார்

மேற்ற நாண முதலவணிந்
திலங்கு நிலாவி னுறும்பொழுது
தோற்று சுகந்தன் னினுமதிகஞ்
சுதரா னுர்மேய் தீண்டுதலே. (61)

மன்ற விவன்று னுதித்தளவில்
வாச பேயஞ் சதம்புரிவன்
என்று ககன வாணி'யெழுந்
தியம்பிற் றங்கண் யாரறியார்!
துன்று நலத்தோ டுறுமிந்தச்
சுதனைப் பார்த்துமை யுறலென்னே
யன்று மொழிந்த சத்தியநீ
யறிவா யறிவுக் கிணையில்லோய்! (62)

சுவைநீர்க் கேணி நடைவாவி
தோமின் மகமே மகப்பேறு
நவைதீர் மகிமை யொன்றற்கொன்
றதிக நூறு நலமென்பார்
தவிரா மேய்மை தனையுமுயர்
இவுளி யாகந் தனையுமிரும்
புவிமேற் றுலையி னிறுத்திட்டாற்
புனித மெய்யே கனமாமால். (63)

அகில தீர்த்த பலங்களினும்
அளவி லாத வரங்களினும்
நிகரி லாத மறைகளினும்
நிலைகாண் மேய்மை யேபெரிதாம்
தருமிவ் வாய்மை தனைநினைந்து
தவனுச் சிரமத் தெனக்களித்த
புகரில் வரத்தை நடத்துகெனப்
புதல்வன் றன்னை முன்னிறுத்தி, (64)

அரிய தவஞ்செய் கௌசிகற்கும்
அமுத லோக மேனகைக்கும்
உரிமை பொருந்தப் பிறந்திடுநான்
தருமந் தப்பி யுரைப்பதிலை

பெருருவில் வேதஞ் சொன்னபடி
 புவனி முழுதுந் தனியாளும்
தரும! நீநின் கடைக்கண்ணல்
 நோக்கென் றறைந்தாள் சகுந்தலையே. (65)

மங்கை நீயார்? நானுறிம்
 மைந்த னுருன் றனையறியேன்
திங்க ளுதலார் பொய்யுரைப்ப
 ரென்ப தியல்பே செப்புங்கால்
இங்கு ளார்கள் நகைக்கவுரைக்
 கின்று யுன்னி டத்தேகென்
றங்க ணுரைத்தான் ஓராழி
 யுருட்டி யுலக மளிப்போனே. (66)

தாதை! யன்னே! விடப்பட்டேன்
 பிறந்த வன்றே தகுபதியும்
போதி யென்று னெனில்விதியின்
 புதுமை யிவ்வா றுயிற்றென்
றேத மருவுந் துன்பத்தோ
 டிருகண் மாறி நிலம்நனைப்பத்
தீதின் மடந்தை மகவினெடு
 திரும்பி னுளாற் றிரும்பளவில்; (67)

வேந்த! விவளுன் பாரியிவன்
 றனையன் இவள்சொன் மெய்மையெனச்
சார்ந்த வவளுடை பதிவிரத
 தகவும் 'பரதன்' உதித்ததுவும்
வாய்ந்த 'ககன வாணி'சபை
 மகிழ வுரைத்த ததுகேட்டுப்
போந்தெண் களிறு தாங்குபெரும்
 புவனந் தாங்கு புயன்சொல்லும். (68)

மான முனிவன் 'கண்ணுவன'ச்
 சிரமந் தன்னின் மருவியதை
நானு மிவளு மறிந்ததலால்
 நாடி யொருவர் அறியார்கள்
ஆன செயலா லபவாதம்
 ஆமென் றஞ்சி யிவையுரைத்தேன்
வான மொழிநின் றுரைத்தமையான்
 மதித்தெல் லோரு மறிந்தீரோ! (69)

என்று மகனை யணைத்துமுகந்
திளங்கோ வாக்கிச் சகுந்தலைக்கும்
நன்றி சிறந்த மொழிகூறி
நவையிற் போக மனுபவித்த
பின்றை மகனும் 'பரதனு'க்குப்
பிறங்கு மகுடஞ் சூட்டிநலந்
துன்று தவஞ்செய் திடவனத்திற்
சென்றான் இனிய 'துட்டியந்தன்'. (70)

பரத னுக்குப் பௌமனவன்
பிறந்தா னவன்றன் சுகோத்திரனை
யரசர் மகிழப் பெற்றனன்மற்
றவனோ ரத்தி தனைப்பெற்றான்
பெருமை யத்தி விருஞ்சனனைப்
பெற்றான் அவன்பால் அசமீடன்
மருவி யுதித்தான் அவனிடத்து
வந்தான் இனிய சமுவர்னன். (71)

அவனோர் குருவை பெற்றனன்மற்
றவன்பெற் றனல் விடூரதனை
தவமா ரவனோ றனயனையே
தந்தான் அனையன் றன்னிடத்தே
நவமா விய'ப ரீசித்தும்'
பிறந்தான் அந்த நரபதிபால்
அவைசூழ் வீம சேனனெனும்
அரசன் பிறந்தான் அவனிடத்தே. (72)

இலகு வீர பரிச்சிரவா
வெனும்பே ருடைய பிரதீபன்
றலைமை யாகப் பிறந்தனனற்
றலைவ னவன்பாற் சந்தனுவாங்
கொலைகொள் வேலான் பிறந்தவனி
முழுது மொருதன் கோலோச்சி
யலகில் புகழ்பெற் றனனென்றா
னருட்சேர் வைசம் பாயனனே. (73)

துஷ்யந்தன் சருக்கம் முற்றும்
ஆகத் திருவிருத்தம் 449.

10. சந்தனுச் சருக்கம்.

மாதவர் பணிதரு வைசம் பாயனன்
வேதியன் றனைச்சன மேச யன்றெழு
தீதகல் 'சந்தனு'ச் செயலெ லாம்விரித்
தோதுக வெனமுனி யோதன் மேயினன். (1)

* அந்த்ர ளங்கள்சே ரமுத வெண்டிரைச்
சிந்துவின் மிசைவரு திங்க ளாமெனச்
'சந்தனு' வெனும்பெயர்த் தாம வேலினன்
இந்தமா நிலமிசை யிலங்கி னனரோ. (2)

* வேனிலான் இவனென விளங்குங் காலையிற்
கானக வேட்டைபோ யிளைத்துக் காவலன்
நானமென் குளிர்புன லாசை யான்மணித்
தூநிறை கங்கையின் சூழ லெய்தினன். (3)

* மருவருங் குழல்விழி வதனம் வார்குழை
யிருதனந் தோள்கழுத் திதழொ டின்னகை
புருவமென் புறவடி பொலியப் பாவையர்
உருவுகொண் டனள்தன துடைமை தோன்றவே. (4)

* கங்கையின் வெள்ளமே கருத்து மாறிய
மங்கைதன் பேரொலி வனப்பின் வெள்ளமே
தங்கிய சோகமுந் தாக முங்கெடப்
பங்கய விழியினற் பருகி னனரோ. (5)

* வையக மடந்தைகொல் வரைம டந்தைகொல்!
செய்யபங் கயமலர்த் திரும டந்தைகொல்!
துய்யவின் கலைவிதச் சொன்ம டந்தைகொல்!
ஐயமுற் றனன்இவ ளார்கொ லென்னவே. (6)

* கண்ணிமைத் திருநிலங் காலுந் தோய்தலாற்
பெண்ணிவள் மானிடப் பிறப்பி னளென
வெண்ணிமுற் றவளருகெய்தி யான்செய்த
புண்ணியம் நீ!யெனப் புகழ்ந்து போற்றினன். (7)

---

* இக்குறியிட்ட பாடல்கள், சிற்சில பாடபேதங்களுடன் **வில்லிபாரதம் குருகுலச் சருக்கத்துட்** காணப்படுகின்றன.

* போற்றிய குரிசின்மெய் புளக மெய்தவே
யேற்றிய விழியினள் இளகு நெஞ்சினள்
சாற்றிய மலாயன் சாப மிவ்வழி
தோற்றிய தெனவுறு துயரம் நீங்கினாள். (8)

பொங்கிய மதர்விழிப் புரியு மாதாந்
தங்கிய முகின்முலைத் தடமும் நோக்கியே
யிங்கித முறைமைநன் றென்று வேந்தனும்
அங்கித முடன்அவட் கன்பு கூறவே. (9)

* கன்னியே யாமெனிற் கடிகொள் பான்மையை
யென்னின்மற் றுயர்ந்தவர் இல்லை மண்ணின்மேல்
உன்னிலை யுரையென வுசாவி னானிகன்
மின்னலை வடிகொள்வேல் வேந்தர் வேந்தனே. (10)

* நாணினள் ஒதுங்கினள் நதிம டந்தையும்
பூணிறை முகமுலை பொருந்த நோக்கினள்
சேணிறை தனதுமெய் தேசு போனகை
வாணில வெழச்சில வாய்மை கூறினாள். (11)

* இரிந்துமெய் நடுங்கிட யாது யாதுநான்
புரிந்தன பொறுத்தியே லணைவ னுன்புயம்
பரிந்தெனை மறுத்தியேற் பரிவோ டன்றுனைப்
பிரிந்தகன் றிடுவனிப் பிறப்பு மாற்றியே. (12)

மெய்தரு விதியினேன் விரத மற்றிவை
யெய்தரி தொருவரா லெய்த வல்லையேற்
கைதரு கெனப்பெருங் காத லாளனும்
உய்தரி தெனவிசைந் துடன்ப டுத்தினான். (13)

* எனதுயிர் அரசுவாழ் வென்ப யாவையும்
நினதுநி னேவலி னிற்பன் யானென
வனிதையை மருட்டினான் மன்ற லெண்ணியே
தனதனு நிகரிலாத் தலைம கீபனே. (14)

* அருமறை முறையினால் அங்கி சான்றெனத்
திருமணம் புரிந்துளந் திகழ வைகினார்
இரதியு மதனனு மல்ல தில்லைமற்
றொருவரு முவமையென் றுலகங் கூறவே. (15)

* மருவுறச் சில்பகன் மணந்து மான்விழி
கருவுயிர்த் தனளெனக் களிகொள் காலையிற்
பருவமுற் றன்புடன் பயந்த மைந்தனைப்
பொருபுனல் புதைத்தனள் புவனங் காணவே. (16)

* கண்டுளம் வெருவிமுன் கதித்த வாசகங்
கொண்டுரை யெடுத்திலன் கொண்ட காதலான்
ஒண்டொடி யுடன்மணந் துருகி வைகினன்
பண்டையி னெழுமடிப் பரிவு கூறவே. (17)

பின்னரு மறுவரைப் பெற்ற தாயமின்
முன்னரின் மும்மடி முரண்டு சீறவே
மன்னவன் அவற்றிலும் வாய்தி றந்திலன்
அன்னசு ரர்ச்சன மெலாம்நடு நடுங்கவே. (18)

* வழுவறு குருகுல மைந்தன் மைந்தரோர்
எழுவரை முருக்கினள் ஈன்ற தாயெனப்
பழுதறு மகப்பல பயந்த மங்கையர்
அழுதகண் ணெடும்புன லாறு பாயவே. (19)

* கங்கையென் றுலகெலாங் கைதொ ழத்தகு
மங்கையங் கனந்தரம் வயிறு வாய்த்துழி
வெங்கயங் கடகரி வேந்தன் மாமனப்
பங்கயந் துறந்தது பழைய வின்பமே. (20)

* மதலையைப் பயந்தனள் மடந்தை யென்றலுங்
கதுமெனச் சென்றுதாய் கைப்ப டாவகை
யிதமுறப் பரிவுடன் எடுத்து மற்றிவள்
பதயுகத் தாமரை பணிந்து பேசினன். (21)

* நிறுத்துக மாபினை நிலைபெ றும்படி
வெறுத்தனை முனியினும் வேண்டு மாலினி
மறுத்தனன் யானென மனஞ்செ யாதினிப்
பொறுத்தருள் புரிக! விப் புதல்வன் றன்னையே. (22)

* என்றுபற் பலமொழி யிவனி யம்பவே
நன்றுநன் றவனுமே நவின்ற வாசகம்
இன்றுநன் றிரங்கினை யெழுவர் மைந்தரைக்
கொன்றவன் றென்செய்தாய் கொடியை யென்னவே. (23)

* அரசனு முணர்ந்துநீ யார்கொல் பாலரைத்
திரைசெறி புனலிடைச் செற்ற தென்கொலாம்
உரைசெய வேண்டுமென் றுரைப்ப வஞ்சியும்
வரிசையி னுணர்ந்ததன் வரவு கூறினள். (24)

சுரர்களோ டேகுபு சுகத்தி ருந்ததில்
முரணக விறைவ!கேள்! முற்பி றப்பினிற்
றெருள்புணர் எண்வகை திக்கு பாலரில்
'வருணன்'நீ! 'விதிசபை' வளமை காணிய, (25)

* வான்முக மதியமும் புதிய மாலையும்
கான்முக விதழியுங் கமழுங் 'கங்கையாள்'
தேன்முகம் பொழிதரு செய்ய தாமரை
நான்முகன் பேரவை நண்ணி னளரோ. (26)

* இருங்கலை யிமையவர் எதிரி றைஞ்சுமென்
மருங்கலை யலையினை மறிக்கு மாறுபோல்
அருங்கலை யயலுற வதிர்ந்து வீசினன்
பொருங்கலை யெனுமிகற் புரவி வீரனே. (27)

* திருத்தகு மவயவந் திகழ்ந்து தோன்றவே
கருத்துட னவைக்கணோர் கண்பு தைக்கவு
மருத்தினை மன்னுற மகிழ்ந்து காதல்கூர்
உருத்தகு மவயவம் உவந்து நோக்கினன். (28)

* நோக்கிய 'வருணனை' நுவனு நான்மறை
யாக்கிய முனியுருத் தழன்று பார்மகள்
பாக்கிய மென்னவுற் பவிக்க நீயெனத்
தாக்கிய வுருமெனச் சபித்த காலையே; (29)

* கோனிடம் நினைவொடு குறுகி நீயுநன்
மானிட மடந்தையாய் மணந்து மீளென
வானிடை நதியையும் வழுவி னால்அவள்
தானிட ருறும்வகை தந்தை யேவினன். (30)

* பாரினும் நமக்கொரு பதமுண் டென்றவள்
ஈரமுற் றிழிதரு மெல்லை வானகத்
தோரிடை யுடன்விழு முறைமை போன்மிக
வாரொளி மழுங்கினர் வசுக்க டோன்றினர். (31)

* என்னையிங் கிழிந்தவா றெங்கண் மாநதி
யன்னையென் றவளடி யவர்வ ணங்கலுந்
தன்னையக் தணன்இடு சாபங் கூறினுள்
பின்னையங் கவருந்தம் பெற்றி பேசினர். (32)

* உற்றுறை யெங்களி லொருவன் றன்மனைப்
பொற்றொடிக் கழிந்தவன் புன்மை வாய்மையாற்
சற்றுமெய் யுணர்வறத் தகாதொன் றெண்ணினன்
மற்றெழு வரும்அவன் வசத்த ராயினேம். (33)

* தூநகை மொழிப்படி சோர ராகியே
வானமர் வணங்குதாள் 'வசிட்டன்' வாழ்மனைத்
தேனுவை யிரவினிற் சென்று கைக்கொளா
மீனெறி கரந்தென மீள வேகினேம். (34)

* பசுக்கவர்ந் தனரெனப் பயினு மாதவ
முசுக்குல மனையமெய் முனிவர் கூறலுஞ்
சிசுக்கிளர் அறிவிலாச் சிந்தை செய்தவர்
வசுக்களென் 'றருந்ததி' மகிழ்நன் எண்ணியே; (35)

* உம்பத மிழந்துநீ ருததி மண்ணுளோர்
தம்பதம் பெறுகெனச் சாபங் கூறலும்
எம்பதம் பெறுவதென் றினியெ னுவவன்
செம்பத மெமதுபூஞ் சென்னி யேந்தினேம். (36)

* அன்புடை முனிமுனி வாறி மானிடப்
புன்பிறப் பேழ்வரும் புரிந்து மீளுதிர்
மின்புரை தெரிவைசொல் விளைத்த நீயவன்
இன்பமற் றனேகநா ளிருத்தி! யென்னவே. (37)

* விண்வருஞ் செல்வமும் விழைவும் மேன்மையும்
எண்வரு மிழந்தனம் என்செய் வோமென
மண்வரு தையலை வணங்கத் தையலும்
பண்வரு மொழிசில பகர்ந்து தேற்றினள். (38)

* வலத்துயர் தடம்புய 'வருண னுங்'குரு'
குலத்தினில் அயன்வரங் கொண்டு தோன்றுமால்
நலத்துடன் அவன்மனை நண்ணு மெல்லையில்
நிலத்திடை யென்வயின் நீருந் தோன்றுவீர்! (39)

* அஞ்சலீர்; உம்மைநான் அவனி தோயுமுன்
நெஞ்சம்விட் டிடுவழி விறைவன் றன்னையும்
நெஞ்சுறத் தந்தைபால் நிறுத்தி நானுமவ்
வஞ்சகப் பிறப்பினை மாற்றுவேன் என்றாள். (40)

* நாலிரு வசுக்களும் நதிம டந்தைசொற்
பாலிரு செவிப்படப் படாத நற்றவஞ்
சாலிரு நிலத்திழி தாயை யன்புடன்
காலிரு கரத்தினாற் கசிந்து போற்றினர். (41)

* சதையமீன் கடவுளுஞ் 'சசி'கு லத்துநல்
விதையென மேதினி மீது தோன்றினுள்
துதையணி செறிகுழல் தோகை யாயினுள்
இதையமுற் றுயர்நதி யென்னு மின்னுமே. (42)

* தவமுறு குடதிசைத் தலைவன் றாமாம்
அவள்வயிற் றுதித்தனர் அந்த வெண்மரும்
உவமையிற் பெருகநீ யுணர்ந்து கொள்கென
இவடிருக் கணவனும் இனைய கூறினன். (43)

அறப்பய னென்னுமா றறிவி லாவெமைப்
பிறப்புணர்த் தினைமகப் பேறு செய்தநீ!
இறப்பவ ரெழுவரோ டேக லாவுயிர்ச்
சிறப்புடை யினையவன் செயலெ லாம்சொலாய்! (44)

* முக்குலத் தரசினு முதன்மை யானுயர்
இக்குலத் திவனலா வில்லை மாமகர்
அக்குலத் தவமுனி யருளி னுலிவன்
மெய்க்குலத் தந்தையாம் விழைவு மில்லென்றாள். (45)

* மன்னவர் தொழுகழன் மைந்தர் மைந்தனே
டின்னமு மொருவனை யினித ளித்துநாம்
பன்னக நெடுமுடி பார்க ளிக்கவே
பொன்னக ரிருவரும் போது மென்னவே. (46)

* போயிருந் தென்பயன் போகம் பல்வகை
யாயிருந் தனவெலா மருந்தி யின்னமும்
மாயிருந் தாணியில் மன்னு சிற்பகல்
நீயிருந் தாரிய! நிறுத்தி மீளுவாய்! (47)

* இப்புதல் வனுமினி யென்றோ டெய்தியே
மெய்ப்படு காளையாம் பதத்து மீளநின்
கைப்படுத் துவலெனக் கணவனைத் தழீ
யப்பெரும் புதல்வனோ டவளு மேகினாள். (48)

வேறு

* அன்றுதொட் டிவனும் அகன்றபூங் கொடியை
யழகுற வெழுதிமுன் வைத்தும்
ஒன்றுபட் டுவமைப் பொருள்களாற் கண்டும்
உரைத்தவை யெடுத்தெடுத் துரைத்து
மன்றவிற் றலைநாள் விழைவுடன் மணந்த
மடந்தையர் வதனமு நோக்கான்
என்றினிக் கிடைப்ப தென்றுளம் வருந்தி
யெண்ணிறு ளெல்லையாண் டிருந்தான். (49)

* பின்னொரு தினத்தில் அமைச்சரும் பிறரும்
பெரும்படைத் தலைவருந் தேற்ற
முன்னொரு தினத்தின் வனத்தின்மா மிருக
முன்னியே முயன்றுபோய் முற்றி
மின்னொரு வடிவங் கொண்டெனச் சிறந்து
மெல்லியன் மீண்டுறை மறையும்
தன்னொரு மதலை யாக்கமுங் கருதிச்
சானவித் தடங்கரை யடைந்தான். (50)

* பண்டுதா னவளை யெதிர்ப்படுங் கனகப்
பைங்கொடிப் பந்தர்வா ணிழலும்
வண்டறு மலர்ப்பூஞ் சோலையுந் தடமும்
மருங்கசை மலையமா ருதமும்
புண்டரீ கமுஞ்செங் காவியுங் கமழும்
புளினமும் புளினமேய் துறையுங்
கண்டுகா ரிகையை யிம்மையி லின்னங்
காண்குமோ! வெனமனங் கசிந்தான். (51)

* பிரிந்தநா ளெண்ணிப் 'பகீரதி'ப் பெருக்கைப்
பேதுறுங் குறிப்பினன் நோக்கிக்
கரிந்தபா தவம்போ னின்றவப் பொழுதிற்
காலபோர்க் குனித்துக்கார் முகமுங்

தெரிந்துமுன் மெலிந்தோன் எடுத்தசா யகமுஞ்
சிலம்பெனத் திரண்டதோ ளிணையும்
விரிந்தநூன் மார்பு மாகிமுன் நடந்தான்
விழிகளித் திடவொரு வீரன். (52)

* வியந்திட வருமக் குரிசிலே யிவனே
விடையவன் குமரனென் றயிர்க்கும்
வயந்தனி லுலவு மதன்கொலோ வென்னும்
வாசவன் மதலையோ வென்னும்
உயர்ந்தவ ரிவனின் வன்மையா லில்லை
யொருவரு முலகின்மே லென்னும்
பயந்ததன் வடிவப் படியெனத் திகழும்
பான்மையு நினைந்திலன் பயந்தோன். (53)

* தந்தையென் றிவனை யுணர்கலா மதியாற்
சராசனந் தழுவுறு மவனை
மைந்தனு மொருபேர் மோகனக் கணையான்
மறையுடன் மார்புற வெழுதி
இந்திர தனுவோ டிந்திரன் எழிலி
யிடைமறைந் தனனெனப் புடையே
சிந்திய திவலைச் சிந்துவின் மறைந்தான்
அரசனு மகிதலஞ் சேர்ந்தான். (54)

* காதல னயர்வுந் திருமகன் புன்விற்
கரந்ததுங் கண்டுள முருகி
மேதகு வடிவு கொண்டுமற் றந்த
வெஞ்சிலை விரதனுந் தானும்
ஓதவெண் டிரையின் மதியுட னுதித்த
வொண்மலர்க் கொடியென வோடித்
தூதுளங் கனிவாய் மலர்ந்தனள் அழைத்துச்
சூடகச் செங்கையா லணைத்தாள். (55)

* வாடிய தருவின் மழைபொழி வதுபோல்
மடவரல் கருணைநீர் வழியக்
கூடிய வுணர்வோ டெழுந்தகா வலனைக்
கொங்கைமார் பகமுற வணைத்து

நாடிய கருமம் வாய்த்தமை தென் றுவகை
நலம்பெறத் தந்தையங் கழற்காற்
சூடிய மகவைக் கைகொடுத் திவளுந்
தோன்றலோ டிவையிவை சொன்னாள். (56)

* வேந்த!கே ளிவன்நின் மதலையே தேவ
விரதன்என் றிவன்பெயர் வல்லோர்
ஆய்ந்தநூல் வெள்ளங் கடந்தனன் கரைகண்
'டருந்ததி பதி'திரு வருளாற்
பூந்துழாய் மாலைப் போர்'மழுப் படையோன்'
பொன்னடி பொலிவுற வணங்கி
யேந்துநீள் சிலையும் பலகலை மறையும்
ஏனைய படைகளும் பயின்றான். (57)

* மகப்பெறு மவரில் ஒருவரும் பெறாத
மகிழ்ச்சியும் வாழ்வுமெய் வலியும்
மிகப்பெறு தவம்நீ புரிந்தனை நின்னை
வேறினி வெல்லவல் லவரார்!
உகப்பெறு மிவனோ டவனியா ளுகவென்
றோரடிக் கோரடி பிரிந்து
தகப்பெறு மயிலுந் தலைவன்மே லுள்ளந்
தகைவுறத் தடம்புனற் புகுந்தாள். (58)

* மனைவியைக் கண்டு மீளவும் பிரிந்த
வருத்தமெய் திருத்தகு கேள்வித்
தனையனைக் கண்ட மகிழ்ச்சியி னருக்கன்
தன்னெதி ரிருளெனத் தணப்ப
நினைவினிற் சிறந்த தேர்மிசைப் புதனும்
நிறைகலை மதியுமே நிகர்ப்பப்
புனைமணிக் கழலா னவனொடுந் தனது
புரமெதிர் கைதொழப் புகுந்தான். (59)

* தானுமம் மகனுந் தரியலர் வணங்கத்
தங்குநன் னாளில்அங் கொருநாட்
டேனுறு தொடைய விளவர சனைத்தன்
றிகழரி யாசனத் திருத்திக்

காறு விலங்கி னுயிர்கவர் நசையாற்
காற்றெனக் கூற்றென நடந்து
பானுவின் மகளாங் 'களிந்தகன் னிகை'யின்
பாரமெய் தினன்விறற் படையோன். (60)

*பாசறை முழுது மொருபெருங் கடவுட்
பரிமள மெல்லெனப் பரப்ப
யோசனை யளவு கரையிரு மருங்கும்
உயிர்க்குமெல் லுயிர்க்கெதி ரோடித்
தாசர்தங் குலத்துக் கதிபதி பயந்த
தையலைத் தரணிபர்க் கெல்லாம்
ஈசனு முருகிக் கண்டுகண் களியர்
விலங்கிழை யார்கொல்நீ? யென்றான். (61)

*நிருபன துரைகேட் டஞ்சின ளொடுங்கி
நின்றுகை நினைவுறக் குவியா
விருதுறை நதியில் வருநரை நாவாய்
ஏற்றுவல் எந்தையே வலினென்
றுரைசெயு மளவில் வேட்கையா னுள்ள
முருகிமெய் மெலிந்தொளி கருகி
யரிவையை யளித்தோன் பக்கம தடைந்தான்
அவனும்அவ் தடிமலர் பணிந்தான். (62)

*பாகனை யரசன் குறிப்பினு லேவப்
பாகனும் பாதவர் பதியை
யோகையோ டிருத்தி நின்னுழை வதுவை
யுலகுடை நாயகன் நயந்தான்
தோகைசெய் தவமோ! நின்பெருந் தவமோ!
தொல்குலத் தோர்புரி தவமோ!
வாகவிவ் வரைவென் றுரைத்தனன் அவனும்
அவனுட னுருமா றுரைத்தான். (63)

*பூருவின் மரபிற் பிறந்தகோ மகன்என்
புன்குலத் தவன்குலம் பொருந்தன்
மேருவு மணுவு நிறுக்குமா றொக்கும்
மேவினி பிவையுகன் றென்கொல்!

பாளுவ கையினு லாளுதற் கிருந்தான்
பகீரதி மகன்இவள் பயந்த
சீருடை மகன்மற் றென்செய்வான் இசைமின்
செய்கமன் றிருவுளங் குறித்தே. (64)

*என்னமு னிறைஞ்சி யிவன்மொழி கொடுஞ்சொல்
இறையவன் கேட்டனு மிரண்டு
கன்னமு மழற்கோல் வைத்ததொ த்துள்ளங்
கருகிவே றொன்றையுங் கழறுன்
முன்னமு மதத்தான் முனியிடுஞ் சாபம்
முடிந்ததென் றுகுல முற்றி
அன்னமு மயிலும் பயிலுநீள் வீதி
'யத்தின புரி'யைமீண் டடைந்தான். (65)

*கங்கையா ளிடத்தி லாதர மெலிந்த
காலேயிற் களிந்தவெற் பளித்த
மங்கையா மென்ன நின்றபூங் கொடிமேல்
வைத்தபே ராதர மெலியப்
பங்கயா னனத்தோன் முறைமுறை குறையும்
பான்மதி யெனவழ கழிந்த
சங்கையான் மைந்தன் வினவலும் நிகழ்ந்த
தன்மையைச் 'சாரதி' யுரைத்தான். (66)

*கேட்டவக் கணத்திற் கடற்புறத் தாசைக்
கேண்மையோ டடைந்'தின வசசும்'
பாட்டன்நீ! யெனக்குப் பெற்றதாய் தானும்
பகீரதி யன்றுநின் மகளே
காட்டமின் றுனக்கியா ததுநிலே யிந்த
ஞாலமும் எம்பியர் ஞாலம்
நீட்டமற் றின்றே திருமணம் நேர்வாய்!
நீதிகூர் நிருபனுக் கென்றுன். (67)

*விரதமுற் றியவா றணவருங் கேண்மின்!
மெய்யுயிர் வீடுமன் றளவுஞ்
சரதமுற் றியமெய்த் தாதுவும் மூலத்
தழலுடன் மீதெழுந் தகையேன்

நிரதமுற் றியசொல் "மகப்பெரு தவருக்
கில்லை" யென் றியம்புநற் கதியுஞ்
சுரதமுற் றியவென் றந்தைபே ரருளாற்
பெறுவலென் றின்னவுஞ் சொன்னான். (68)

*இவன்மொழி நயந்து கேட்டுழி யவையில்
இருந்ததொன் மனிதரே யன்றித்
தவமுனி வரருந் தேவருங் ககனந்
தங்குமா மங்கையர் பலரும்
உவமையோ டிவனுக் கேற்றபே ருரைசெய்
தொளிர்கெழும் பூமழை பொழிந்தார்
அவனியி னிருபர் வெருவருந் திறலான்
அரியசொற் பொருணிலை யறிந்தே. (69)

*மெய்ம்மகிழ்க் கடவுட் பூமழை யுடனே
'வீடுமன்' எனும்பெய ரெய்திக்
கைம்மகிழ் வரிவிற் றுசபூ பதியுங்
கன்னிகை காளியுந் தானும்
மொய்ம்மணங் கமழு மன்றல்வே ளிலின்வாய்
முனிவருங் கிளைஞருஞ் சூழச்
செய்ம்மகிழ் பழனக் குருநில முடையான்
திருமனை விரைவுடன் சேர்ந்தான். (70)

*பரிமள வடிவப் பாவையை நிருபன்
பாலினன் றொருபுடை நிறுத்தி
யிருபதந் தொழுது நின்றமா மகனை
யிதயமோ டுறுகுறத் தழுவித்
தருமணங் கமழுஞ் சென்னிமேல் வதனந்
தாழ்ந்துமோந் துருகிமுன் றந்தைக்
குரியத னிளமை கொடுத்தகோ மகனும்
உனக்கெதி ரல்லனென் றுரைத்தான். (71)

*தந்தையர்க் குதவு முதவியி லெனக்குச்
சதமடங் குதவினை! யுனக்கு
மைந்தருக் குதவு முதவியிற் சிறிது
மாதவஞ் செய்திலேன் உதவச்

சிந்தையிற் றுறக்கம் வேண்டுமென் றெண்ணிச்
செல்லுமென் றல்லது னுயிர்மேல்
முந்துறக் 'காலன்' வரப்பெறு னெனவே
முடிவிலா தொருவாம் மொழிந்தான். (72)

*அம்புவி யரசன் மாமனும் மாசே
றவையினின் றவயவத் தழகால்
உம்பரும் வியக்குங் கிளியைமுன் னிறுத்தி
யொடுங்கினன் வாய்புதைத் துரைத்தான்
எம்பெரு மகனீ! கேட்டருள் உனக்கே
யினைக்தமெய்த் தவம்புரி யிவளை
வம்பவிழ் மலர்மா தென்பதே யன்றி
வலைஞர்மா மகளெனக் கருதேல். (73)

*வாசவ னளித்த விமானமீ தொருவன்
'வசு'வெனுஞ் 'சேதிமா மரபோன்'
கேசவ னெனப்போம் விசும்பிடை மனையாள்
'கிரிகையை' நினைந்துடல் கெழுமி
நேசமோ டிதய முருகுமக் கணத்தின்
நினைவற விழுந்த 'வீ ரிய'மெய்த்
'தேசவ னளித்த நதி'யிடைத் தாளத்
திரளெனச் சிந்திய தொருபால். (74)

*ஒருமுனி முனிவா லரமக ளொருத்தி
'மீன'மா யுற்பவித் துழல்வாள்
இரையென வதனை விழுங்குமுன் கருக்கொண்
டன்முதிர் காலையி னதனைப்
பரதவர் வலையின் அகப்படுத் தரிய
பாலக னொருவனு மிவளும்
இருவரு மந்த மீன்வயிற் றிருந்தார்
யமுனையும் 'யமனும்'நே ரெனவே. (75)

*மானவர் பதியாம் 'வசுவினுக் கிவரை
மகிழ்வுறக் காட்டலு மிவனை
மீனவன் எனப்பேர் கொடுத்தனன் கொண்டு
மெல்லியலிவளைமீண் டளித்தான்

யானுமின் றளவும் என்மக ளென்னு
மியற்கையா லினிமையின் வளர்த்தேன்
கானமென் குயில்போல் வளர்ந்துமீ ளவுந்தன்
கவின்குலம் புகுந்தன ளென்றே. (76)

வேறு

* வென்றி யஞ்சன வேழத் தாசனும்
மன்ற வைக்கண் வளமொழி கேட்டுவந்
தின்று நற்றினம் என்றிளந் தோகையை
மன்ற லெய்தினன் மாநிலம் வாழ்த்தவே. (77)

* காளி வந்து கலந்தனள் கங்கைவேய்த்
தோளி யம்புயந் தோய்ந்தனன் முன்னமே
வாளி வெம்பரி மானெடுந் தேருடை
மீளி தானும் விடையவ னுதலால். (78)

* கங்கை யின்கரைக் கண்ணுறு காரிகை
கொங்கை யின்பங் குலைந்தபின் மற்றவள்
எங்கை யென்ன 'யமுனையின் 'பால்வரு
மங்கை யின்பம் மகிழ்ந்தனன் மன்னனே. (79)

* வீடு மன்கழல் வேந்தர் வணங்கிட
நாடு மன்னெறி நாளு நடந்திட
நீடு மன்னனு நேரிழை மென்மலர்த்
தோடு மன்னு சுரும்பென வீழவே. (80)

* அன்ன நாளில் அருக்கனுந் திங்களும்
என்ன மைந்தர் இருவரை யீன்றனண்
மன்ன னுவி வடிவுகொண் டென்னமெய்க்
கன்ன பூரங் கலந்தமைக் கண்ணியே. (81)

* சித்தி ராங்கதன் சித்திர வீரனென்
றித்த ராபதி மைந்தர் இருவருந்
தத்த மன்பொடுந் தம்முன் பதந்தழீஇ
யொத்த கல்விய ராயின ருண்மையால். (82)

* மதிநெ டுங்குல மன்னனை நண்பினால்
விதியி னந்தரம் விண்ணுல கேத்தினார்
நதியின் மைந்தனும் நம்புவிக் கெம்பியே
யதிபன் என்றறி யாசனத் தேற்றினான். (83)

* எங்க ணுமம் இவன்கவர்ந் தானெனக்
கங்குல் வந்தொரு கந்திரு வாதிபன்
தொங்கன் மாமுடி சூடிய வேந்தனை
யங்கை யான்மலைந் தாருயிர் கொள்ளவே. (84)

* எம்மு னின்று மிறந்தன னென்றுதாய்
விம்மு நெஞ்சின் மிகுதுனி யாறவே
தெம்மு னென்றனன் சித்திர வீரனைத்
தம்முன் மீளத் தனிமுடி சூட்டினான். (85)

* சிற்பொ ருட்பா மான செகக்கதிர்
உற்ப விக்கு முபாயமீ தென்னவே
விற்ப டைத்திறல் வீடுமன் வாய்மையாற்
பொற்பு றப்புவி பூபதி யாளுநாள். (86)

* காசி மன்னவன் கன்னியர் மூவருந்
தேசின மிக்கவர் சேர்வரென் றுள்விட
மாசி றெல்குல மன்னவர் ஈண்டினார்
மூசி வண்டின மொய்ப்பது போலவே. (87)

* வரித்த மன்னர் மறங்கெட வன்பினாற்
றிருத்து மெம்பியைச் சேர்த்துவல் யானெனத்
தரித்த வில்லொடுந் தன்னிள வேங்தொடும்
விரித்த வெண்குடை 'வீடுமன்' ஏகினான். (88)

* அரவ மாகதி யன்னையுந் தன்மகன்
வரவ றிந்து வழியினைப் பாற்றினாள்
பாவி வந்து பனிமலர்த் தென்றலை
விரவு நுண்டுளி மீதெறி யூதையால். (89)

* கஞ்ச வாவி கலைமதி கண்டென
நெஞ்ச ழிந்து நிருபர் குழாந்தொழ
வெஞ்ச ராசன வீரனுந் தம்பியு
மஞ்ச மேவி மணித்தவி செய்தினார். (90)

* குருத்த லந்தணிற் கூறிய வெஞ்சின
மொருத்த ரன்றறி வாருல கோர்பலர்
விருத்தன் வந்தனன் மேலினி யேதிவன்
கருத்தெ ணுமனங் காளையர் கன்றினர். (91)

* இருந்த மன்னர் இவரிவர் என்றுளம்
பொருந்த மற்றவர் பொற்புடைத் தேசெலாந்
திருந்த நின்ற செவிலியர் கூறவே
முருந்த வாணகை மூவருந் தோன்றினர். (92)

* கையின் மாலை யிவர்க்கெனக் கன்னியர்
வெய்ய நெஞ்சொடு மின்னென வந்தவர்
வைய மன்னன் வயநிலை நோக்கியே
மைய முற்றனர் அன்புறு காதலார். (93)

* ஏனை வேந்தர் எதிரிவ ரைப்பெருந்
தானை சூழ்மணிச் சந்தனத் தேற்றியே
சோனை மாமதஞ் சோருங் கடதட
யானை யன்ன விளவலோ டேகினன். (94)

* முறையி னுலற மொய்ம்பிற் கவர்ந்ததே
குறையி னுலெனக் கோகுலங் கூடிவந்
திறைவ னேடெதி ரேற்றவில் வீரரைப்
பிறைமு கக்கணை யால்பிளந் தோட்டினன். (95)

* முந்து றப்பெரு மூவரோ டாடமர்
விந்தை தன்னையும் வேந்தர் கொடுத்தலாற்
சந்த னுப்பெர்த் தார்முடி மன்னவன்
மைந்தர் தங்கள் வளநக ரெய்தினர். (96)

* சமரின் முந்திய சாலுவன் மேன்மன
மமர நின்ற தழிந்துழி யம்பையை
யெமர்க ளுக்கிஃ தியற்கையன் றென்னவே
யமர ழிந்த வவனுழைப் போக்கினன். (97)

* அம்பி கைக்குமம் பாலிகைக் கும்பதி
யெம்பி யேயெழி லானென் றிசைவுறத்
தம்பி தன்னைத் தனஞ்செயன் றன்னெதிர்
வம்பி னுன்மிகு மாமணஞ் சேர்த்தினன். (98)

* சென்ற வம்பையைச் சீர்மதிச் சாலுவன்
வென்று தெவ்வர் கவர்ந்தநின் மெய்தொடேன்
என்றி சைப்ப விவருமை மீளவும்
மன்றல் வேண்டினண் மன்றலங் கோதையாள். (99)

* கங்கை மைந்தன் கடிமணங் காதல்கூர்
மங்கை தன்னை மறுத்தபின் மங்கையுஞ்
செங்க ணீரெழச் சிந்தைசெந் தீயெழச்
சங்கை யோடுதன் றூதையைநண் ணினுள். (100)

வேறு

*தாதை தாளினில் விழுந்து 'சந்தனுவின்'
மைந்த னின்னலுரை தந்ததுங்
கோதையா ளுறவு கொண்டு கைதரல்
குறித்த கோமகன் மறுத்ததும்
பேதை கூறமன நொந்தி ரங்கியருண்
மிக்க வன்பினொடு பின்னையுந்
தூதை யேவிமண முற்றி சந்தனள்
விசும்பு லாவு'நதி சுதனையே. (101)

*போன தூதுவர் வணங்கி யிம்மொழி
புகன்ற போதுமொழி பொய்யுறு
'மீன கேதனனை' வென்று தன்கொடிய
விரதமே புரியும் 'வீடுமன்'
மான வேல்நிருபன் மகள்குறித் ததிரு
மன்றல் வன்பொடு மறுத்தலால்
ஆன வாதரவொ டாகுலம் பெருகும்
அம்பை தந்தைதிரு வருளினல். (102)

*வரிசை யாலுயர் அனேக மண்டல
மகிபர் சொன்னசொல் மறுப்பினும்
'பரசு ராமனது' மொழிம றுன்அவன்
திருப்ப தத்திடை பணிந்துசென்[று]
உரைசெய் தால்அவன் உரைத்த சொல்லின்வழி
யொழுகி வந்துதன துவகையால்
விரைசெய் மாலைபுனை யாது மீளவும்
மறுத்து 'வீடுமன்' விளம்புமேல்; (103)

*பின்னை யெண்ணிய பெருந்த வம்புரிதும்
ஏன்று மேதகு பிதாவையும்
அன்னை தன்னையும் வணங்கி நீடுசது
ரங்க மானமிசை யம்புயல்
பொன்னை வென்றொளிகொள் சாய லாளிரு
புறத்து மாதர்பலர் பொலிவுடன்
தன்னை வந்துதொழு மாறு சென்றுதம
தங்கி மைந்தன்வரை சாரவே. (104)

*'காசி ராசன்மக' ளென்றுவந் தனளோர்
கன்னி யென்றுகடை காவலோர்
வாச நாறுதுள வோனு டன்புகல
வருக வென்றபின் மடந்தைபோய்
ஆசி னுலுரை தொகுத்து முற்செயல்
அனைத்து மண்ணலடி தொழுதபின்
பேசி னாள்அவனும் யாமுடிக் குவமி
தென்று மேன்மையொடு பேசினான். (105)

*வரதன் வீரமழு வால நேககுல
மன்னர் வேரற மலைத்தகோன்
இரத மீதவ ளுடன்க ணப்பொழுதில்
ஏறி யேயிரு தினத்தினால்
விரத மாபரண மெனவ ணிந்ததிறல்
வீடுமன் பதியின் மேவலுஞ்
சரத மாகவெதிர் கொண்ட வன்சிர
மிவன்ப தத்தின்மிசை சாற்றினான். (106)

*தனக்கு வின்மைநிலை யிட்டகோ வையொரு
தமனியத் தவிசின் வைத்துநீ
யெனக்கு நன்மைதர வந்த நற்றவம்
இருந்த வாவென விருந்துபின்
கனக்கும் வெண்டாள வட்டமுலைப் பெரிய
கரிய கன்னியிவள் காதலால்
உனக்கு மன்றல்பெற வுரிய ளாகுமென
வுவகை யோடவ னுரைக்கவே; (107)

*இன்சொ லால்அவனி கொண்ட வெந்தைமுதல்
இன்ப மன்றல்நல மெய்தநான்
வன்சொ லால்விரத மணமு றேன்என
மனத்தி ணன்விரத மன்னினேன்
நின்சொல் யாவருமறுரெனக் கருதி
நீயு ரைப்பினும் நிகழ்ந்தவிப்
புன்சொ லானதினி மாத வத்தின்மிகு
புனித வென்செவி பொறுக்குமோ. (108)

*களம்புகுந் தவரை மீள வேகுதல்
கொடாத கார்முக விநோதகேள் !
உளம்புகுந் தினிதி ருக்குநன் கடவுள்
உன்னை யன்றியில துண்மையால்
வளம்புகுந் தவனு ராக போகமிகு
மாதர் மங்கையர் பொருட்டினல்
விளம்பு மிந்தமொழி யொழிக! வென்றனுயிர்
வேண்டு மென்னினும் வழங்குவேன். (109)

*மறுத்த வன்புகல வீரி யன்புயமொ
ராயிரந் துணிசெய் மழுவினன்
வெறுத்த னந்தர மெழுந்தி ருந்துகரை
யழியும் வேலைநிகர் வெகுளியான்
கறுத்த நெஞ்சினன் வெளுத்த மேனியன்
றவச்சி வந்தவிரு கண்ணினன்
பொறுத்த வில்லினன் விரைந்து தேர்மிசை
புகுந்த னன்கடிது போர்செய்வான். (110)

*வெருவு டன்றெழுது கங்கை மைந்தனடி
வீழ வுஞ்சின மிகுத்தலான்
உருவு டன்றனு விருக்க வேவிரதம்
வழுவி னல்நரக முறுவதிற்
குருவு டன்பொருது மடிதல் நன்றென
நினைந்து 'தால'வுயர் கொடியினன்
செருவு டன்றிடுத லுன்னி யேறின
னமைந்து நின்றவொரு தேரின்மேல். (111)

*இவ்வி ராமனு மறுத்த மன்னவனும்
ஐயி ரண்டுதின மிகல்வுறு
வெவ்வி ராவுமொழி யாமல் வன்சமர்
விளைத்த காலையடல் வீடுமன்
கைவி ராயசிலை யோடு மெய்வலி
கவர்ந்து முன்றளர்வு கண்டபோர்
அவ்வி ராமனிக ரென்னு மாறவனை
யஞ்ச நின்றெதி ரடர்க்கவே. (112)

*ஓடி மீள'மழு வாண பாணி'தன
தூர்பு குந்தன னுவந்துபல்
கோடி தோரசர் துதியெ டுக்கநதி
குமர னுந்தநகர் குறுகினான்
நாடி மாலையிட வந்த 'காசிபதி'
நல்கும் ஒல்குமிடை 'நவ்வியும்'
வாடி வாடியினி யமையு மென்றுதவ
வனம டைந்தனண் மயங்கியே. (113)

*வெம்பை யாடரவ மாய வென்றிடும்
'விகங்க ராசன்'என 'வீடுமன்'
றும்பை யாடமரின் மாய வெல்வதொரு
சூர னுகும்வலி யானென
வம்பை மோதுமுலை வம்பை வீசுகுழல்
வம்பை மன்னுமொழி வரிகொள்கூர்
அம்பை மானும்விழி யம்பை யம்பையென
வரிய மாதவ மியற்றினாள். (114)

*தாளி ரண்டிலொரு தாண்ம டக்கியொரு
தாளில் வைத்தமை யமைத்தபொற்
றோளி ரண்டினையு மீதெ டுத்துநனி
தொழுதி யக்கிதுணை யடியிலே
வாளி ரண்டனைய விழிம லர்த்திநிறை
வாவி நீரினிடை வானுளோர்
நாளி ரண்டதனொ டையி ரண்டுமொரு
நாளெ னும்படி நடத்திமேல்; (115)

*முயலி லாமதி முகத்தினு ளொருவர்
முயல ருந்தவ முயன்றபின்
புயல ருதமின லொத்த மெய்யிலொளி
புரியி 'யக்கி' தன தருளினால்
மயலி லாடனது வடிவ கற்றியிகல்
'யாக சேன'னது வயினிடைச்
செயலி லாறுமுகன் நிகரெ னத்தகு
'சிகண்டி' யாயினள் சிறக்கவே. (116)

*மணிமு டிக்குரிய நிருப னுங் கடிகொண்
மாதர் தங்களை மகிழ்ச்சியால்
அணிபெ றத்தழுவி யின்ப வேலையி
லழுந்தி நாள்பல கழிந்தபின்
பிணிக ளுக்கர செனும்பெ ரும்பிணி
பிணித்து வாழ்வினி நணித்தெனப்
பணிமு டிப்புவி யிரங்க வைகியொரு
பற்றி லாதநெறி பற்றினான். (117)

சந்தனுச் சருக்கம் முற்றும்.

ஆகத் திருவிருத்தங்கள் 566.

ஆதிபருவத் தாதி பருவம் முற்றும்.

சுபம்.

—o—

Solar Works, Madras.